# 2018 - 2020 ஆம் ஆண்டுகளுக்காக மாகாண சபைகளின் மூன்றாண்டு அறிக்கை

1987 ஆம் ஆண்டின் போது பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் சேர்க்கப்பட்ட 154 அ (1) உறுப்புரையின் மூலம் மாகாண சபைகள் தாபிக்கப்பட்டிருந்தது. மாகாண சபைகளின் எண்ணிக்கை 09 ஆகும். அதாவது மேல், வடமேல், ஊவா, சப்ரகமுவ, மத்திய, கிழக்கு, தென், வடமத்திய, வடக்கு ஆகும்.

மாகாண சபைகளில் பின்பற்றப்பட வேண்டிய பணி நடைமுறைகள், மாகாண சபை அரசின் சேவைக்குரிய விடயங்கள் மற்றும் அது தொடர்பான அல்லது அதனோடு இணைந்த விடயங்கள் தொடர்பாக ஏற்பாடுகளை வழங்குவதற்காக 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இதுவரையில் இலங்கை அரசாங்கத்திற்கு மாகாண சபைகள் தொடர்பாக 35 வருட வரலாறு உள்ளது. இந்த அறிக்கைத் திகதி வரையிலும் 09 மாகாண சபைகளின் உத்தியோகபூர்வ காலம் முடிவடைந்துள்ளமையால் அரசியலமைப்பின் 154 உ உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அந்த மாகாண சபைகள் கலைக்கப்பட்டதாக கருதப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ''சபை'' இன்றி 2018-2020 என்ற 03 ஆண்டுகளில் 1989 இன் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (தொடர்புடைய ஏற்பாடுகள்) சட்டத்தின் 2(1) (அ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒவ்வொரு மாகாண சபையினதும் ஆளுனர்களினால் மாகாண சபை நடாத்திச் செல்லப்படுகின்றது. ஒவ்வொரு மாகாண சபைகளும் நடைபெற்ற இறுதியான ''மாகாண சபை'' ஆரம்பிக்கப்பட்ட மற்றும் அதன் உத்தியோகபூர்வ காலம் முடிவடைந்த திகதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| மாகாண சபை | கடைசியாக மாகாண சபை ஆரம்பிக்கப்பட்ட திகதி | இறுதியாக மாகாண சபை முடிவடைந்த திகதி |
|---|---|---|
| மேல் | 2014.04.22 | 2019.04.21 |
| வடமேல் | 2013.10.11 | 2018.10.10 |
| ஊவா | 2014.10.09 | 2019.10.08 |
| சப்ரகமுவ | 2012.09.27 | 2017.09.26 |
| மத்திய | 2013.10.09 | 2018.10.08 |
| கிழக்கு | 2012.10.01 | 2017.09.30 |
| தென் | 2014.04.11 | 2019.04.10 |
| வடமத்திய | 2012.10.02 | 2017.10.01 |
| வடக்கு | 2013.10.25 | 2018.10.23 |

1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபை நிதியத்தை கணக்காய்வு செய்வதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கையளிக்கப்பட்டுள்ளது. அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வின் பின்னர் அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்காய்வு அறிக்கைகளில் தீர்வு காணப்படாதுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களை உள்ளடக்கி மூன்றாண்டு அறிக்கையொன்று 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு

அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் வருகின்ற அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் 2018-2020 என்ற 03 ஆண்டுகளுக்காக இந்த முதலாவது மூன்றாண்டு அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2018, 2019 மற்றும் 2020 என்ற மூன்றாண்டுகளிலும் சகல மாகாண சபைகளுக்காகவும் முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு சமர்பபிக்கப்பட்டுள்ள வருடாந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த மூன்று ஆண்டுகளில் மாகாண சபைகளில் அரசாங்கத்தின் மூலதன மற்றும் மீண்டெழும் மானியங்களை உள்ளடக்கிய மொத்த வருமானம் ரூபா 970,629 மில்லியன் ஆக இருந்ததுடன் மொத்த செலவினம் ரூபா 953,135 மில்லியன் ஆகும். அவ்வாறே 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 09 மாகாண சபைகளுக்குச் சொந்தமான மொத்த நடைமுறையல்லா சொத்துக்களின் அளவு ரூபா 247,355 மில்லியன் ஆகும். அது 03 ஆண்டுகளிலும் மாகாண சபைகளின் செலவினத்திற்காக பொதுத்திறைசேரியால் ரூபா 707,234 மில்லியன் தொகை மாகாண சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த அளவு மாகாண சபைகளின் அந்த மூன்றாண்டுகளினதும் ஒட்டுமொத்த செலவினத்தில் 74 சதவீதம் ஆகும். அது தொடர்பான விரிவான தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்படுகின்றது.

**2018 - 2020 என்ற மூன்றாண்டுகளின் மாகாண சபைகளின் நிதித் தகவல்கள்**

| ஆண்டு | மொத்த வருமானம் | மொத்த செலவினம் | திறைசேரி மானியம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறையல்லா சொத்துக்கள் |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 2018 | 306,472 | 300,291 | 203,810 | 182,836 |
| 2019 | 317,596 | 317,843 | 219,029 | 190,300 |
| 2020 | 346,561 | 335,001 | 284,395 | 247,355 |
| மொத்தம் | 970,629 | 953,135 | 707,234 | |

மூலம் - ஒன்பது மாகாண சபைகளினதும் வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

ஒவ்வொரு மாகாண சபைகளுக்குமுரிய 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டு இதுவரை தீர்வு காணப்படாத கணக்காய்வு அவதானிப்புக்களும், அவற்றுக்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை, இதுவரை எடுக்கப்பட்டுள்ள தடுப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலைமையை உள்ளடக்கிய அறிக்கை கீழே காண்பிக்கப்படுகின்றது.

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி மூன்றாண்டு நிலைபர அறிக்கை (2018,2019,2020)**

கணக்காய்வு நிறுவனத்தின் பெயர் : வடமேல் மாகாண சபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவகத்தினால் எடுக்கப்பட்ட தவிர்ப்பு செயற்பாடு | அது தொடர்பில் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| **01.** | **தலைப்பு 201 – ஆளுனர் அலுவலகம்** | | | |
| (அ) | ஆளுனர் அலுவலகத்தினால் 2019 ஜனவரி 26 ஆந் திகதி நடாத்தப்பட்ட ஆங்கில ஆசிரியர் ஆட்சேர்ப்பு பரீட்சையின் பெறுபேறுகள் வழங்கப்பட்டதன் பின்னர் ஆளுனர் அவர்களினால் முழுப் பரீட்சையும் இரத்து செய்யப்பட்டு 2019 யூன் 20 ஆந் திகதி மீண்டும் பரீட்சையை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததன் பேரில் விண்ணப்பதாரிகளினால் உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கிற்காக ரூபா 375,000 மற்றும் இந்தப் பரீட்சையில் வினாப்பத்திரங்களில் குறைபாடுகள் காரணமாக ஆளுனரால் அரச சேவைகள் ஆணைக்குழுவினை கலைத்ததன் காரணத்தினால் அதன் | இவ்வாறான செலவுகள் இடம்பெறாமல் கவனிக்கப்படல் வேண்டும். | தவிர்க்கும் செயற்பாடு எடுக்கப்படவில்லை. கௌரவ ஆளுனருக்கு 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் பிரகாரம் மற்றும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 13 ஆவது அரசியலமைப்பின் 154 உ(2) இன் பிரகாரம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அத்தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் அதற்கு CA(Writ) 297/2019 மற்றும் SCFR No. 228/2019 ஆம் இலக்க இரண்டு வழக்குகளுக்கும் முறைப்பாட்டாளர் தரப்பினரின் இணக்கப்பாட்டின் பேரில் வட மேல் மாகாணத்தின் நற்பெயருக்கு பாதிப்பு ஏற்படாமலும் நிதி | இடம்பெற்ற தவறு அவ்வாறே காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உறுப்பினர்களால் உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கிற்காக வழக்குக் கட்டணமாக ரூபா 1,508,776 ஆன கொடுப்பனவொன்று செய்வதற்கு நேர்ந்திருந்தது. வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் மீண்டும் ஆணைக்குழுவிற்கு அந்த உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன் எடுக்கப்பட்ட தவறான தீர்மானம் காரணமாக மேற்படி செலவிடப்பட்ட மொத்த ரூபா 1,883,776 ஆன செலவினம் சிக்கனமற்ற செலவினமாக இருந்தமை 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. (2020) | | நட்டமொன்றை தவிர்ப்பதற்குமாக இணக்கப்பாட்டிற்கு வந்ததாக குறிப்பிடுகின்றேன். | |
| (ஆ) | ஆளுனரின் உத்தியோகபூர்வ வாகனம் 2020 யூலை 01 ஆந் திகதி விபத்துக்கு உள்ளாகியிருந்தது. அங்கே ஈடுபட்ட கடமை சரியாக குறிப்பிடப்படவில்லை என்பது ஆரம்ப விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தும், இது தொர்பாக மாகாண நிதி விதி 54 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்தது டன், மாகாண நிதி விதி | மாகாண நிதி விதி 54 மற்றும் 60.1.2 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆரம்ப விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது டன் இடம் பெற்ற சேதத்தை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து மீள்நிரப்புவதற்கும் எஞ்சிய தொகையை சாரதியிடம் அறவிடவும் தீர்மானிக்கப்பட்டது. | திருத்தச் செலவினம் ரூபா 5,286,458 ஆக இருந்ததுடன் சேதம் தொடர்பாக ரூபா 3,865,730 ஆன தொகை காப்புறுதி மூலம் நிரப்பப்ட்டுள்ளதுட ன் எஞ்சிய தொகை ரூபா 1,420,728 தொகையை செலுத்துமாறு சாரதிக்கு அறிவிக் கப்பட்டுள்ளது |

60.1.2 படி பதிவேட்டில் ரூபா 5,286,458 ஆன மொத்த நட்டம் மற்றும் அத்தொகையில் சாரதியிடம் அறவிட தீர்மானிக்கப்பட்ட ரூபா 1,420,728 தொகை தொடர்பில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. (2020)

**02. தலைப்பு 202 – சபை செயலாளர் அலுவலகம்**

| | | | |
|---|---|---|---|
| வட மேல் மாகாண தலைமை செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் பொருட்கள் மீண்டும் அலுவலகத்திற்கு ஒப்படைக்கும் போது காணாமல்போனதாக கருதப்படும் ரூபா 45,000 பெறுமதியான 32 அங்குல வர்ண தொலைக்காட்சி இயந்திரம் தொடர்பில் இதுவரை 04 வருடங்கள் கடந்திருந்தும், நட்டத்தினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.(2020) | நட்டத்திற்குப் பொறுப்பானவர்களை இனம்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | மாகாண நிதி விதி 54இன் பிரகாரம் பரிசோதனையொன்று மேற்கொள்வதற்கும் பொலிசில் முறைப்பாடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | இதுவரை குறித்த பணத்தை அறவிட்டிருக்க வில்லை. |

**03. தலைப்பு 210 – வட மேல் மாகாண பிரதான அமைச்சு மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், பொறியியல் சேவை சட்டம் மற்றும் சமாதானம், கல்வி, உள்ளூராட்சி மற்றும் நிர்வாகம், பொருளாதார மேம்பாடு, சுற்றாடல் அலுவல்கள், நீர் வளங்கள் மற்றும் நீர் வழங்கல் மற்றும் சுற்றுலா அலுவல்கள் தொடர்பான மாகாண அமைச்சு**

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | பிரதான அமைச்சினால் 2017 ஆம் ஆண்டின் போது 1650 நுளம்பு குடம்பி தூண்டில் கொள்வனவு | செயற்திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | இச்செயற்திட்டம் ஆராய்ச்சி செயற்திட்டமாக உள்ளதுடன் இங்கு இனங்காணப்பட்ட நுளம்பு | இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டு அக்கட்டத்தின் பெறுபேறுகளின் பேரில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்வதற்காக ரூபா 825,000 தொகை செலவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட நுளம்பு பெருகுவதை குறைக்கும் விசேட பரிசோதனை செயற்திட்டம் வெற்றியளிக்காமையால் அதற்காக செலவிடப்பட்ட பணம் பயனற்ற செலவினமொன்றாக மாறியிருந்தது. (2018) | | குடம்பி தொழில்நுட்ப தவறுகளை சீராக்கி மீண்டும் செயற்படுத்துவதற்கு பொருத்தமான நிலைமையில் காணப்பட்டதா எனப் பரீட்சிக்கப்பதற்காக சுகாதார அமைச்சின் ஒத்துழைப்பு அடிப்படையில் எதிர்காலத்தில் மீண்டும் செயற்படுத்துவதகு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிறுவனத்திர் உள்ள 480 குடம்பி பிடுங்கி தொடர்பாக தீர்மானமொன்றை எடுக்கும். எதிர்பார்ப்பில் உள்ளது. |
| (ஆ) | பிரதான அமைச்சின் கீழ் 2019 நவம்பர் 18 ஆந் திகதியிலிருந்து வட மேல் மாகாண அபிவிருத்தி நிதியம் ஆளுனர் அனுமதியின் பேரில் செயற்படுத்தியிருந்தும் அதனை வர்த்தமானி மூலம் பிரசித்தப்படுத்தியிருக்கவில்லை. அந்த நிதியத்தை உறுதிப்படுத்துதல் தொடர்பில் அப்பியாச புத்தகங்கள் அச்சிடப்பட்டு வினியோகித்து விற்பனை செய்யும் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் வருமானம், செலவுகள் நிதி வங்கிக் கணக்கினூடாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஆளுனர் அனுமதித்த தொடர்பான யாப்பின் 17 | நிதியத்தின் சட்ட அங்கீகாரம் மற்றும் செயற்படுத்தும் இயலுமை தொடர்பில் மீண்டும் மீளாய்வு செய்து நிதியத்தினை ஒழுங்கு முறையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதும் இதே நிலைமையில் காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் 18 உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு நடவடிக்கை தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இந்த நிதிய கணக்கு முன் வைக்கப்பட்டிருக்கவில்லை. (2020) | | | |
| (இ) | பிரதான அமைச்சுக்குரிய வாகனமொன்று மதுரங்குளி பிரதேசத்திலுள்ள கராஜ் ஒன்றில் புதுப்பித்தலுக்காக ஒப்படைக்கப்பட்டிருந்த போது தீ வைத்து சேதப்படுத்தியது தொடர்பிலான வழக்கில் அந்த வாகனத்தை பயன்படுத்திய மாகாண சபை உறுப்பினரிடம் இருந்து மொத்த நட்டத்தினையும் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. நிதிக் கூற்றுக்களினூடாக இந்த சம்பவம் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன், நட்டத்தினை அறவீடு செய்ய இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.(2020) | வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கமைய நட்டத்தினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தவிர்க்கும் செயற்பாடு எடுக்கப்பட்டிருக்கவில்லை | இதுவரை நட்டத்தினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |
| (ஈ) | வட மேல் மாகாண சபை பிரதான அமைச்சு மற்றும் குருணாகல் மாநகர சபை கூட்டாக இணைந்து நிர்மாணிக்கும் ரூபா 1,334 மில்லியன் ஒப்பந்த பெறுமதியிலான ஆறு மாடி கட்டிடம் தொடர்பாக | பெறுகை வழிகாட்டல்களுக்கு அமைவாக ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செயயப்படாமை, கால தாமதம் தொடர்பில் | தவிர்க்கும் செயற்பாடு எடுக்கப்பட்டிருக்கவில்லை | இப்பெறுகை முறைமையின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட நிறுவகத்தினால் நிர்வாக செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(i)** வடமேல் மாகாண பொறியியலாளர் திணைக்களத்தில் காணப்படும் தகுதியுடைய பொறியியல் தொழில்நுட்பத்தின் சிறந்த பணியாளர்களினால் வடிவமைத்தல் மற்றும் மதிப்பீடு செய்யும் இயலுமை காணப்படும் போது இந்த கட்டிடத்தை நிர்மாணித்தல் மாகாண சபையின் முதன்மைச் செயற்பாடாகவும், இது தொடர்பில் மாகாண பொறியியல் திணைக்களத்தினால் திட்டம் தயாரிப்பதாயின் அதற்கு நீண்ட காலம் எடுப்பதாகவும், அதனால் வடிவமைத்தல் மற்றும் நிர்மாணிக்கும் பெறுகை முறையை தெறிவு செய்ததாக தெறியப்படுத்தி வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல் (Design & Building) பெறுகை முறை தெரிவு செய்யப்பட்டிருந்தது.

பெறுகை வழிகாட்டி கோவை 7.8.4(ஆ) வழிகாட்டலுக்கு அமைவாகவன்றி கேள்விப் பாதுகாப்பு பெறுகை நிறுவனத்தினால் வழங்கப்படும் நியம படிவ மாதிரியைவிட வேறுபட்டும் ஒப்பந்தப்படி நடவடிக்கை எடுக்காமை குறைபாடுடைய பெறுகை தீர்மானம் தொடர்பில் கண்டு பிடிக்கப்பட்டதன் பின் செயல்நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் பொறுப்பானவர்களுக்கு எதிராக விசாரணையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | இணங்கப்பட்ட மாதிரியில் உள்ள 02 ஆவது பிரிவின்படி ‘‘மனுதாரரினால் கேள்வியில் காணப்படும் பிழைகள் சீர்செய்தல் ஏற்றுக்கொள்ளல் நிராகரிக்கப்பட்டால்’’ எனும் பிரிவு சமர்ப்பிக்கப்பட்ட மாதிரியில் காணப்படாததன் பேரில் பாரிய புறக்கணிப்பொன்றாக கருதி கேள்வி நிராகரிக்கப்பட வேண்டியிருந்தும், அந்த மனுதாரருக்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் வட மேல் மாகாண பிரதான அமைச்சின் செயலாளரினால் தேசிய பெறுகை ஆணைக்குழுவிடம் விசாரித்த போது அந்த ஆணைக்குழுவினால் இது ஒரு தவறாக மேலும் உறுதிப்படுத்தியிருந்ததாக அவதானிக்கப்பட்டது.(2020) | | | |
| (உ) | உள்ளூராட்சி மன்றங்களின் பிரதான நிறைவேற்றுனர் களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த வாகனங்களுக்காக எரிபொருள் எல்லைகளை வடமேல் மாகாண தலைமை அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் | எரிபொருள் எல்லைகளை விதிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படவில்லை | இதுவரை எரிபொருள் எல்லைகளை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இருந்ததுடன் உள்ளூராட்சி மன்றங்களினாலும் எரிபொருள் எல்லைகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக எவ்வித வரையறையுமில்லாமல் எரிபொருள் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் உட்பட சபை தீர்மானத்தின் பேரில் போக்குவரத்து படிகள் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.(2019) | | | |

**04. வடமேல் மாகாண கைத்தொழில் சேவை செயற்பிரிவு**

---------------------------------------------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | வட மேல் மாகாண கைத்தொழில் சேவை செயற்பிரிவிற்குரிய ஹெரலியாவல கைத்தொழிற் பேட்டையில் 922.36 பேர்ச் நிலப் பகுதி 04 கைத்தொழில்களுக்காக ரூபா 3,830,025 பெறுமதிக்கு உரித்து அடிப்படையில் தனியார் பகுதியினருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.(2020) | அரசிற்கு சொந்தமான காணி தனியார் துறைக்கு விற்பனை செய்யாமல் நீண்டகால குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கைத்தொழிற் பேட்டை 1 ஆம் கட்டத்தில் முதலீட்டாளர்களினால் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் அந்த 04 கைத்தொழிலாளர்களுக்கு நிலத்தினை உரித்து அடிப்படையில் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதன் பின்னர் ஒவ்வொரு உடன்படிக்கையிலும் அப்பிரிவும் அகற்றப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப் பட்ட பின்னர் அரசிற்கு சொந்தமான காணி களை நீண்டகால குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | ஹெரலியாவல கைத்தொழிற் பேட்டைக்குரிய 55 கைத்தொழில்கள் 20 வருட குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 19 | சகல கைத்தொழில்களும் ஒழுங்கு முறையாக ஒப்பந்தம் செய்து குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 36 தொழிற்சாலைகளின் 11 உரிய முறையில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. 24 தொடர்பில் ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் பதிவு செய்வதற்கு | 24 குத்தகை உடன்படிக்கைகள் பதிவுசெய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை பதிவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | கைத்தொழில் களுக்கு மாத்திரம் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தாலும் கூட்டுத் தொகை ரூபா 2,375,530 இற்கு வருடாந்த வாடகை குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கும் எஞ்சிய 36 கைத்தொழில்கள் தொடர்பில் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரை குத்தகை ஒப்பந்தமொன்றுக்கு முன்வந்திருக்கவில்லை. (2020) | | வழங்கப்பட்டுள்ளது. ஒரு கைத்தொழிற்சாலை காணி உரித்து முழுமையாக தனியார் நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. | செய்யப்பட்டிருக்க வில்லை |
| (இ) | சிரேஷ்ட ஆலோசகர் பதவி 02 தொடர்பில் அனுமதிக்கப்பட்ட பதவியணியினரை விட அதிகமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் அந்தப் பதவிகள் தொடர்பில் மீளாய்வாண்டினுள் ரூபா 1,859,533 சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்டிருந்தது. (2020) | அனுமதிக்கப்பட்ட பதவியணியினரை மாத்திரம் ஆட்சேர்ப்புச் செய்ய வேண்டியதுடன் மேலதிகத்தினை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதவியணியில் திருத்தமொன்று மேற்கொள்ளப்பட்டு இந்த 02 பதவிகளுக்காக அங்கீகாரத்தை வழங்குமாறு பிரதான செயலளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது | இந்த 02 மிகை பதவிகள் மேலும் காணப்படுவதுடன் சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டு வருகின்றது. |
| (ஈ) | 2016 திசெம்பர் 16 ஆந் திகதிய 303 ஆம் இலக்க பதவிநிலை பத்திரத்தின் பிரகாரம் பணியகத்தின் ஒவ்வொரு பணிப்பொறுப்பிற்காக உழைத்த இலாபத்தில் 5 சதவீதம் நலன்புரி நிதியத்திற்கு கழிக்கப்பட்டு எஞ்சிய இலாபத்தில் 55 சதவீதம் | ஊக்குவிப்பு முன்மொழிவு முறைமை மற்றும் அதன் நியதிகளுக்காக முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | தவிர்க்கும் செயற்பாடு எடுக்கப்பட்டிருக்கவில்லை | ஊக்குவிப்பு படிகள் மற்றும் சேமித்த விடுமுறைக்காக தொடர்ச்சியாக கொடுப்பனவு செய்யப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| பதவியணியினருக்காக ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு 2019 ஆம் ஆண்டில் ஊக்குவிப்பு படியாக ரூபா 4,813,222 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக எஞ்சிய 45 சதவீதத்தில் ரூபா 1,292,126 தொகை ஊழியர்கள் சேமித்த சுகயீன விடுமுறைக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. (2019) | | | |

## 05. வடமேல் மாகாண ஜனகலா மன்றம்

| | | | |
|---|---|---|---|
| ஜனகலா மன்றத்தின் 2020 ஆம் ஆண்டு தவிர கடந்த 05 வருடங்களுக்கான வருமானம், செலவு மற்றும் இலாப ∴ நட்டம் நிலமையினை பகுப்பாய்வு செய்கையில் கட்டுநாயக்க வயம்ப ஏற்றுமதி விற்பனை நிலையம் மாத்திரம் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை இலாப நிலையில் காணப்பட்டதுடன் குருணாகல விஸ்கம் நிவஸ மற்றும் சிலாபம் விஸ்கம் நிவஸ 2020 ஆம் ஆண்டு உட்பட கடந்த 05 வருடங்களிலும் நட்டமடைந்திருந்தது. (2020) | அந்த விற்பனை நிலையங்கள் தொடர்ச்சியாக நட்டமடைவதற்கான காரணம் விரிவாக ஆராய்ந்து கண்டறியப்பட்டு வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | • விற்பனை மேம்படுத்தல் நடைமுறையை பின்பற்றுதல்<br>• விலைச் சலுகை வழங்குதல்<br>• ஊக்குவிப்பு நடைமுறையொன்று செயற்படுத்துதல்<br>• இணையத்தளத்தினூடாக பொருட் கட்டளையை பெற்று விற்பனை செய்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்ட்டுள்ளன. | 2021 ஆண்டில் குருணாகல விஸ்கம் நிவஸ மற்றும் சிலாபம் விஸ்கம் நிவஸ என்பவற்றின் மொத்த நட்டம் ரூபா 4,188,052 ஆக இருந்ததுடன் வயம்ப எக்ஸ்போட் நிறுவனமும் 2021 ஆம் ஆண்டில் ரூபா 1,046,285 ஆன நட்டமொன்று ஈட்டியிருந்தது. |

## 06. வடமேல் மாகாண சுற்றாடல் அதிகார சபை

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | மாகாண சுற்றாடல் அதிகார சபையின் உதவி அத்தியட்சகர் (நிதி) 2017 ஆம் ஆண்டு 50 தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் செலவினை பொறுப்பேற்க பெறப்பட்ட முற்பணத் தொகையில் செலவிடப்படாத ரூபா 310,000 உதவி அத்தியட்சகர் (நிதி) இடம் அறவிட வேண்டுமென பிரதான அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. (2020) | விசாரணை நடவடிக்கைகளை விரைவாக முடிவுறுத்தி உத்தியோகத்தரிடம் அறவிட வேண்டிய தொகையை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | • உத்தியோகத்தர்களின் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.<br>• சேவையிலிருந்து நீக்குவதற்கு அல்லது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது | ஆரம்ப விசாரணைக்குரிய பரிந்துரையை பணிப்பாளர் சபையிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய போதும் பணிப்பாளர் சபை கலைக்கப்பட்டுள்ளதால் புதிதாக பணிப்பாளர் சபையொன்று நியமனம் செய்யப்படும் வரை தீர்மானம் எடுக்க முடியா நிலைமை ஏற்பட்டுள்ளது. |
| (ஆ) | மாகாண சுற்றாடல் அதிகாரசபையின் அத்தியட்சகர் வாகனத்தை தாமே செலத்துவதற்கு அமைச்சின் செயலாளரிடம் பெற்றுக் கொண்ட அனுமதியின்றி வாகனத்தை செலுத்திச் செல்லும் போது 2019 மார்ச் 07 ஆந் திகதி பேராதனை பல்கலைக்கழக சூழலில் தீப்பற்றி, ஏற்பட்ட விபத்து தொடர்பில்மா.நி.வி. 54.6 பிரகாரம் சேத நட்டத்தினை ஏற்பட்ட தினத்திலிருந்து மூன்று | நிறுவன தலைவர்கள் சட்ட விதிகள் பிரமானங்களுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதுடன் நட்டங்கள் தொடர்பில் ஆரம்ப அறிக்கை இறுதி அறிக்கை முன்வைக்கப்படாமை தொடர்பில் உரிய பிரிவினர் பொறுப்பு கூற வேண்டியதுடன் நட்டத்தினை உரிய தரப்பினரிடமிருந்து | அமைச்சின் செயலாளரின் வாய்மூல அனுமதியுடன் கலந்தரையாடல் ஒன்றில் பங்குபற்றியதுடன் வாகனத்தை பயன்படுத்துவது தொடர்பில் பிரதான அமைச்சின் செயலாளரினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது அன்றைய தினம் குறித்த வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பில் மா.நி.வி. 54.6 பிரகாரம் பதவிநிலை | காப்புறுதி கம்பனியிடமிருந்து ரூபா 2,082,160 ஆன நட்டம் அறவிடப்பட்டுள்ளதுடன் வாகனம் தற்போது ஓடக்கூடிய நிலைமையில் உள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| | மாதங்களுக்குள் பூரண அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படாததுடன் பிரயாணத்திற்கான கடமை அவசிமானதா என உறுதிப்படுத்தும் எழுத்து மூல சாட்சி எதுவும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. (2020) | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உத்தியோகத்தர் ஒருவரின் தலைமையில் இயந்திர பொறியியலாளர் ஒருவர் உட்பட பரிசோதனையொன்று செய்து பூரண அறிக்கையொன்று பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது . அறிக்கை பெறப்பட்டதும் உடனடியாக நடவடிக்கை எடுப்பதறகு எதிர்பார்க்கப்பட்டுள்ளது | |

**07. வட மேல் மாகாண வீதி பிரயாணிகள் சேவை அதிகாரசபை**

---

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | 2001 முதல் 2019 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் பெற வேண்டிய ரூபா 15,820,426 பெறுமதியான கடன் தொகையானது மீளாய்வாண்டில் தொடர்புடைய தரப்பினரிடமிருந்து மீள் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. (2020) | பெறவேண்டிய பணத்தினை உரிய தரப்பினரிடமிருந்து அறவீடு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு நவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிலுவை கடன் மீதிகள் அவ்வாறே காணப்படுகின்றன. |
| (ஆ) | வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் புதிய அலுவலக தொகுதியை நிர்மாணிப்பதற்காக ரூபா 59,112,869 தொகையும் சுற்றுமதிலுக்கென ரூபா 3,247,813 செலவிடப் பட்டிருந்த போதும் 2020 | காணியின் உரித்தினை அதிகாரசபைக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணியின் உரித்தினை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | காணியின் உரித்தினை அதிகாரசபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | நவம்பர் 25 கணக்காய்வு திகதி வரையில் குறித்த காணியானது சபைக்காக சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை ல என அவதானிக்கப்பட்டது. (2020) | | | |
| (இ) | சாரதி பயிற்சி பாடசாலையின் வரவு செலவு அறிக்கை பிரகாரம் மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் ஒக்டோபர் மாதம் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதியின் மொத்த வருமானம் ரூபா 259,500 ஆக காணப்பட்டதுடன் செலவினம் ரூபா 1,669,513 ஆகும். அவ் வகையில் மீளாய்வாண்டின் ஒக்டோபர் மாதம் 30 ஆந் திகதி வரை ரூபா 1,410,013 ஆன மொத்த நட்டம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. (2020) | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சாரதி பயிற்சி பாடசாலை வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | தவிர்க்கும் செயற்பாடுகள் போதியளவில் எடுக்கப்பட்டிருக்கவில்லை | சாரதி பாடசாலை மனித மற்றும் பௌதீக வளங்கள் இல்லாமையால் செயலற்று காணப்பட்டது. |
| (ஈ) | வடமேல் மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபைக்குச் சொந்தமான டொயோடா பொவுன் ஜீப் வண்டி 2020 பெப்ரவரி 16 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டிருந்தது. இவ்வாகனத்தை திருத்தம் செய்வதற்காக ரூபா 87,400 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அத்தொகையை குறித்த | இவ்விபத்து தொடர்பாக ஏற்பட்ட சேதத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 57,400 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | திருத்த வேலைகளுக்காக சென்ற ரூபா 57,400 சாரதியிடமிருந்து அறவிடப்பட்டிருந்த துடன் மேலும் ரூபா 30,000 ஆன நட்டமொன்று அறவிடப்பட வேண்டியுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காப்புறுதி கம்பனியிடமிருந்து மேவுகை செய்ய முடியாதென அறிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பான புலனாய்வு நடவடிக்கைகள் துரிதமாக்கப்பட்டு நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. (2020) | | | |
| (உ) | 1995 இன் 04 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்து சேவை சாசனத்தின் 17(ஆ) பிரிவின் பிரகாரம் பயணிகள் போக்குவரத்திற்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல், அந்த அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பித்தல் அல்லது இரத்துச் செய்தல் மற்றும் கட்டணங்களை தீர்மானித்தல் என்பன அதிகாரசபையால் செய்யப்பட வேண்டும். அக்கட்டணங்கள் மற்றும் கட்டளைகள் தயாரிக்கப்பட்டு 2012 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரை பல சந்தர்ப்பங்களில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் சட்டமாக்கப்பட்ட போதும் அதன் பின்னர் பல சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட கட்டண | கட்டண திருத்தங்கள் வர்த்தமானியில் வெளியிட்டு சட்டரீதியாக்கப்பட வேண்டும். | தவிர்க்கும் செயற்பாடுகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | கட்டண திருத்தங்கள் வர்த்தமானியில் வெளியிட்டு சட்டரீதியாக்கப்பட்டிருக்கவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | திருத்தம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு சட்டரீதியாக்கப்பட்டிருக்கவில்லை.(2019) | | | |
| (ஊ) | பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபைக்கு தகவல் தொழில்நுட்ப முறைமையொன்றை தயாரிப்பதற்காக மாகாண குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி நிதியத்தின் கீழ் ரூபா 7,500,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அச்செயற்திட்டத்திற்காக சாத்தியவள ஆய்வொன்றை சமர்ப்பிக்காமல் இருந்ததுடன் 2018 திசெம்பர் 31 ஆ் திகதி வரை ரூபா 1,500,000 மதியுரைக் கட்டணத்திற்காக மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. (2018) | செயற்திட்டத்தின் செயற்பாடு தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் செயன் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்கும் மதியுரை அறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தை செயற்திறனாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தவிர்க்கும் செயற்பாடுகள் போதியளவு எடுக்கப்பட்டிருக்கவில்லை | அதிகாரசபையால் கணனி செயற்பாட்டு முகாமைத்துவ முறைமையை தயாரிப்பதற்காக 2018 ஆம் ஆண்டு முதல் ரூபா 18,215,169 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் பொது மக்களுக்கு சேவையொன்று கிடைக்கும் வகையில் இன்னும் செயற்திட்டத்தின் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவி ல்லை |

**08. வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை**

---

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | விடுமுறை விடுதியொன்றாக நடாத்திச் செல்லப்படும் புத்தளம் மெரிடைம் ஹெரிடேஜ் விடுதியிலிருந்து 2020 ஆம் ஆண்டில் உழைத்த தொழிற்பாட்டு வருமானத்தை விட | சுற்றுலா விடுதியை இலாபகரமாக நடாத்திச் செல்வது தொடர்பில் பொருத்தமான நடவடிக்கையொன்றை விரைவில் எடுப்பது தொடர்பில் | • விற்பனை மேம்படுத்தல் நடைமுறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.<br>• துண்டுப் பிரசுரங்கள், இணைய | 2021 திசெம்பர் 31 திகதி வரை செயற்பாட்டு நட்டம் ரூபா 959,563 ஆன மட்டத்தில் அதிகரித்துள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| | பராமரிப்பதற்கான செலவினம் அதிகரித்தமையால் ரூபா 681,553 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்த போதும் இச்சுற்றுலா விடுதியை இலாபகரமாக நடாத்திச் செல்வது தொடர்பில் விசேட கவனமொன்று செலுத்தப்பட்டிருக்கவில்லை.(2020) | முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வடிவமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2020ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு 15 கடன்பட்டோர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 10,845,552 தொகை அறவிடப்பட வேண்டியதுடன் அதில் ரூபா 3,469,673 தொகை 2019 ஆம் ஆண்டிலிருந்து 07 கடன்பட்டோருக்குரிய அறவிடப்பட வேண்டிய மீதியாகும். (2020) | பெறவேண்டிய தொகைகளை தாமதமின்றி அறவிடுவதற்கு பொருத்தமான மற்றும் போதிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை ஏற்படுத்தி செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடன்பட்டோர் தெரியப்படுத்தப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இதுவரை ரூபா 8.1 மில்லியன் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | ரூபா 1,850,000 பெறுமதியான இரட்டை கெப் வண்டியொன்று 2 ½ ஆண்டுகளாக என்ஜின் மற்றும் உள்ளக முறைமையில் தவறுகள் காரணமாக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாமல் காணப்பட்டது (2020) | வாகனத்தை திருத்தியமைப்பதற்கோ அல்லது கைதவிர்ப்பிற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வாகனத்தை திருத்தியமைப்பதற்கோ அல்லது கைதவிர்ப்பிற்கோ பிரதான செயலாளரிடம் ஆலோசணை கோரப்பட்டுள்ளது | இப்போது ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | முறையான சாத்தியவள ஆய்வொன்றில்லாமலும் திட்டமிடல் ஒன்றும் இல்லாமல் ரூபா 12,618,363 செலவிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட மதுரங்குளி சுற்றுலா தகவல் மற்றும் வசதிகள் நிலையம் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றில் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்காமல் விளைவற்றுக் காணப்பட்டது (2019) . | சுற்றுலா வசதிகள் நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை கூடிய விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | உடன்படிக்கை செய்து சேவையை வழங்குவதற்கு முதலீட்டாளருக்கு செய்ய முடியாமல் போனால் மற்றைய தரப்பினருக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டு வருகின்றது | மதுரங்குளி சுற்றுலா தகவல் மற்றும் வசதிகள் நிலையம் தற்போதும் விளைவற்றுக் காணப்படுகின்றது . |

**09. வடமேல் மாகாண இயந்திர உபகரண அதிகாரசபை**

---

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | நிச்சயிக்கப்பட்ட கட்டணங்களின் பேரில் அறவிடப்பட்ட வரி அறவிடப்பட்டு ஒரு மாதத்திற்கு பிறகு வரும் மாதத்தின் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்க வேண்டிய போதிலும் 2020 மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 11,592,070 ஆன வரி தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. (2020) | உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்க வேண்டிய வரியை குறித்த திகதிக்கு முன்னர் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவை பணத்தை தவணையாக கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவையில் ரூபா 450,000 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது டன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதி ரூபா 7,412,278 ஆக இருந்தது. |
| (ஆ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டம் மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் பிரகாரம் | ஊழியர் சேமலாப நிதிய சட்டம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய சட்டம் என்பவற்றின் பிரகாரம் குறித்த | தற்போது சரியாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிற்காக நிதி | வழங்கப்பட்ட வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் ஒவ்வொரு மாதமும் ரூபா 75,000 வீதம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிற்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்காமை காரணமாக முன்னைய ஆண்டின் போது ரூபா 9,954,740 ஆன மிகை அறவீடு செலுத்த நேர்ந்ததாகவும் அதில் மேலும் மிகை அறவீடாக ரூபா 3,033,485 தொகை மீளாய்வாண்டின் இறுதியிலும் செலுத்த வேண்டியிருந்தது.(2020) | திகதிகளில் உரிய சம்பள அடிப்படையில் தவணை கணக்கிட்டு நிதியத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை வேண்டும். | செலுத்தப்படுகின்றது. | நிலுவை மிகை அறவீட்டை செலுத்தப்பட்டு வருகின்றது. |
| (இ) | வாடகை கட்டணங்கள், வாகன திருத்தக் கட்டணங்கள், சேவை நிலையக் கட்டணங்கள் மற்றும் சிவில் வேலைக் கட்டணங்களாக பெற வேண்டிய மீதிகளில் மீளாய்வாண்டின் இறுதியில் மொத்தம் ரூபா 64,703,661 ஆக இருந்ததுடன் 2021 யூன் 14 ஆந் திகதி வரையில் மேலும் அறவிட வேண்டிய ரூபா 26,246,546 ஆக இருந்தது. அம்மீதியில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடாமல் காணப்படும் ரூபா 8,370,119 ஆன கடன் மீதியும் இருந்தன.(2020) | அதிகாரசபையில் காணப்படும் நிதிப் பற்றாக்குறையை குறைத்துக் கொள்வதற்காக முன்னைய ஆண்டுகளில் இருந்து அறவிடப்படாமல் காணப்படும் நிலுவை கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | • நினைவூட்டல் கடிதங்களை அனுப்புதல் மற்றும் கடன் சேகரிப்பதற்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்<br>• மாகாண சபைக்குரிய நிறுவனங்களிலிருந்து பெற வேண்டிய நிறுவனங்களை அறிவூட்டுதல் செயற்பாடு இடம்பெற்றுள்ளது. | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மீதிகளின் மொத்தம் ரூபா 20,128,321 ஆக இருந்ததுடன் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மீதி ரூபா 9,349,168 ஆக இருந்தது. . |
| (ஈ) | நிறுவகத்தின் பொறுப்பில் உள்ள ரூபா 8,625,000 பெறுமதியான 17 வாகனங்கள் மற்றும் | திருத்தங்கள் செய்யப்பட வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் மிக | • வாகனங்களையும் இயந்திரங்களையும் பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்காக | வாகனமொன்று திருத்தம் செய்யப்பட்டிருந்த துடன் 03 |

| | | | |
|---|---|---|---|
| இயந்திர உருப்படிகள் வருடக் கணக்காக செயலற்ற நிலைமையில் காணப்படுவதுடன் திருத்த முடியாத நிலைமையில் காணப்படும் வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் இயற்கை அழிவுகளுக்கு உட்பட்டு காணப்பட்டன. இந்நிலைமை முன்னைய ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கைகளிலும் சுட்டிக் காண்பித்த போதும் அதற்காக அதிகாரசபையின் விசேட கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.(2020) | விரைவில் திருத்தம் செய்வதற்கும் செயயற்திறனற்ற வாகனங்களையும் இயந்திரங்களையும் கைதவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிறுத்துமிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.<br>• திருத்தம் செய்ய முடியாத வாகனங்களும் இயந்திரங்களும் இனங்காணப்பட்டு வருகினற்து. | வாகனங்கள் திருத்தம் செய்யக்கூடிய நிலைமையில் காணப்படுகின்றது. 02 இயந்திரங்களையும் 11 வாகனங்களையும் திருத்தம் செய்தல் பொருளாதார ரீதியில் சிக்கனமற்றதாக இனங்காணப்பட்டுள்ளது. |

**10. தலைப்பு 212 - வடமேல் மாகாண பொறியியலாளர் திணைக்களம்**

| | | | |
|---|---|---|---|
| வடமேல் மாகாண பொறியியல் திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை நடைமுறைப்படுத்தியிருந்த 116 வேலைத்திட்டங்களில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக ரூபா 47,244,442 ஆன நிறுத்தி வைக்கப்பட்ட பணம் விடுவிக்கப்படாதிருந்ததுடன் அக் குறைபாடுகள் ஒப்பந்தக்காரர்களால் நிறைவேற்றிக் கொள்வதற்கோ நிறுத்தி வைக்கப்பட்ட பணத்திலிருந்து மீண்டும் சீர்செய்வதற்கோ | உடன்படிக்கைகளின் சட்டங்கள், விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | • செயற்திட்டம் முடிவடையும் வரை நிறுத்திவைத்தல் பணத்தை விடுவிக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>• பொறுப்புக்களை உதாசீனம் செய்யும் ஒப்பந்தக்காரர்களை கறுப்பு பட்டியலில் இடுவதற்கு குறித்த தகவல்களை பிரதி தலைமை செயலாளர் (பொறியியல் சேவை) இற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 116 வேலைத்திட்டங்களில் 110 திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 06 செயற்திட்டங்களின் பெறுமதி ரூபா 4,548,381 தொகையான நிறுத்திவைத்தல் தொகை மேலும் நிறுத்திவைக்கப்பட்டு ள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொறுப்பை தட்டிக்கழித்தல் பேரில் அவர்களை கறுப்பு பட்டியலில் உற்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. (2020) | | | |

**11. தலைப்பு 213 - கல்வித் திணைக்களம்**

---------------------------------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | இப்பாகமுவ வலயக் கல்வி வலயத்திலிருந்து கிடைக்கும் காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் பதிவு செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்படாதிருந்த துடன் 2010 யூலை முதல் 2010 நவம்பர் 30 சந்தர்ப்பங்களில் ரூபா 5,075,309 கூட்டுத்தொகையான பணம் தொடர்பாக பற்றுச்சீட்டுக்களின் மூலப்பிரதிகளை கொடுப்பனவு செய்வோருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை 04 ஆண்டுகளில் கிடைத்திருந்த ரூபா 2,411,457 தொகை சிறாப்பரினால் வங்கியிலிடப்படாமல் இருந்ததுடன், செயற்பாடற்றதாக்கப்பட்ட இரண்டு | முறையான பரிசோதனையொன்றை மேற்கொண்டு வங்கி கணக்கிணக்கத்தை முறையாக தயாரித்தல் மற்றும் வங்கியிலிடாமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். | மா.நி.வி 57-61 பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நேரடியாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பணத்தை அறவிடுவதற்கு விசேட பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு நட்டம் இதுவரை அறவிடப்பட்டிருக்கவி ல்லை. |

கணக்குகளுக்குரிய வங்கி கணக்கிணக்கத்தை தயாரிப்பதற்கும் சிறாப்பரினால் சேகரிக்கப்பட்ட பணத்தை வங்கியிலிடுதல் தொடர்பாக ஆராய்ந்து பாரத்து அறிக்கையிடுவதற்கு பல சந்தர்ப்பங்களில் பல குழுக்கள் நியமனம் செய்யப்பட்டிருந்த போதும் அந்த சகல குழுக்களினாலும் அச்செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களும் அது தொடர்பாக கவனமொன்று செலுத்தியிருக்கவில்லை. மேலும் 2007 ஆம் ஆண்டிலிருந்து 2012 மே மாதம் வரை வங்கிக் கணக்கிணக்கம் தயாரிக்காமை காரணமாக செயற்பாடற்றதாக்கப்பட்ட மக்கள் வங்கியில் பேணிச் செல்லப்பட்ட பொது மற்றும் ஆசிரிய சம்பள வங்கிக் கணக்கு ஆகிய இரண்டு கணக்குகளிற்கு பதிலாக 2012 யூன் மாதத்தின் போது இலங்கை வங்கியில் இரண்டு புதிய கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. (2019)

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | சிலாபம் கல்வி அலுவலகத்திற்குச் சொந்தமாக காணப்படும் 26 உத்தியோகபூர்வ விடுதிகளில் 03 உத்தியோகபூர்வ விடுதிகளில் மாத்திரம் ஆசிரியர்கள் குடியிருந்ததுடன் 07 விடுதிகள் பயன்படுத்த முடியாத நிலைமையில் காணப்பட்டதுடன் 16 உத்தியோகபூர்விடுதிகள் திருத்தம் செய்ய வேண்டிய நிலைமையில் காணப்பட்ட போதும் அந்த உத்தியோகபூர்வ விடுதிகளை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. (2019) | உத்தியோகபூர்வ விடுதிகளை திருத்தம் செய்து ஆசிரியர்களின் அல்லது அல்லது அரச உதியோகத்தர்களின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திருத்த வேலைகள் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | ஆசிரியர் விடுதிகளை திருத்தம் செய்வதற்கு செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக் கப்பட்டிருந்த போதும் நிதிஏற்பாடு இல்லாமையால் அச்செயற்பாடு நிறைவேற்றப்பட வில்லை |
| (இ) | 2007 முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கிரிஉல்ல வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெற்றிருந்த நிதி முறைகேடுகளுக்குரிய அறவிடப்பட வேண்டிய ரூபா 13,609,655 தொகை அந்த நட்டம் ஏற்பட்டு 13 வருடங்கள் கடந்திருந்த போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அப்பெறுமதி நடைமுறைச் சொத்தின் கீழ் காசு மற்றும் காசுக்கு சமமான வற்றில் மாகாண | நிதி முறைகேடுகள் தொடர்பில் தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 13,609,655 பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்நிதி மோசடி தொடர்பாக தற்போது பிரதான செயலகத்தின் மூலம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நட்டத்தை இதுவரை அறவிடப்பட்டிருக்க வி ல்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | திறைசேரி வைப்புக்கள் (சேதம்) என திரவச் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. (2019) | | | |

**12. தலைப்பு 222 - வடமேல் காணிஆணையாளர் திணைக்களம்**

---

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | வடமேல் மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தினால் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 வருமானக் குறியீடுகளுக்காக அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா 78,415,133 ஆன நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. (2018) | நிலுவை குத்தகையை அறவிடுவது தொடர்பாக உள்ளக கட்டுப்பாட்டை நிருவ வேண்டும். | நிலுவை குத்தகையை அறவிடுவதற்கும் அறவிடப்படாத பணத்திற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | இந்நிலுவைக்குரிய 24 பிரதேச செயலக பிரிவுகளுக்குரிய தகவல்கள் நாளதுவரையாக்கப்பட்டு தகவல்களை எதிர்காலத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்து வருவதுடன் 2021 ஆம் ஆண்டின் நிலுவைத் தொகை ரூபா 112,032,090 ஆகும். அதன் பிரகாரம் 2018 - 2021 வரை நிலுவை வரி அறவீடு ரூபா 45,787,789 ஆக இருந்தது நிலுவைகளுக்குரிய பதிவழிப்புக்கள் ரூபா 30,641,423 ஆகும். |
| (ஆ) | வடமேல் மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் அரசிற்குச் சொந்தமான காணி வெவ்வேறு | அரசிற்குச் சொந்தமான காணிகளை வெவ்வேறு அபிவிருத்தி | நீதிமன்ற செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் அத்துமீறியர்வர்களை அகற்றுவதற்கும் | நீதிமன்ற செயற்பாடுகளுக்காக அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்களைப் |

| | | | |
|---|---|---|---|
| அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உத்தேசிக்கப்பட்டிருந்த போதும் அம்மும்மொழிவுகள் செயற்படுத்தப்படாததன் பேரில் 85 ஏக்கர், 01 ரூட் 73 பேர்ச் அளவிலான காணி பயன்பாடற்று காணப்பட்டது.(2020) | செயற்பாடுகளுக்காக தாமதமின்றி பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செயற்திட்டங்கள் செயற்படுத்தாத காணிகளை வேறு செயற்பாடுகளுக்காக கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற்று அத்துமீறியர்வர்களை அகற்றுவதற்கும் வேறு செயற்பாடுகளுக்காக கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

**13. தலைப்பு 230 - வடமேல் மாகாண சுகாதார உள்நாட்டு மருத்துவ சமூக நலன்புரி நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் மகளிர் விவகாரம் மற்றும் சபை அலுவல்கள் தொடர்பான அமைச்சு**

---------------------- -----------------------------------------------------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| மாகாண சுகாதார உள்நாட்டு மருத்துவ சமூக நலன்புரி நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் மகளிர் விவகாரம் மற்றும் சபை விவகாரம் தொடர்பான அமைச்சின் கீழ் மீகஹகொட்டுவ சிறுவர் இல்லத்தில் ரூபா 3,844,321 ஆன ஆரோக்கிய முறைமையை மேம்படுத்துதல் மற்றும் நீர் குழாய் திருத்த வேலைகளுக்காக 2019 திசெம்பர் 30 ஆந் திகதி தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவருடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது(2020) | ஒப்பந்தக்காரர் ஒருவரை தெரிவுசெய்யும் போது பின்தகைமை தொடர்பான தொழில்நுட்ப மற்றும் மதிப்பீட்டுக் குழுவின் போது கவனம் செலுத்தப்பட வேண்டும். | உடன்படிக்கையின் பிரகாரம் முதலாவது நீடிப்பு வழங்கப்பட்டிருந்த போதும் அக்கால எல்லை கடந்தும் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படாதிருந்தது டன் அவ்வப்போது அறிவூட்டல் மேற்கொள்ளப்பட்ட போதும் ஆரம்பிக்கப்படாமையால் உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தம் இரத்தாகியிருந்தது | உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தக்காரர் நடவடிக்கை எடுக்காமை காரணமாக கறுப்பு பட்டியலுக்கு உட்படுத்தப்பட்டு செயலாற்றல் பிணை காசாக்கப்பட்டிருக்கவில்லை. |

**14. தலைப்பு 231 - சுகாதார சேவைகள் திணைக்களம்**

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | குருணாகல் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய மருத்துவ நிறுவனங்களில் 16 வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துகளுக்கு உரிய ஆரம்ப புலனாய்வு மேற்கொண்டு பொறுப்பானவர்களிடமிருந்து அந்நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை (2018) | மாகாண நிதி விதி 54,55 மற்றும் 57 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | • வாகன விபத்து தொடர்பாக ஆரம்ப பரிசோதனை மேற் கொண்டு அந்த அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்படும்<br>• வாகன விபத்துக் களிலிருந்து எழும் நட்டத்தை குறித்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | • ஆரம்ப பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது<br>• ஒரு வாகனத்தின் விபத்து தொடர்பாக ரூபா 627,146 தொகை சாரதியிடமிருந்து அறவிடப்பட்டு வருவதுடன் தற்போது ரூபா 186,304 தொகை அறவிடப்பட்டுள்ளது.<br>• மற்றொரு வாகனம் சாரதியால் திருத்தம் செய்யப்பட்டிருந்தது.<br>• எஞ்சிய 14 வாகனங்களின் சேதத்தின் பெறுமதி காப்புறுதி கம்பனியிடமிருந்து மீள்நிரப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி வரையில் மாவட்ட சுகாதார சேவைகள் அலுவலகத்திற்குரிய ஆதார வைத்தியசாலைகள், பிரதேச வைத்தியசாலைகள், சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகம் மற்றும் ஆரம்ப சுகாதார சிகிச்சை பிரிவுகளுக்குரிய 38 வீடுகள் விளைவற்றுக் காணப்பட்டன.(2018) | உத்தியோகபூர்வ விடுதி தொடர்பாக குழு நடாத்தி முகாமைத்துவ செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஒரு பதவிக்காக ஒதுக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ விடுதி தேவைப்பாட்டின் பிரகாரம் ஏனைய ஊழியர்களுக்கு வழங்குவதற்கும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத உத்தியோகபூர்வ விடுதிகளை உடைத்து அகற்றி அப்பொருட்களை இராணுவத்திற்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 30 உத்தியோகபூர்வ விடுதிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டுள்ளன |
| (இ) | முந்தல் மாவட்ட வைத்தியசாலையின் களஞ்சியத்தில் ரூபா 810,169 பெறுமதியான மருந்துகளில் பற்றாக்குறையொன்றும் ரூபா 19,943 பெறுமதியான மருந்துகளில் மிகையொன்று காணப்படுவதாக 2018 யூலை 02 ஆந் திகதிய மெய்மையாய்வு அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது (2018) | மாகாண நிதி விதி 52, 54 மற்றும் 55 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு பற்றாக்குறை அறவிடப்பட வேண்டியதுடன் மாகாண நிதி விதி 477.2 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல வேண்டும் | • மருந்துக் களஞ்சியத்திற்காக மருந்தாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.<br>• மாவட்ட வைத்திய உத்தியோகத்தரால் மேற்பார்வை செய்யப்படுகின்றது.<br>• மிகை மற்றும் பற்றாக்குறையிலிருந்து தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தற்போது வைத்தியசாலையில் மருத்துவ முகாமைத்துவம் தொடர்பாக பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவின் மேற்பார்வை அவ்வப்போது இடம்பெறுகின்றது. |
| (ஈ) | சுகாதாரத் திணைக்களத்துக்குரிய 11 வைத்தியசாலைகளில் நிலவிய 17 பதவிகளுக்குரிய 689 உத்தியோகத்தர்கள் 05 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக இடமாற்றம் பெற்றுக் கொள்ளாது ஒரே | வருடாந்த இடமாற்ற சபை நியமனம் செய்யப்பட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் இடமாற்றக் கொள்கை செயற்படுத்தப்பட வேண்டும் | இடமாற்றக் கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது. | இந்த 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தை கொண்ட உதியோகத்தரகளை இடமாற்றம் செய்வதற்கு உட்படாத |

| | | | | |
|---|---|---|---|---|
| | வைத்தியசாலையில் சேவையாற்றி வந்தனர்.(2019) | | | சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| (உ) | புத்தளம் மாவட்டத்தில் சிறுநீரக நோய் நிவாரண நடவடிக்கைகளை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்காக மாவட்ட சிறுநீரக நோய் நிவாரண அலகிற்காகப் போதியளவு பதவியணியினர் இல்லாத காரணத்தினாலும் சிறுநீரக நோய் விசேட நிபுணர் (மருத்துவ) ஒருவர் புத்தளம் மாவட்டத்திற்கு நியமிக்கப்படாமை என்பன தடையாக காணப்பட்டன.(2019) | சிறுநீரக நோய் விசேட நிபுணர் (மருத்துவ) ஒருவரை பெற்றுக்கொள்ள உள்ளக நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும் | வரிசை அமைச்சிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது | சிறுநீரக நோய் தொடர்பான விசேட நிபுணர் (மருத்துவ) ஒருவரை இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை |
| (ஊ) | 11 சுகாதார சேவை வலயங்களில் ஆபத்தான வலயங்களில் அமைந்துள்ள 347 பாடசாலைகளில் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 187 பாடசாலைகள் மாத்திரமே பரீட்சிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 169 பாடசாலைகளின் நீர் குடிப்பதற்கு பொருத்தமற்றதென இணங்காணப்பட்டிருந்தது. அவ்வாறே பொல்பிதிகம, கிரிபாவ மற்றும் மஹவ ஆகிய சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்களுக்குரிய பாடசாலைகளில் நீர் | நோயாளர்கள் தொடர்பாக கவனத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஆபத்தான வலயங்களில் கவனத்தை நிதி ஏற்பாடுகளை வழங்க நடவடிக்கை எடுத்து சுகாதாரம் தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உதவிச் சேவைகளை லப்படுத்த நடவடிக்கை எடுத்தல் தயாரிக்கப்பட வேண்டும் | பொது சுகாதார பரிசோதகரால் வருடாந்தம் நீர் மாதிரி பரீட்சித்தல் மற்றும் நீர் மாதிரிகளை சரியான வகையில் தொடர்புபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | பொது சுகாதார பரிசோதகரால் நீர் மாதிரி பரீட்சித்தல் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்துவதற்கு செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப் பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மாதிரிப் பரிசோதனை மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. (2019) | | | |
| (எ) | 2018 ஆம் ஆண்டில் ரூபா 3,408,168 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 07 மாறுபட்ட நீர் உற்பத்தி இயந்திரங்களில் (Distill water operator machine) தம்பதெனியா, நிகரவரட்டிய மற்றும் கல்கமுவ வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்ட 03 இயந்திரங்கள் 1 ½ வருடங்களில் செயலற்ற நிலைமை காணப்படுகின்றது.(2019) | கொள்வனவு செய்வதற்கு முன்னர் உரிய சாத்திய ஆய்வினை மேற்கொள்ள வேண்டியதுடன் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் விதந்துரைகள் தொடர்பாக கருத்தில் கொள்ள வேண்டும் | காய்ச்சி வடிகட்டிய தண்ணீரை உற்பத்தி செய்வதை விட விலை குறைவாக இருப்பதால்,கேள்வி மூலம் கொள்வனவ் செய்யப்படுகிறது. | இந்த இயந்திரம் பாவனையிலிருந்து அகற்றப்பட்டுள்ளது. |
| (ஏ) | கல்கமுவ ஆதார வைத்தியசாலைக்கு நீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 15,081,000 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட கல்கமுவ நீர் செயற்திட்டத்தின் நீரும் ரூபா 2,253,856 செலவில் நிர்மாணிக்கப்பட்ட குழாய்க் கிணற்றினது நீரும் குடிப்பதற்கு பொருத்தமற்றதென அவதானிக்கப்பட்டது. ஆதலால் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2020 யூன் வரை ரூபா 2,282,026 | சாத்தியவள ஆய்வொன்று மேற்கொண்டு செயற்திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நீர் வழங்கல் சபை மூலமும் நீரைப் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது . | தற்போது குழாய்க் கிணற்றினது நீரும் குடிப்பதற்கு பொருத்தமற்றதால் உத்தியோகபூர்வ விடுதிகளின் தேவைக்காக பயன்படுத்தப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலவு செய்து பவுசர் ஒன்று மூலமும் 2020 சனவரி முதல் திசெம்பர் வரை ரூபா 493,308 செலவு செய்து நீர் வழங்கல் சபை மூலமும் நீரைப் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. (2020) | | | |
| (ஐ) | வடமேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் குருணாகல் மாவட்டத்தில்ரூபா 27,850,294 புத்தளம் மாவட்டத்தில் ரூபா 15,503,661 என மொத்தம் ரூபா 43,353,955 ஆன காலாவதியான மருந்துகள் காணப்பட்டதுடன் 2014 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை குருணாகல் மாவட்டத்தில் ரூபா 8,569,847 புத்தளம் மாவட்டத்தில் ரூபா 3,138,655 என மொத்தம் ரூபா 11,708,502 தொகையான மருந்துகள் தரத்தில் சித்தியடைந்திருக்கவில்லை (2020) | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து காலாவதியான தரம் குறைந்த மருந்துகளை முதலில் இனங்கண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | • சரியாகவும் நடைமுறை ரீதியாகவும் எதிர்வரும் ஆண்டிற்காக தெவையான மருந்துகள் தொடர்பாக எதிர்வுகூறப்படுகின்றது.<br>• அனைத்து வைத்தியசாலைகளுக் காக அரவு முறையொன்றை நிறுவி மிகை ∴ காலாவதியாவதற்குள் ள மருந்துகளை இனங்கண்ட விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்<br>• காலாண்டு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | • தற்போது குருணாகல் மாவட்டத்தின் பொல்பித்திகம தவிர ஏனைய அனைத்து தவிர ஏனைய அனைத்து ஆதார வைத்தியசாலைக ள் மற்றும் சந்தலங்கா, கொகரல்ல ஆகிய பிரதேச வைத்தியசாலைக ளில் தரவு முறைமையொன் று செயற்படுத்தப்பட் டுள்ளதுடன் ஏனைய வைத்தியசாலைக ளுக்கு அம்முறைமையை நிறுவி தருமாறு கோரப்பட்டுள்ளது.<br>• 2015 ஆம் ஆண்டிலிருந்து தரத்தில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | சித்தியடையாத மருந்துதகள் தொடர்பாக மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள் ளது.<br>• தற்போது காலாவதியான மருந்துகள் கைதவிர்ப்பு செய்ய செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள து. |
| (ஓ) | வடமேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் ரூபா 9,898,271 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட சியம்பலன்கமுவ மத்திய மருந்தக கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் 2016 யூன் 31 ஆந் திகதி ஆகும் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.(2020) | சாத்தியவள ஆய்வொன்று மேற்கொண்டு செயற்திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆரம்ப மருத்துவ சிகிச்சை பிரிவனை நிறுவுவதற்கு தேவையான பதவியணியினரை அங்கீகரிக்கவும் இணைப்பதற்கும் கோரப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் கட்டிடங்கள் பயன்படுத்தப்படவில் லை. |
| (ஓ) | வடமேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் ரூபா 8,691,185 செலவு செய்து பூர்த்தி செய்த சியபலன்கமுவ மத்திய மருந்தகத்தின் உத்தியோகபூர்வ விடுதியின் நிர்மாண | சாத்தியவள ஆய்வொன்று மேற்கொண்டு செயற்திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆரம்ப மருத்துவ சிகிச்சை பிரிவனை நிறுவுவதற்கு தேவையான பதவியணியினரை அங்கீகரிக்கவும் இணைப்பதற்கும் கோரப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் கட்டிடங்கள் பயன்படுத்தப்படவில் லை. |

வேலைகள் 2017 மே மாதம் 30 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.(2020)

**15. தலைப்பு 241 - மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம்**

---

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | ஓப்பந்தப் பெறுமதி ரூபா. 27,831,877 ஆக இருந்த பரமாகந்த – விகாரை நுழைவுப் பாதை அபிவிருத்தி வேலைகள் இரண்டு சந்தர்ப்பங்களில் காலம் நீடிக்கப்பட்டு 2020 ஜனவரி 31 ஆம் திகதி வேலைகள் முடிக்கப்பட வேண்டியிருந்த போதும், கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட 2020 செப்டம்பர் 21 ஆம் திகதி வரை இப்பாதையின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. குறித்த தாமதக் காலத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் ஒரு நாளைக்குரூபா. 13,916 வீதம் மீளாய்வுத் திகதி வரை 234 நாட்களுக்கான தாமதக் கட்டணமாக ரூபா. 3,256,344 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை | உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த தரத்திற்கும் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் பூர்த்தி செய்யாத செயற்திட்டங் தாமதக் கட்டணங்களை உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டும் | தவிர்ப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. (2020) | | | |
| (ஆ) | குடாஓய – புளுகஹமுள சந்தி வீதி கணக்காய்வினை மேற்கொண்ட 2020 செப்டம்பர் 16 ஆம் திகதி வரை வேலைகள் முடிக்கப்படாதிருந்ததுடன், 2020 பெப்ரவரி 15 ஆம் திகதி ஒப்பந்தக் காலம் முடிவடைவதனால் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா. 4,677,693 அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. (2020) | உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த தரத்திற்கும் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் பூர்த்தி செய்யாத செயற்திட்டங் தாமதக் கட்டணங்களை உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டும். | தவிர்ப்பு நடவடிக்கையொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை | தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில˙லை. |
| (இ) | 2019 ஆம் ஆண்டின் முதல் பகுதிக்கான வடமேல் மாகாண விலை நிர்ணயக் குழுவின் மூலம் 40 நிவ்டன் (40N) கொங்ரீட் கல் ஒன்றின் விலை போக்குவரத்துக் கட்டணத்துடன் சேர்த்து ரூபா. 52 என விலை நிர்ணயிக்கப்பட்டிருந்த போதும், போக்குவரத்துக் கட்டணம் இன்றி ஒரு கல்லின் விலை ரூபா. 52 எனக் கொள்ளப்பட்டு ஒரு சதுர மீற்றருக்கு தேவையான கற்களின் உண்மையான எண்ணிக்கை 40 ஆக இருந்த போதும், 43 எனக் | • அரசிற்கு ஏற்பட்டிருந்த ரூபா 5,508,631 ஆன நட்டம் தொடர்பாக மா.நி.வி 106 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.<br>• வீதி நியம விகிதங்கள் உரிய துறைசார் கவனத்துடன் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எவ்வித தவிர்ப்பு நடவடிக்கையொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை ∴ | தவறுடனான வீதி நியமங்கள் காரணமாக அரசிற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | கொள்ளப்பட்டும் கொங்கிரீட் கற்களைப் பயன்படுத்தி பாதை செப்பனிடும் வேலைத் தலைப்புக்காக (RS1-017) வீதி ஏற்பு சதவீதம் தயாரிக்கப்பட்டிருந்தது. இப் பிழையான நிலைமையின் கீழ் வீதி ஏற்பு சதவீதம் தயாரிக்கப்பட்டிருந்ததன் காரணமாக கம்பெரலிய திட்டத்தின் கீழ் குருநாகல் மாவட்ட செயலகத்தின் மூலம் மக்கள் மூல அபிவிருத்தி மூலம் மேற்கொள்ளப்பட்ட 100 திட்டங்களால் மாகாண சபைக்கு ரூபா 5,508,631 நட்டம் ஏற்பட்டிருந்தது.(2020) | | | |
| (ஈ) | கிராமிய அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டு குருநாகல் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட நிதியின் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட செலவு ரூபா. 611.13 மில்லியனாகிய 09 வீதி அபிவிருத்தித் திட்டங்கள் வட மேல் மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் நேரடி தொழிலாளர் உழைப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவ் வேலைகளுக்குத் தேவையான பொருட்கள் | • பெறுகை செயற்பாட்டில் காணப்படும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br>• அரசிற்கு ஏற்பட்டிருந்த ரூபா 153.75 மில்லியனான நட்டம் தொடர்பாக மா.நி.வி 106 இன் பிரகாரம் நடவடிக்கை | கணக்காய்வில் சுட்டி காண்பிக்கப்பட்ட விடயம் தொடர்பாக வடமேல் மாகாண பிரதான செயலாளரால் குழுவொன்று நியனம் செய்யப்பட்டுள்ளது | பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது |

மற்றும் இயந்திரங்களை எடுக்கப்பட பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட கணக்காய்வு விசாரணையின் போது பெறுவனவு நடவடிக்கைகள் தெளிவாக மேற்கொள்ளப் பட்டிருக்காமை. போட்டித்தன்மை மட்டுப்படுத்தப் பட்டிருந்தமை, கொள்வனவுகளுக்கான முறையான அதிகாரம் கிடைத்திருக்காமை உள்ளிட்ட அரச பெறுவனவுகள் வழிகாட்டிகளிலிருந்தும் வடமேல் மாகாண நிதிப் பிரமாணம் 419 இற்கும் புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதேபோன்று இத் திட்டங்களுக்குமான பிரதான 04 மூலப்பொருட்களையும் கொள்வனவு செய்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு விசாரனையின் போது சாதாரண சந்தை விலைகளை விட மிகவும் கூடிய விலைகளின் அடிப்படையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப் பட்டிருந்ததன் காரணமாக அரசிற்கு சுமார் ரூபா.

153.75 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. அதேபோன்று போட்டி அடிப்படையிலான பெறுவனவு செயன்முறைக்குப் புறம்பாக நேரடி தொழிலாளர் அடிப்படையில் இத் திட்டங்களை மேற்கொண்டதன் காரணமாக முறையான அனுமதி கிடைக்கப் பெறாதிருந்ததுடன், நேரடி தொழிலாளர் அடிப்படையில் இத் திட்டங்களை மேற்கொள்வதற்குத் தேவையான தொழிலாளர், இயந்திர உபகரணங்கள் உள்ளிட்ட வசதிகள் வடமேல் மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்திடம் காணப்படவில்லை. (2020)

## 16. தலைப்பு – 243 மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம்

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் ஒப்பந்தப் பெறுமதி ரூபா. 9,727,058 ஆகிய வலகும்புர மட்பாண்ட மற்றும் விசித்திரப் பொருட்கள் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் 2019 செப்டம்பர் 30 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2019 | குறித்த செயற்திட்டத்தை உரிய திகதியில் பூர்த்தி செய்து பொது மக்களுக்கு நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2021 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டிருந்த போதும் உடன்படிக்கை கைச்சாத்திட ஒப்பந்தக்காரர் முன்வரவில்லை. | செயற்திட்டத்தை உரிய திகதியில் பூர்த்தி செய்யாமையால் எதிர்பார்த்த நலன்களை பொது மக்களுக்கு வழங்குவதற்கு முடியாதிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திசெம்பர் 28 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு தீர்மாணிக்கப்பட்டிருந்த போதும் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரை முடிக்கப்படாதிருந்ததுடன் தயாரிக்கப்பட்டிருந்த கதவு நிலைகளை உடைத்து மீண்டும் தயாரிக்க வேண்டியிருந்தது. எனவே நிலத்தின் அமைப்பு மற்றும் கட்டடத்தை நிர்மாணிக்கும் நோக்கம் ஆகியன தொடர்பான முறையான கவனத்துடன் திட்டம் தயாரிக்கப்படாததன் காரணமாக மேலதிக காலம் மற்றும் நிதி விரயம் ஏற்பட்டிருந்தது. (2020) | | | |
| (ஆ) | கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமான 03 கைத்தொழில் மத்திய நிலையங்கள் குறைந்த வினைத்திறனுடன் செயற்படுவதற்கு பல வருடங்களாக நிலவி வருகின்ற பதவியணி வெற்றிடங்கள் காரணமாக இருந்துள்ளதுடன், 2020 ஜுன் 30 ஆம் திகதியன்று காணப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை 80 ஆகும் (2020) | திணைக்களத்தின் எதிர்பார்த்த நோக்கங்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை பேணிச்செல்ல நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | பதவியணி வெற்றிடங்கள்பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | வடமேல் மாகாண சபையின் நிதிப் பிரமாணத்தின் 381.1 இன் பிரகாரம் குறித்த நிதி வருடம் நிறைவடைவதற்கு முன்னரே காணப்படும் நிதி ஏற்பாடு அல்லது குறை நிரப்பு பிரேரணை ஒன்றை தயாரிக்காத நிலையில் ரூபா 93,188,977 பெறுமதியிலான அங்கீகரிக்கப்படாத தொழிற்பாட்டு நட்டம் தொடர்ந்தும் ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்தது. (2020) | மாகாண நிதி விதி 381.1 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். | தொழிற்பாட்டு நட்டத்தை பதிவழிப்பதற்கு தேவையான நிதிஏற்பாடுகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் தவிர்ப்பு நடவடிக்கையொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை . | தொழிற்பாட்டு நட்டம் தொடர்ந்தும் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. |

**17.** **தலைப்பு – 250 வட மேல் மாகாண விவசாயம், நீர்ப்பாசனம், மீன்பிடி, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார மற்றும் கமநல அபிவிருத்தி அமைச்சு**

---

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | வட மேல் மாகாண விவசாயம், நீர்ப்பாசனம், மீன்பிடி, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார மற்றும் கமநல அபிவிருத்தி அமைச்சினால் 2020-2024 ஆம் ஆண்டிற்கான ஐந்தாண்டு திட்டத்தின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டிருந்த கீழ்பயிர்ச் செய்கை இடைப்பயிர்கள் செயற்திட்டத்தின் மூலம் 1280 தென்னங் கன்றுகள் நடுதல் தோட்டத்தின் “A” பிரிவில் 40 ஏக்கர் மற்றும் “C” பிரிவில் 20 ஏக்கருக்கு முறையான நீர்ப்பாசனத் திட்டமொன்று | திட்டமிடப்பட்டதன் பிரகாரம் இலக்குகளை அடைவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டின் போது குறித்த செயற்திட்டங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் போது நிறைவேற்று வதற்கு திட்டமிடப்பட்டிருந்த நடவடிக்கைகளை 2021 ஆம் ஆண்டின் போதும் முழுமையாக பூர்த்தி செய்யப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஸ்தாபித்தல், வாழை பயிர்ச்செய்கையின் கீழ் 500 வாழைக்கன்றுகள், 1000 சாம்பல் வாழைக் கன்றுகள், 150 கதழி வாழைக்கன்றுகள் நடுதல் மற்றும் பராமரித்தல், மஞ்சள் செய்கையின் கீழ் 01 ஏக்கரில் மஞ்சள் நடுதல், 01 ஏக்கரில் பழ வகைகள் நடுதல், 01 ஏக்கரில் சோளப் பயிர்ச் செய்கை 01 ஏக்கரில் பாகற்காய் செய்கை, 01 ஏக்கரில் பீர்க்கு செய்கை, கீரை வகைகளின் கீழ் அகத்தி, கங்குன் என்பன ½ ஏக்கர் வீதம் செய்கை மேற்கொள்ளல் மற்றும் பராமரித்தல், 40 ஏக்கரில் கால்நடை சேதங்களுக்கு வேலிகளை நிர்மாணித்தல், 05 தேன் கிராமங்களுடன் கூடிய தேன் கூடுகளை அமைத்தல் மற்றும் இழைய உபகரண ஆய்வுகூடத்தை நிறுவுதல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.(2020) | | | |
| (ஆ) | வடமேல் மாகாண சபை வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2020 இன் பிரகாரம் விடய இலக்கம் 25003 இன் வர்த்தக முற்பணக் கணக்கில் பெறுவனவுகளின் குறைந்த எல்லை ரூபா 1,500,000 ஆக இருந்த போதும் | அங்கீகாரம் இல்லாமல் வர்த்தக முற்பணக் கணக்குகளில் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் மீறககூடாது. | 2020 ஆம் ஆண்டில் கொரோனா தொற்று நிலைமையால் மார்ச் மாதம் நடுப்பகுதி முதல் ஏப்ரல் மாதம் இறுதி வரை ஆய்வுகூடம் மூடப்பட்டமை 2020 நவம்பர் 02 ஆந் திகதி முதல் இதுவரை | எல்லை மீறல்கள் தொடர்பாக அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீளாய்வாண்டில் உள்ளவாறான பெறுவனவு அளவு ரூபா 1,380,285 ஆக இருந்தமையால் ரூபா 119,715 ஆல் ஆகக் குறைந்த பெறுவனவுகளின் எல்லை அடையப்பட்டிருக்கவில்லை (2020) | | செயற்படாமை காரணமாகவும் இந்நிலைமை உருவாகியுள்ளதாக தயவுடன் அறிய தருகின்றேன். | |
| (இ) | 2020 இழைய செயற்திட்டத்தில் மீளாய்வாண்டில் எதிர்பார்த்த நாற்று உற்பத்தி 21000 ஆக இருந்த போதும் உள்ளவாறான உற்பத்தி 8550 கன்றுகள் ஆக இருந்தது. அதன் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தியில் 41 சதவீதம் மாத்திரம் அடையப்பட்டிருந்தது. (2020) | வருடாந்த எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருடாந்த எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ள தேவையான திட்டங்களை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாரியபொல இழைய ஆய்வுகூடத்தை 2020 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் மூடப்பட்டு மாவத்தகம தெனவர்தன இனவிருத்தி பண்ணை காணிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது தெனவர்தன இனவிருத்தி பண்ணையில் இழைய ஆய்வு கூடத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் முடிவடையா மையால் 2021 ஆம் ஆண்டில் இழைய ஆய்வுகூடத்தில் எவ்வித உற்பத்தியொன்று இடம்பெறவில்லை. |

**18. தலைப்பு 251 - மாகாண விவசாயத் திணைக்களம்**

---------------------------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| மாகாண விவசாய திணைக்களத்திற்குரிய வாரியபொல மற்றும் கல்கமுவ விவசாய பண்ணைகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத 07 வாகனங்கள் உரிய காலப்பகுதியில் பராமரிக்கப்படாமை திருத்த வேலைகள், கைதவிர்ப்பு செய்யப்படாமல் வருடக் கணக்காக பயன்படுத்தாமல் சிதைவடைந்து காணப்படுவதுடன் உத்தியோகபூர்வ இல்லம் உட்பட பண்ணைக்குரிய 05 கட்டிடங்கள், இயந்திரங்கள் உபகரணங்கள் உரிய காலப்பகுதியில் பராமரிப்பு அல்லது திருத்தங்கள் மேற்கொள்ளாமை காரணமாக விளைவற்றுக் காணப்பட்டன.(2019) | விளைவற்ற / குறைப்பயன்பாட்டிலான சொத்துக்கள் என்பவற்றை பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு செயற்திறனாக ஈடுபடுத்த வேண்டும் | தவிர்ப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விளைவற்ற / குறைப்பயன்பாட்டிலான சொத்துக்களை பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு செயற்திறனாக ஈடுபடுத்தியிருக்கவில்லை |

**19. தலைப்பு 253 - வடமேல் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம்**

-----------------------------------------------------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| மீளாய்வாண்டில் வடமேல் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் நிலைபேறான பராமரிப்பு நிதியத்திற்கு நிலையான வைப்பு வட்டி ரூபா 5,340,700 தொகை, மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியம் | பராமரிப்பு நிதியத்தில் வருடாந்த வருமானம் இயலுமானவற்றை அவ்வாண்டில் நிதியத்தின் நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டும். | அந்த வருமானத்திலிருந்து தற்போது குளங்கள் அளவீட்டு செயற்பாடுகள் (எல்லை நிர்ணயம் செய்தல்) மற்றும் நீரியல் தாவர முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றின் கீழ் | ஆண்டில் திட்டமிடப்பட அபிவிருத்தி செயற்திட்டங்கள் அவ்வாண்டிலேயே பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் வருடாந்த மிகை |

| | | | |
|---|---|---|---|
| ரூபா 1,218,915 தொகை, நீர்ப்பாசன பாதுகாப்பு கட்டணங்கள் ரூபா 13,620,700 என்ற வகையில் ரூபா 20,180,315 ஆன வருமானமொன்று கிடைத்திருந்த போதும் சிறு நீர்ப்பாசன பராமரிப்பு மற்றும் காலரீதியான பராமரிப்பு செயற்பாடுகளுக்காக ரூபா 6,856,900 மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த துடன் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கையொன்றையோ செயற்திட்டமொன்றையோ நிறைவேற்றுவதற்கு பணத்தை செலவிட்டிருக்கவில்லை. (2020) | | வெவ்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன | பணத்தை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது . |

**20. தலைப்பு 260 - பிரதான செயலாளர்**

---

| | | | |
|---|---|---|---|
| அடகு பிடிப்போரின் கட்டணங்களை அறவிடுவது தொடர்பாக சாசனமொன்று வரைவாக்கப்பட்டிருந்த போதும் அச்சாசனம் இதுவரை அமுலாக்கப்படாமையால் இவ்வருமான சேகரிப்பு ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. (2020) | மாகாண சபை கூட்டப்பட்டதன் பின்னர் சாசனத்தை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் சாசனம் வரைவாக்கப்பட்டிருந்த போதும் மாகாண சபை கூட்டப்படாமையால் சாசனத்தை அங்கீகரித்துக் கொள்ள முடியாமல் இருந்தது. | மாகாண சபை கூட்டப்பட்டதன் பின்னர் சாசனத்தை அங்கீகரித்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது |

**21. தலைப்பு 263 - மாகாண இறைவரித் திணைக்களம்**

---

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 123,036,518 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 99,085,915 தொகை முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை வருமான மீதியொன்றாக இருந்தது (2020) | நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த அறவீடுகள் திருப்திகரமான செயன் முன்னேற்றமொன்று அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை வரி மீதி ரூபா 89,320,911 வரை குறைவடைந்திருந் தது. |
| (ஆ) | மாகாண இறைவரித் திணைக்களத்தின் 2005 முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய மொத்தம் ரூபா 18,432,580 ஆன முத்திரைக் கட்டணங்களுக்குரிய 40 வழக்கு கோவைகள் மற்றும் 2003 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 10,535,353 ஆன 10 புரள்வு வரி வழக்கு கோவைகள் 2015 முதல் 2020 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அவ்வழக்குகளை தீர்வு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. (2020) | நிலுவை வரி அறவீடு தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு குறித்த வருமானத்தை அந்த ஆண்டுகளுக்குரிய அண்மித்த ஆண்டுகளில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முத்திரைக் கட்டணங்களுக்குரிய 40 வழக்கு கோவைகள் மற்றும் புரள்வு வரி தொடர்பாக வெளிக்கள பரிசோதனை மூலம் தகவல்களை தேடி எதிர்வரும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | முத்திரைக் கட்டணங்களுக்குரி ய 40 வழக்கு கோவைகள 15 கோவைகளின் முகவரிகளை தேடி வழக்கு தொழிற்பாட்டு மட்டத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது |

**கணக்காய்வாளர் நாயக மூவாண்டு நிலைமை அறிக்கை (2018,2019,2020)**

---

கணக்காய்வு நிறுவகத்தின் பெயர் சபரகமுவ மாகாண சபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானங்கள் | கணக்காய்வாளர் நாயகத்தின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு செயன்முறை | அது தொடர்பான தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| (01) | அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளாது பல வருட காலமாக செலுத்தப்படும் பேரூந்து வண்டிகள் தொடர்பான தகவல்களை கண்டறிவதில் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தோல்வி அடைந்திருந்தது. | ஓட்ட அனுமதிப் பத்திரம் பெறாது செலுத்தும் பேரூந்து வண்டிகள் தொடர்பான தகவல்களை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுத்து அதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளாது செலுத்தும் பேரூந்து வண்டிகள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க 2021 ஆண்டில் இரகசிய தகவல் அலகொன்று நிறுவப்பட்டுள்ளது. | இரகசிய தகவல் அலகின் மூலம் கண்டறிந்த தகவல்கள் மற்றும் எடுக்கப்படட நடவடிக்கைகள் அறிக்கையிடப் படவில்லை. |
| (02) | சபரகமுவ வீதிப் பயணிகள் போக்குவர்த்து அதிகார சபையினால் 2015 ஆண்டில் ரூபா 3,441,110 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிந்த பாதுகாப்பு கமரா தொகுதி 2019 மே 06 திகதி அளவில் செயற்படாது 0காணப்பட்டது. | குறித்த உபகரணங்களை பயன்படுத்த வேண்டும். | இரத்தினபுரி பேரூந்து தரிப்பிட வளவிலுள்ள கெமரா தொகுதியை திருத்தி தொடர்ந்து பயன்படுத்துவதுடன், கேகாலை பேரூந்து தரிப்பிட வளவிலுள்ள கெமரா தொகுதியை திருத்திய போதும் தொடரந்து பழுதடைவதால் fiber line முறை ஒன்றை செயற்படுத்தி சுமுக நிலைக்கு மாற்றிக் கொள்ளவுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது | கேகாலை பேரூந்து தரிப்பிட வளவிலுள்ள கமரா தொகுதி தொடர்ந்தும் செயலிழந்து காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (03) | கரவனெல்ல ஆதார வைத்திய சாலையில் வடிகாலமைப்பு முறைமையின் கழிவுநீர்த் தொட்டி மழையுடன் வடிந்தோடி நீர் மூலங்களுடன் கலப்பதனால் அத் தொகுதியை முறையாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே அந்த வடிகாலமைப்பு தொகுதிக்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரமும் பெற்றிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை பெற்று அத் தொகுதியை ஒழுங்கமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | வடிகால் தொகுதியை புதிதாக அமைக்க வேண்டியதால் தேவையான ஒதுக்கீட்டை பெற்றுக் கொள்ள 2021 அபிவிருத்தி திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்தது. | 2021 மூலத செலவு மட்டுப்படுத்தப் பட்டதன் கீழ் இந் நிர்மாணத்திற்கு உரிய ஒதுக்கீடு பதிவழிக்கப்பட்டிருந்தது. |
| (04) | மாகாண வீதி அமைச்சின் ஒதுக்கீட்டின் மீது கொலொன்ன பிரதேச சபையின் மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த 21 விளையாட்டு மைதானங்களின் அபிவிருத்தி செயற்திட்டங்களில் கொடுப்பனவு செய்யப்பட்ட வேலை விடயம் மூலம் நிவர்த்திக்கப்பட்டிருந்த குவிக்கப்பட்ட மண்ணை பரப்புதல் என்ற வேலை விடயம் மேலதிக வேலை விடயம் ஒன்றாக உட்படுத்தி 38,872 கனமீற்றர் மண்ணிற்காக கூட்டுத்தொகை ரூபா 5,928,010 தொகை மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டியதுடன் நட்டங்களை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆரம்ப புலன் விசாரணை நடவடிக்கைகளை நிவர்த்தி செய்து குறித்த அலுவலர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2022 ஜனவரி 31 வரை மேலதிக கொடுப்பனவு அறவிடப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (05) | சபரகமுவ மாகாண கல்வி அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 5,700,000 தொகை பெறுமதியான 3,000 சிறுவர்களுக்கான பெரிய கதிரைகள் கொள்வனவு செய்வதற்காக 2016 ஆம் ஆண்டின் போது தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. பண்டங்கள் ஒப்படைக்க வேண்டிய இறுதித் திகதி உடன்படிக்கையில் உட்படுத்தி இருக்காத போதிலும் பண்டங்களின் விவரக் குறிப்பு பதிவேட்டின் படி 2017 பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் பண்டங்கள் ஒப்படைக்க வேண்டி இருந்தது. 27 வாரங்கள் தாமத்தின் பின்னர் பண்டங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், கொடுப்பனவு தாமதித்ததால் பண்டங்கள் வழங்குவதில் காணப்பட்ட தாமதக் கட்டணம் ரூபா 570,000 தொகையினை அறவிட முடியாதிருந்தது. | உரிய அனைத்து நிபந்தனை களையும் உள்ளடக்கி உடன்படிக்கையை முறைப்படி தயாரித்து அதன்படி செயற்பட வேண்டும். | தவிர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வழங்குனரிடம ிருந்து அத் தொகையை அறவிட இயலாதிருந்த து. |
| (06) | சபரகமுவ மாகாண வீதி அமைச்சின் ஒதுக்கீட்டின் மீது எம்பிலிபிடிய பிரதேச சபையின் மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்பட்ட வேலை பெறுமதி ரூபா 1,970,667 ஆன பனாமுர பரவிகந்த பாதையின் 223 மீற்றர் நீளம் கொங்கிரீட் இடும் செயற்திட்டத்தின் | செயற்திட்டம் செயற்படுத்தப் படும் சந்தர்ப்பத்தில் முறையான மேற்பார்வை ஒன்று மேற் கொள்ளப்பட வேண்டும். | தொழிநுட்ப அலுவலர் மற்றும் ஒப்பந்ததாரரை அறிவூட்டி, அக் குறைபாடுகளை துரிதமாக சீர்செய்யுமாறு ஆலோசனை வழங்கியதாக எம்பிலிபிடிய பிரதேச சபை செயலாளரினால் அறிக்கையிடப்பட்டுள்ளது | எம்பிலிபிடிய பிரதேச சபை செயலாளரின ால் 2021 செப்தம்பர் 07 திகதி முன்வைக்கப்ப ட்ட அறிக்கையின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 1½ வருடங்கள் கழிவதற்கு முன்னர் முழுப் பாதையின் கொங்கிரீடுக்காக பயன்படுத்தப்பட்ட ¾ அங்குல கற்கள் வெளியே வந்திருத்தல் பாதையின் அடித்தளம் நியமங்களுக்கு ஏற்ப நிறைவேற்றப்படாமையால் 43 மீற்றர் பகுதியொன்றில் கொங்கிரீட் படையில் நீளப் பகுதியாக வெடிப்புக் கோடுகள் ஏற்பட்டிருந்தது. | | . இவ் வேலையின் குறைபாடுகளை சீர்செய்யாமை தொடர்பாக அறிக்கையொன்றை பெற்றுத் தருமாறு உள்ளூராட்சி பொறியியலாளரிற்கு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது. அவ்வறிக்கை கிடைத்த பின்னர் முன்நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்கிறேன். | தற்போது ஒரு இலட்சம் கிராம பாதைகளை காபட் இடும் கருத்திட்டத்தின் கீழ் இப் பாதையின் துவக்கத்திலிருந்து 1.7 கி.மீ வரை காபட் இட முன்மொழியப்பட்டுள்ளதாக மற்றும் தற்போது பாதையின் இரு பக்க புயங்கள் வெட்டப்பட்டு பாதையின் மீது மண் விழுந்துள்ளதால் பாதையின் மேற்பரப்பை அவதானிப்பது கடினமொன அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (07) | பலாங்கொட நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்திற்கு சொந்தமான அசையும் தளர் இயந்திரத்தை திருத்தம் செய்யாமையால் 05 வருடங்களுக்கு மேலாக எம்பிலிபிடிய நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்திற்கு | திருத்தம் மேற்கொண்டு பயன்படுத்த அல்லது பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பலங்கொட நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்தின் அசையும் தளர் இயந்திர திருத்த வேலைகளுக்கு அபிவிருத்தி ஆக்க மற்றும் இயந்திர உபகரண அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. | பலங்கொட நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்திற்கு சொந்தமான இயந்திரம் திருத்த முடியாத |

| | | | | |
|---|---|---|---|---|
| | சொந்தமான அசையும் தளர் இயந்திரம் 2016 ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | | எம்பிலிபிடிய நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்திற்கு சொந்தமான அசையும் தளர் இயந்திரம் தொடர்பாக பரிசோதித்து அறிக்கை சமர்பிக்க குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | நிலையில் உள்ளதெனின் மீள்கையேற்று முறையாக பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. எம்பிலிபிடிய நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்திற்கு சொந்தமான் இயந்திரம் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள குழு அறிக்கை கிடைத்திருக்கவில்லை. |
| (08) | கஹவத்த ஆதார வைத்தியசாலை வளவினுள்ளாக தனியார் பாதையொன்று அமைந்துள்ளதால் அதற்கருகில் அமைந்துள்ள வைத்தியசாலையின் பரிசோனைகூட கட்டிடம் மற்றும் குழைந்தை வாட்டிற்கு பாதுகாப்பு தொடர்பாக பிரச்சினையாகவுள்ள அவ் வைத்தியசாலைக்கு சொந்தமான காணியின் ஒரு பகுதி | வைத்தியசாலை காணியை தீர்த்து வைத்தியசாலை கட்டிடத்திற்கு போதிய பாதுகாப்பை வழங்க வேண்டும். | அயலிலுள்ள வதிவாளர்களுக்கு வைத்தியசாலை ஊடாக பயணம் செய்யாது வைத்தியசாலை எல்லையோடு பயணிக்க பாதையொன்றை நிர்மானிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | பாதையை நிர்மாணிக்க எல்லை குறியீடுகள் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதனங்களை தீரத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வெளிதரப்பினரால் சுவீகரிக்கப்பட்டுள்ள போதும், அவ்வாதனத்தை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | |
| (09) | புஸ்ஸெல்ல ஆயுர்வேத வைத்தியசாலை வளவில் பிரதான பாதைக்கு முகப்பாக அனுமதியற்ற நிர்மாணம் செய்யப்பட்டுள்ளதுடன், காணியின் வேலி எல்லைகளை அமைத்து காணி உறுதி அல்லது வேறு அனுமதிப்பத்திரமொன்றை பெற்று காணியின் உரிமையை உறுதி செய்து கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வைத்தியசாலை சொத்துக்களை இனங்கண்டு ஆவணப்படுத்தப்பட வேண்டும். | வேலி எல்லைகள் மற்றும் மதில் நிர்மாணிக்கும் போது அளவை தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சை நிலைமை காரணமாக மீண்டும் அளவை வேலைகளை செய்து தருமாறு மாகாண காணி ஆணையாளரிடம் கோரப்பட்டுள்ளது. காணியை துப்பரவு செய்து அனைத்து வேலி எல்லைகளை தெளிவாக வைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும், எதிர்காலத்தில் நிறுவனத்தின் சொத்துக்களிற்கு ஏதேனும் தீங்கு அல்லது நட்டம் ஏற்படுமாயின் அதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கவும் புஸ்ஸெல்ல ஆயுர்வேத வைத்தியசாலைக்கு பொறுப்பான வைத்திய அலுவலரிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | காணி அளவை வேலைகள் மீண்டும் செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (10) | இர/எம்பிலிபிடிய மகா வித்தியாலயத்தினால் பரிந்துரைத்தல், அங்கீகரித்தல் மற்றும் உறுதி செய்யாது 2018 ஆண்டில் ரூபா 1,752,019 கூட்டுத் தொகையான 105 வவுசர்கள் மற்றும் 2019 ஜனவரி முதல் ஜுன் 26 வரை 25 கொடுப்பனவு வவுசர்கனின் கூட்டுத் தொகை ரூபா 467,994 பாடசாலை அபிவிருத்தி சங்க கணக்கிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது அவ்வாறே பரிந்துரைத்தல், அங்கீகரித்தல் மற்றும் உறுதி செய்யாது வவுசர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படுவதில்லை. | கணக்காயவினால் சுட்டிக் காட்டியதன் பின்னரும் அத் தவறுகளை சரிசெய்திருக் கவில்லை. |
| (11) | சபரகமுவ வீதி பயணிகள் அதிகார சபை பயன்படுத்திக்கொண்டிருக்கும் கேகாலை மாவட்டத்தில் 07 செயலகப் பரிவுகளில் காணப்படும் ஏக்கர் 4.094 காணி மற்றும் அவற்றில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து சுவீகரித்துக் கொண்டு மதிப்பிட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | காணி மற்றும் கட்டிடங்களை சுவீகரித்துக் கொண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | அதிகார சபைக்கு சொந்தமான 4.094 ஏக்கர் அளவான காணியை சுவீகரிக்கும் நடவடிக்கை தற்போது கேகாலை மாவட்ட செயலாளரூடாக மேற்கொள்ளப்படுகின்றது. | 2021 திசெம்பர் 31 திகதி அளவிலும் சுவீகர்த்திருக் கவில்லை. |
| (12) | 2014 திசெம்பர் 30 திகதிய 03/2014 இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 03(vii) பந்தி பிரகாரம் அலுவலர் ஒருவரின் நிறந்தர பதவிக்கு மேலதிகமாக வேறொரு பதவியில் பதில் கடமைக்கு அல்லது கடமை காப்பிற்கு நியமிக்கப்பட்டுள்ள போது | சுற்றறிக்கை பிரகாரம் கொடுப்பனவு செய்ய வேண்டியதுடன், மிகை கொடுப்பனவை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிறுவன ரீதியான நிதி இடர் நிலைமை காரணமாக 2019 ஆண்டிலிருந்து படிகள் செலுத்தப்படுவதில்லை. | மிகை கொடுப்பனவு அறவிடப்பட்டி ருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் 02(iii)(ஆ) இன் கீழ் உரித்தாகும் தொலைபேசி படியாக கொடுப்பனவு செய்ய முடியுமாவது ஒரு பதவியிற்கு உரித்தாகும் மாதாந்த உச்ச இணைந்த செலவு எல்லையின் கீழான போதும், அதற்கு முரணாக சபரகமுவ இபரனிகம தேமா பூங்காவின் தவிசாளர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு 2017 முதல் 2019 ஜுன் வரை தொலை பேசி படிகள் முறையே ரூபா 87,500 மற்றும் ரூபா 100,000 மிகையாக செலுத்தப்பட்டிருந்தன. | | | |
| (13) | றமுக்கன நிறைவேற்று பொறியல் அலுவலகம் அமைந்துள்ள 1.9263 ஹெக்டயார் அளவான காணியிலிருந்து 0.6867 ஹெக்டயார் அளவான 11 காணித்துண்டுகள் அனுமதியற்ற குடியிறுப்பாளர்களால் கைப்பற்றப்பட்டிருந்தன. அரச வேலை திணைக்களத்திற்கு சொந்தமாக இருந்த இக்காணியை 1987 ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகார சபையிற்கும் அதன் பின்னர் பிரதி பிரதான செயலாளர் (பொறியில் சேவை) அலுவலகத்திற்கும் முறையற்ற விதத்தில் | பிரதி பிரதான செயலாளர் (பொறியில் சேவை) அலுவலகத்தின் கீழ் காணப்படும் நிறுவனங்கள் பராமரிக்கும் காணிகளை, மாகாண சபையிற்கு சுவீகரிக்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | இக் காணியை அளவையிட மாகாண காணி ஆணையாளரிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. காணியின் அளவை வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது . அவ் அளவைகளுக்குரிய திட்டம் கிடைத்த பின்னர் காணியை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | அனுமதியற்ற வதிவாளர்களை 2021 திசெம்பர் வரை அகற்றியிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் சுவீகரித்தல் நடவடிக்கைகள் இது வரை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | | | |
| (14) | எம்பிலிபிட்டிய பிரதேச செயலக பிரிவில் 1995 முதல் அனுமதியின்றி பயன்படுத்தும் ஹெக்டயார் 9.9123 ஆன அரச காணியை நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்க காணி ஆணையாளர் நாயகம் மற்றும் அமைச்சர் முறையே 2011 மற்றும் 2016 ஆண்டுகளில் அங்கீரித்திருந்தனர். 2020 ஜனவரி 13 திகதி வரையும் குறித்த காணியை பயன்படுத்தும் 04 நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 10,451,432 நிலுவை குத்தகை பணத்தை அறவிட்டு நீண்ட கால குத்தகை உருதிப்பத்திரம் ஒன்றை வழங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விரைவில் குத்தகை உருதிப்பத்திரம் ஒன்றை வழங்கி குத்தகை பணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 03 நபர்கள் அறிவூட்டப்பட்டனர். அதன் பிரகாகரம் எதிர்காலத்தில் குத்தகை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். ஏனைய நிறுவனங்களிற்காக காணி ஆணையாளர் நாயகத்தினால வழங்கப்பட்ட ஆலோசனை பிரகாரம் மீண்டும் மதிப்பீட்டறிக்கை கோரப்பட்டுள்ளது. | குத்தகை செலுத்துவது தொடர்பாக ஒருமைப்பாடு இல்லாததால் 03 நபர்கள் குத்தகை செலுத்துவதில்லை. ஏனைய நிறுவனங்களிற்கான மதிப்பீட்டறிக்கை கிடைக்காததால் இது வரை குத்தகை பணம் அறவிட முடியாதுள்ளது. 2021 ஜூலை 28 திகதியிலும் மதிப்பீட்டறிக்கை கோரி கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. |
| (15) | சபரகமுவ கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தினால் 1997 ஆண்டு முதல் 2009 ஆண்டு வரையான காலத்தினுள் 07 கூட்டுறவு சங்கங்களிற்கு | நிலுவை கடன் மற்றும் வட்டியை அறவிட முறையான செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். | கடன் தொகையை செலுத்துமாறு குறித்த சங்கம் வாய் மூலம் மற்றும் எழுத்து மூலம் அறவூட்டப்பட்டுள்ளதுடன், செயலிழந்துள்ள | 2021 திசெம்பர் 31 திகதி அளவில் 02 சங்கங்கள் மாத்திரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்த கடன் தொகையிலிருந்து 2019 திசெம்பர் 31 திகதிக்கு அறவிட வேண்டிய கடன் மீதி மற்றும் வட்டி முறையே ரூபா 4,456,444 மற்றும் ரூபா 6,536,961 ஆனதுடன், அக் கடனை அறவிட முறையான செயற்பாடொன்றை மேற்கொண்டிருக்கவில்லை. | | சங்கங்களை முடிவுறுத்தி அதன் மூலம் கடனை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ரூபா 1,092,719 வட்டி செலுத்தியிருந் தன. |
| (16) | 2014 நவம்பர் 28 ஆம் திகதிய சமுரகமுவ மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளரின் 03/2012(1) ஆம் இலக்க சுற்றறிகையினூடாக உள்ளூராட்சி நிறுவனங்களின் நகர முதல்வர்கள் மற்றும் தவிசாளர்களுக்கு ரூபா 5,000 எல்லையின் கீழ் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவொன்று வழங்குவதை அங்கீகரித்திருந்தது. உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதானிகளுக்கு ஒவ்வொறு சபைகளினாலும் அங்கீகாரிக்கப்பட்ட எரிபொருன் லீட்டர் அளவொன்று மாதாந்தம் கொடுக்கப்படுகையில் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி நிறுவனங்களின் நகர முதல்வர்கள் மற்றும் தவிசாளர்களுக்கு அங்கீகாரிக்கப்பட்ட எரிபொருள் அளவொன்றை மாதாந்தம் வழங்குவதனால் அதற்கு மேலதிகமாக எரிபொருள் கொடுப்பனவொன்று செலுத்துவது முறையற்றது. | தடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2018 ஆண்டு முதல் 2022 பெப்ரவரி வரை குறித்த சுற்றறிக்கையி ன் அங்கீகாரத்தி ன் கீழ் 06 பிரதேச சபைகள் தவிசாளர்களு க்கு கூட்டுத் தொகை ரூபா 755,000 இனை மாதாந்த எரிபொருள் படிகளாக செலுத்தப்பட்டி ருந்தன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (17) | வேலைப் பெறுமதி ரூபா 120,710,188 ஆன புஸ்செல்ல பயிற்சி மத்திய நிலையத்தின் புதிய ஐந்து மாடி விடுதியை நிர்மாணிக்கும் வேளைகள் தொடர்பாக அரச பெறுனர் வழிகாட்டிக் கோவை – 2006 இன் 5.4.8(அ) வழிகாட்டி பிரகாரம் ரூபா 6,035,509 இற்கான செயலாற்றுகை முறியொன்றைப் பெற்றிருக்காததுடன், 5.4.4(i) வழிகாட்டியிற்கு முரணாக ஒப்பந்தத் தொகையின் 35 சதவீதமான ரூபா 42,248,566 இனை முற்பணமாக செலுத்தியதில் ரூபா 18,106,528 மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. 2020 ஒக்டோபர் 19 திகதி வரை செலுத்தியிருந்த இடை பட்டியல்களிலிருந்து ரூபா 17,546,238 தொகை முற்பணமாக அறவிடப்பட்டு இருந்ததுடன், மேலும் ரூபா 24,702,328 தொகை அறவிட வேண்டியதாக காணப்பட்டது. மேலும், 2020 ஜுன் 24 திகதி வரையிலும் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் ஒப்பந்தக்காரரினால் நிர்மாணப் பணிகள் | அரச பெறுனர் வழிகாட்டிக் கோவை பிரகாரம் ஒப்பந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஒப்பந்ததாரரினால் நிர்மாணப் பணிகளை இடை நடுவே நிறுத்தியது தொடர்பில் ஒப்பந்தக்தாரர் மற்றும சபரகமுவ மாகாண சபைக்கிடையில் தற்போது மாகாண சபைக்கு அறவிட வேண்டிய பணத்தை அறவிடவும், இவ்வேலையின் எஞ்சிய வேலையை ரூபா 55 மில்லியன் பெறுமதியான புதிய மதிப்பீடொன்றை தயாரித்து வேறு பொருத்தமான தரப்பினரிற்கு பெறுனர் நடைமுறைக்கமைய ஒப்படைத்து மேற்கொள்ளவும், இணக்கப்பாட்டு ஒப்பந்தமொன்றை தயாரித்து பிரதான செயலாளரிற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்ததாரரிட மிருந்து மாகாண சபைக்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடவும் பொருத்தமான தரப்பினரிற்கு மீண்டும் ஒப்பந்தத்தை ஒப்படைக்கவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இடைநடுவே நிருத்தப்பட்டிருந்தன. | | | |
| (18) | சபரகமுவ மாகாணத்தில் சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கில் மாகாண வீதி இமைச்சினால் 2014 முதல் 2018 ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ரூபா 2,030,475 செலவில் சீலோகம சமுதாய சுற்றுலா கிராமத்தில் சுற்றுலா விடுதிக்காக உபகரணங்களை வழங்கல் மற்றும் கட்டிடம் நிர்மாணித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது போதும் குறித்த நோக்கத்திற்காக அவ் உபகரணங்கள் / கட்டிடம் பயன்படுத்த்பபட்டிருக்கவில்லை | எதிர்பார்த்த நோக்கம் செயற்படுத்தப்படுகின்றனவா என்பது தொடர்பாக முறையான மேற்பார்வை ஒன்று செய்யப்பட வேண்டும். | இவ் உபகரணத்தை குறித்த நோக்கம் நிறைவேறும் விதத்தில் பயன்படுத்துமாறு சமூக சுற்றுலா அமைப்பின் அங்கத்தவர்களை அறிவூட்டியுள்ளதுடன் மேற்பார்வை மற்றும் பின்னூட்டலை தொடர்ந்தும் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொற்று நிலைமையுடன் சுற்றுலா கைத்தொழில் தடைப்பட்டதன் காரணமாக இச் சமூக சுற்றுலா கிராமத்தின் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது. கிராமத்தினுள் வேலைத்திட்டங்கள் எதுவும் நடைபெறாததால் கட்டிடம் தொடர்ந்து பயன்படுத்தப்படாத போதும் கிராமத்தின் சமுதாய அடிப்படை சங்கங்களின் மாதாந்த கூட்டம் போன்றவற்றிற்காக அக் கட்டிடம் பயன்படுத்தப்படுகின்றது. |
| (19) | காணி ஆணையாளரின் 1996 ஆகஸ்ட் 01 திகதிய 96/5 கொண்ட சுற்றறிக்கையின் 6.1 பந்தி | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவை குத்தகை பணத்தை அறவிட | வருடாந்த நிலுவை குத்தகையை அறவிட துரிதமாக்குமாறு முன்னேற்ற மீளாய்வுக் | 2021 ஒக்டோபர் 31 திகதியளவில் நிலுவை |

| | | | |
|---|---|---|---|
| பிரகாரம் வருடாந்த காணி குத்தகை பணம் ஏதேனும் ஒரு வருடத்தில் ஜனவரி 01 திகதி அல்லது அதற்கு முன்னர் அறவிட வேண்டிய போதும் இரத்தினபுரி மாவட்டத்தில் 17 பிரதேச செயலகங்களில் 2020 திசெம்பர் 31 திகதியன்று கூட்டுத் தொகை ரூபா 35,430,569 ஆன வருடாந்த குத்தகை பணம் மற்றும் ரூபா 8,270,056 ஆன தண்டப் பணம் நாளாதுவரையாக அறவிட சபரகமுவ மாகாண பிரதான செயலாளரினால் நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அச் சுற்றறிக்கையின் 7(1) பந்தி பிரகாரம் குத்தகை செலுத்துதலை புறக்கணித்துள்ள சந்தர்ப்பங்களில் காணியின் உடமையை மீள் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>அவ்வாறே, குறித்த சுற்றறிக்கையின் 6.11 பந்தி பிரகாரம் இரத்தினபுரி மாவட்டத்தில் 03 பிரதேச செயலகங்களில் மற்றும் கேகாலை மாவட்டத்தில் 03 பிரதேச செயலகங்களில் 2020 திசெம்பர் 31 திகதியன்று கூட்டுத்தொகை ரூபா 7,159,607 ஆன நிலுவை நீண்ட கால குத்தகை பணம் மற்றும் தண்டப்பணத்தை | வேண்டும். | கூட்டங்களில் குறித்த அலுவலர்களிற்கு ஆலோசனை வழங்கியுள்ளதுடன் அடிக்கடி அது பற்றி விசாரித்து நிலுவை குத்தகையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொறு பிரதேச செயலக பிரிவுகளிற்குமுரிய நிலுவை நீண்டகால குத்தகையை அறவிட குத்தகைதாரர்களிற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. சட்ட நடவடிக்கை எடுக்க கலந்துரையாடல் நடாத்துவ மற்றும் நிலுவை குத்தகை அறவிடுவது தொடர்பாக காணி ஆணையாளர் நாயகத்திடமிருந்து ஆலோசனை கோரப்பட்டுள்ளது. | வருடாந்த குத்தகை தொகையிலிருந்து ரூபா 3,415,452 தொகை மற்றும் நிலுவை தண்டப்பணத்திலிருந்து ரூபா 663,384 தொகையும் சேகரிக்கப்பட்டுள்ளது. பலங்கொட மற்றும் கேகாலை பிரதேச செயலகங்களினூடாக நிலுவை நீண்டகால குத்தகை ரூபா 985,850 அறவிடப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நாளாதுவரையாக அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | |
| (20) | 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் 09 ஆவது அட்டவணையின் முதலாம் பட்டியலில் 36.12 இன் கீழ் மாகாண சபைக்கு ஒப்படைக்கப்பட்ட மற்றும் 1995 பெப்ரவரி 20 திகதிய அங்கீகாரம் கிடைத்த, சபரகமுவ மாகாண சபையின் 1994 இலக்கம் 10 கொண்ட நிதி (மீள்நிரப்பு ஏற்பாடு) பிரகடனத்தின் எனைை ஆவது அத்தியாயத்தின் 13 பிரிவின் பிரகாரம் வனசீவராசிகள் மற்றும் தாவர பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் கீழ் அறவிடப்படும் கட்டணமாக உடவளவ தேசிய பூங்காவின் உட்பிரவேச கட்டணம் சபரகமுவ மாகாண சபைக்கு அறவிடப்பட வேண்டும். அவ்வாறே வனசீவராசிகள் பாதுகாப்பு பணிப்பாளரின் இலக்கம் வசீ/2/11/2 மற்றும் 2002 ஜுன் 26 திகதிய கடிதமூடாக 2001 ஒக்டோபர் முதல் உடவளவ பூங்கா கட்டணத்திலிருந்து வனசீவராசிகள் நிதியத்திற்கு செலவு வைக்கப்படும் 50 சதவீதம் தவிர மீதியின் 40 சதவீதம் சபரகமுவ மாகாண சபைக்கு செலவு வைப்பதாகவும் அப் பணம் | வனப்பூங்காவின் உட்பிரவேச கட்டணத்தை தினந்தோறும் சபரகமுவ மாகாண சபை நிதியத்திற்கு வரவழைத்துக் கொள்ளவும் 2001 ஆண்டு முதல் நிலுவையாகவுள்ள பணத்தை பெற்றுக் கொள்ளவும் செயற்பட வேண்டும். | இப் பணத்தை பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்குமாறு வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் 2013 ஆண்டு முதல் கோரிக்கை விடுத்துள்ளதாக. | இப் பணத்தை பெற்றுக் கொள்ள வனசீவராசிகள் திணைக்களம் மற்றும் திறைசேரியிடம் மீண்டும் விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக. |

| | | | | |
|---|---|---|---|---|
| | திறைசேரியால் மாகாண சபைக்கு அனுப்புவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறாயினும் 2001 ஒக்டோபர் முதல் 2007 நவம்பர் வரையான காலத்திற்குரிய ரூபா 24,956,756 மற்றும் 2007 திசெம்பர் முதல் 2020 திசெம்பர் 31 வரை அறவிட வேண்டிய பணத்தை வனசீவராசிகள் திணைக்களத்தினால் அல்லது திறைசேரியினால் மாகாண சபைக்கு வழங்கியிருக்கவில்லை. | | | |
| (21) | சபரகமுவ மாகாண பிரதான அமைச்சினால் கையியந்திரம் மூலம் புடவை உற்பத்தியை விரிவாக்கவும் கிராமிய பெண்களுக்கு வேளைவாய்ப்பை உருவாக்கும் நோக்கில் 2017 ஆண்டில் ரூபா 9,219,299 செலவில் கேகாலை நெசவுக் கைத்தொழில் கட்டிடத்தின் மேல் மாடியை நிர்மாணித்து ம/ப கேகாலை நெசவுத் தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கத்திற்கு 2017 திசெம்பர் 25 திகதி ஒப்படைத்திருந்த போதும் அக் கட்டிடம் 02 வருடங்களாக பயன்படுத்தப்படாது காணப்பட்டதுடன், அச் சங்கத்தினால் 2020 ஜனவரி | i. வரையறுக்கப்பட்ட கேகாலை நெசவுத் தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கத்திற்கு இதனை செயற்படுத்த முடியாமைக்கான காரணத்தை கோரி ஏதேனும் அலுவளரின் கைத்தவறு ஏற்பட்டிருந்தால் அவ் அலுவளர் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br>ii. தாமதமின்றி இக் கட்டிடத்தை அமைச்சின் எதிர்பார்த்த நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த வேண்டும். | அதிசக்திவாய்ந்த இயந்திர கொள்வனவிற்காக போதிய நிதி வளம் சங்கத்திற்கு இல்லாததால் அதற்காக கூட்டுறவு அபிவிருத்தி சங்கத்திடம் கடன் கோரப்பட்டுள்ளது. சங்கத்தில் ரூபா 32 இலட்சம் அளவான கடன்படுனர் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | மதிப்பிற்குரிய ஆளுனரினால் கடன் தொகை வழங்குவதை அங்கீகரித்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 01 திகதி முதல் தனியார் சர்வதேச பாடசாலையொன்றிற்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், மேல் குறிப்பிடும் செலவில் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை. | | | |
| (22) | ஜய்கா மாகாண வீதி அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 29,900,000 ஆன 02 முற்கலவை பரப்பும் உற்பத்தி இயந்திரங்கள் 2015 ஆண்டு சகரகமுவ அபிவிருத்தி ஆக்க மற்றும் இயந்தி உபகரண அதிகார சபைக்கு கிடைத்திருந்ததுடன், இவ் இயந்திரங்களை பொறுப்பேற்ற திகதி முதல் பயன்படுத்தியிருக்காததுடன், 2021 ஏப்ரல் 09 திகதியளவில் இவ் இயந்திரங்களை உரியமுறையில் பராமரிக்காததால் அழிவடைந்து காணப்பட்டன. மேலும் இவ் இயந்திரங்களில் பாதுகாப்பிற்கு ஈடுபடுத்திய மூன்று காவளர்களிற்காக மீளாய்வாண்டில் ரூபா 699,100 ஆன சம்பளம்வழங்கப்பட்டிருந்த | பயன்படுத்த அல்லது அவ்வாறு செய்ய முடியாதெனில் பராதீனம் செய்ய வேண்டும. | மதிப்பிற்குரிய ஆளுனரினால் இரண்டு இயந்திரங்களையும் பாதை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த முடியுமா என்பது தொடர்பில் பாதை அபிவிருந்தி இராஜாங்க அமைச்சருடன் கலந்துரையாடல் நடாத்தப்படுகிறது. | 2021 திசெம்னர் அளவிலும் இவ்வியந்திரங் கள் பயனற்று காணப்பட்டன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (23) | 2020 ஆண்டினுள் பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தினால் கூட்டுத் தொகை ரூபா 13,451,196 செலவில் 17 நிறுவனங்களில் காணப்பட்ட ஒரே மாதிரியான நிர்மாணம் / திருத்த வேலைகளை சிறிய 95 பிரிவுகளாக வேறாக இனங்கண்டு மேற்கொண்டிருந்ததாக 21 நிறுவனங்களிற்குரிய நிர்மாணம் / திருத்த வேலைகளின் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அங்கு பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க விலை மணு கோரி ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்படாது பிரதேச சுகாதார சேவை பணிப்பாளரின் அல்லது குறித்த நிறுவன தலைவரின் பரிந்துரையின் பெயரில் தெரிவு செய்யப்பட்ட நபர்களைக் கொண்டு குறித்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.2.1(அ) வழிகாட்டி பிரகாரம் அரசிற்கு பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்த கிரய நன்மைகள் இழக்கப்பட்டுள்ளதாகவும், 1.2.1 (இ) வழிகாட்டி | பெறுனர் வழிகாட்டி பிரகாரம் அரசிற்கு உச்ச கிரய நலன்கள பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் ஒப்பந்தத்தை ஒப்படைக்க வேண்டும். | தடுப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போதும் கணக்காய்வு பந்தியில் குறிப்பிடப்படும் நடைமுறையையே கடைபிடிக்கப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரகாரம் தகைமையுடன், ஆர்வமுள்ள தரப்பினருக்கு பெறுகை நடைமுறையிற்கு சமுகமளிக்க சமமான மற்றும் உச்ச சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | | | |
| (24) | சபரகமுவ மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட ரூபா 19,692,264 ஆன வியாபார கடன்படுனர்களில் கூட்டுத்தொகை ரூபா 1,549,130 ஆன 18 கடன்படுனர் மீதிகள் 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாகவும் கூட்டுத்தொகை ரூபா 565,268 ஆன 07 கடன்படுனர் மீதிகள் 10 ஆண்டுகளிற்கும் அதிக காலமாகவும் நிலுவையாக உள்ளன. | நிலுவை கடன்படுனர் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் குறித்த கடன்படுனர்களிற்கு கடிதம் மூலம் ஆவணரீதியாக அறிவித்தல் மற்றும் கடன் அறவிடும் வேலைத்திட்டத்தை செயற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. | 2022 ஜனவரி 31 வரை அறவீடு செய்யப்படவில்லை. |
| (25) | 1994 இன் 04 இலக்க சபரகமுவ மாகாண சபையின் சமூகசேவை நிதியத்தை உருவாக்குவது தொடர்பான பிரகடனத்தின் 06 ஆம் பிரமாணத்தின் மூலம் குறிப்பிட்டதன் பிரகாரம் உதவியற்ற மற்றும் ஊனமுற்ற பிள்ளைகளிற்காக வழங்க முடியுமான போசாக்கு மற்றும் கல்வி நிவாரணம் வழங்க நிதியம் நடவடிக்கை | பிரகடனம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவை திணைக்களத்தினால் குழந்தைகளிற்காக போசாக்கு மற்றும் கல்வி உதவி வழங்குவதால் வைத்திய ரீதியான காரணங்களுக்காக சமூக சேவை நிதியம் உதவி வழங்க கூடுதல் விருப்பம் காட்டுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | 2021 திசெம்பர் 31 வரை நிதியம் உதவியற்ற மற்றும் ஊனமுற்ற குழந்தைகளின் நலன்புரிக்காக பயன்படுத்தியிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எடுத்திருக்காததுடன், மீளாய்வாண்டு இறுதியில் நிதியத்தின் பண மீதி ரூபா 77,943,752 ஆனது. | | | |
| (26) | கே/அபேபுஸ்ஸமகாவித்திய ாலயத்தின் தொழிநுட்ப கட்டிடத்தை நிர்மாணிக்க சபரகமுவ மாகாண கல்வி அமைச்சினால் 2017 ஜனவரி 23 திகதி தனியார் நிறுவனமொன்றுடன் ரூபா 20,833,115 ஆன வேலைப் பெறுமதிக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கை பிரகாரம் 2017 ஒக்டோபர் 15 திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி வரை வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், ரூபா 1,041,656 ஆன செயல் நடவடிக்கை பிணைமுறி 2019 ஒக்டோபர் 18 திகதி காலாவதியாகி இருந்தது. மேலும், ரூபா 6,249,934 முற்பணமாக செலுத்தியிருந்ததுடன்அவற் றில் ரூபா 4,066,315 இனை தீர்த்திருக்கவில்லை. எவ்வாறாயினும் முற்பண பிணைமுறியும் 2020 மார்ச் 31 திகதி காலாவதியாகியிருந்தது. | ஒப்பந்த தாமதங்கள் தொடர்பாக பெறுனர் வழிகாட்டிக் கோவை பிரமானங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிர்மாண பணிகளை நிறுத்தியுள்ளதுடன், மேலும் அறவிட வேண்டிய முற்பணமான ரூபா 2,662,741 இனை தீர்க்க மாகாண சபை சட்டப் பிரிவிடம் சட்ட ஆலோசனை கோரி தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | சட்டப் பிரிவின் ஆலோசனை கிடைத்தவுடன் உடனடியாக இவ் வேலையை ஒருதலைபட்ச மாக இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்டுகிற து. |
| (27) | பலங்கொட, எம்பிலிபிடிய, நிவித்திகல, தெஹிஓவிட்ட, மாவனல்ல மற்றும் கேகாலை கல்வி வலையங்களில் ஒரே | அதிபர் சேவையின் இடமாற்றம் காலரீதியாக செய்யப்பட வேண்டும். | அதிபர் இடமாற்ற கொள்கையை தயாரித்து மதிப்பிற்குரிய ஆளுனரிற்கு முன்வைக்கப்பட்டிருந்தது. | அதிபர் இடமாற்ற கொள்கையை மதிப்பிற்குரிய ஆளுனர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பாடசாலையில் 15 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய 54 அதிபர்களும், 10 ஆண்டுகளிற்கும் 15 ஆண்டுகளிற்குமிடையிலான காலம் சேவையாற்றிய 86 அதிபர்களும், 08 ஆண்டுகளிற்கும் 10 இற்குமிடையிலான கால வீச்சளவில் சேவையாற்றிய 130 அதிபர்களும் இடமாற்றம் பெறாது தொடர்ந்தும் சேவையில் ஈடுபட்டிருந்தனர். | | | அங்கீகரித்த உடனே அதிபர் இடமாற்ற ஒழுங்குமுறையை நடைமுறைப்படுத்த வலய மட்டத்தில் தகவல்களை தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (28) | கலவான பிரதேச செயலக பிரிவின் குகுளேகம வடக்கு மற்றும் தபஸ்தரகந்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் முறையே ரூட் 03 மற்றும் ஒரு ஏக்கர் விசாலமான 02 காணிகள் வருடாந்த அனுமதிப்பத்திரம் மூலம் மற்றும் ஜயபூமி உரிதியின் மூலம் தனியார் தரப்பினருக்கு வழங்கியிருந்ததுடன், அத்தரப்பினரால் காணிகளிலிருந்து முறையே 15 பர்சஸ் மற்றும் 20 பர்சஸ் காணித்துண்டுகளை தனியார் நிறுவனமொன்றின் தொலை தொடர்பு கோபுரம் நிர்மாணிக்க 10 வருடங்களுக்கு குத்தகை வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மாகாண | பிரதேச செயலாளரைக் கொண்டு காணி ஆணையாளரின் கட்டளையை நடைமுறைப்படுத்த வேண்டும். | குகுளேகம வடக்கு தொலை தொடர்பு கோபுரம் தொடர்பாக கலவான பிரதேச செயலாளரினால் உள்ளூராட்சி நிறுவனத்தின் மற்றும் மொபிடல் நிறுவனத்தின் ஒறுமைப்பாட்டை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்துள்ளதுடன், நிலுவை குத்தகை தொடர்பாக துரித நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கலவான பிரதேச செயலாளரிற்கு அறவிக்கப்பட்டுள்ளது. தபஸ்தரகந்த தொலை தொடர்பு கோபுரம் நிர்மாணிப்பது தொடர்பாக பிரதேச சபையின் ஒருமைப்பாட்டுடன் மாத்திரம் | குறித்த கடிதம் பிரகாரம் ஒப்படை பத்திரத்தை அரசிற்கு பொருப்பேற்று காணித் துண்டை குறித்த நிறுவனத்திற்கு நீண்ட கால அனுமதிப்பத்திரத்தின் கீழ் வழங்கியிருக்கவில்லை. |

காணி ஆணையாளரின் 2012 செப்டம்பர் 27 திகதிய இலக்கம் பீஎல்சீ 10 கொண்ட கடிதம் மூலம் கலவான பிரதேச செயலாளரிற்கு ஒப்படைப் பத்திரத்தை அரசிற்கு பொறுப்பேற்கவும் தொலை தொடர்பு கோபுரம் நிர்மாணிப்பதுடன் தொடர்பான காணித் துண்டுகளை நீண்ட கால அனுமதிப்பத்தரம் மூலம் அந் நிறுவனங்களிற்கு பெற்றுக் கொடுக்க உத்தேசம் முன்வைக்குமாறு அறிவித்திருந்த போதும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

செயற்பட்டுள்ளது. ஒப்படைப் பத்திரத்தை இரத்துச் செய்ய அரசிற்கு ஒப்படைக்குமாறு அறிவித்த போதும் பதில் கிடைக்காதன் மீது குறித்த காணித்துண்டை அளவையிட்டு வேறாக்குவதற்காக அளவை கோரிக்கையொன்று அனுப்பப்பட்டுள்ளது.

**கணக்காய்வு மூன்று வருட நிலை அறிக்கை ( 2018, 2019, 2020 )**

கணக்காய்வு பிரதேச பெயர் :- மத்திய மாகாண சபை

நிதி வெளியீடு தொடர்பான கணக்காய்வாளரின் கருத்து

2018 - நிபந்தனை உட்படுத்தப்பட்ட கருத்து

2019 - நிபந்தனை உட்படுத்தப்பட்ட கருத்து

2020 - நிபந்தனை உட்படுத்தப்பட்ட கருத்து

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வாளரின் பரிந்துரை | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தவிர்க்கும் நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| 1. | **கணக்கியல் குறைபாடுகள்** | | | |
| (அ) | 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு 07 நிறுவனங்களின் ஒட்டுமொத்த பெறுமதி ரூபா.2,671,198யில் தீர்க்கப்படாத இறுதி இருப்புகள் காணப்பட்டன. | இறுதி இருப்பின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 06 இறுதி இருப்புகள் முழுமையாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளது | 07 நிறுவனங்களில் ஒரு நிறுவனத்திற்குரிய ரூபா. 299,247 க்கான இறுதி இருப்பு தொடர்பாக தீர்வு காணப்படவில்லை. |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டு தொடக்கம் ஒட்டு மொத்தம் ரூபா. 26,000,000 செலவலித்து கட்டப்பட்ட மத்திய மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களம் அமைந்துள்ள கட்டிடம் 2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைமை வெளியீட்டில் நிதி தொடர்பற்ற சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இக் கட்டிடம் தொடர்பான நிதி நிலைமை வெளியீட்டில் சொத்தாக கணக்கிடப்பட வேண்டும். | பற்றுச் சீட்டுக்கான கொடுப்பனவு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டதனால் பெறுமதியினை கணக்கிடுவதற்கு முடியவில்லை என தெரிவித்துள்ளனர். | 2020 ஆம் ஆண்டுக்கான கட்டிடத்திற்கான பெறுமதியினை கணக்கிடப்பட வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | மத்திய மாகாண ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலைமை வெளியீட்டின் கைப்பேசி பொறுப்பின் கீழ் 2020 ஆம் ஆண்டு இறுதியில் பொது கணக்கின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கண்டறியப்படாத நிச்சயிக்கப்படாத இருப்புகள் ரூபா.832,955 ஆகும். | வழங்கப்படவேண்டிய இடமாற்றம், கடன் இருப்பு மற்றும் நிச்சயிக்கப்படாத இருப்புகள் கண்டறியப்பட்டு சரியாக்கப்பட வேண்டும். | மாகாணங்களுக்கிடையிலான பொது கணக்கின் ரூபா.1,129,703 க்கு இருப்புகள் காணப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டு இக் கடன் இருப்புகள் ரூபா.296,748 சரி செய்த பின் பொது கணக்கின் இருப்பு ரூபா.832,955 ஆகும். இவ் இருப்புகள் இயலுமான வரை எதிர் வரும் காலங்களில் விரைவாக திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிச்சயமற்ற கணக்கின் இருப்புகளினை கண்டறிந்து திருத்தப்பட்டிருக்கவில்லை |

2. **தலைப்பு 541 – சபைச் செயலாளர் காரியாலயம்**

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | மாகாண சபை மற்றும் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2001 மார்ச் 28 ஆம் திகதி இலக்கம் 01/2001 க்கு உரிய நிதி சுற்று நிருபத்தின் 06ஆம் பந்திக்கு அமைவாக மாகாண சபை உறுப்பினர்களுக்கான முற்பண கணக்கிற்கு உரிய இறந்த உறுப்பினரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா.92,176 மற்றும் பதவி நீங்கிச் சென்ற உறுப்பினரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா. 157,114 கடன் இருப்பு 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கும் அறவிடப்படுவதற்கான | கடன் தொகையினை விரைவாக அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி நீதிபதிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | கடன் பற்றாக்குறை இருப்புகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | | | |
| (ஆ) | சபைச் செயலாளர் மூலம் 2012 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மாகாண சபை அமைச்சர்களுக்கான மடிக் கணனி வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் அதிகாரிகள் 26 நபர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா.2,789,100 பெறுமதியான 26 கணனி இயந்திரங்கள் ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீள் பெறுவதற்கான நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தத்தின் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். | மடிக்கணனியினை மீள் வழங்குவது தொடர்பாக நினைவூட்டல் அனுப்பப்பட்டுள்ளது. | மடிக்கணனி ஒப்பந்தத்தின் பிரகாரம் மீள் பெறப்படவில்லை. |
| 03 | கிழக்கு மாகாணத்திலுள்ள ஒன்பது பிரதேச செயலகங்களினால் குத்தகைக்கு விடப்பட்ட அரசாங்க காணிகள் தொடர்பாக ரூபா 328.89 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான குத்தகை வாடகையானது கிழக்கு மாகாண சபையின் காணி நிர்வாகத் திணைக்களத்தினால் அறவிடப்படாமல் 01 தொடக்கம் 04 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் நிலுவைகளாக காணப்பட்டன. | குத்தகை வாடகை நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இக் குத்தகை வாடகை நிலுவைகளை அறவீடு செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | நிலுவைகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| 04 | 2019 ஆம் ஆண்டிற்கான மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கிழக்கு மாகாண சபையின் அதிகார எல்லையின் கீழ் வருகின்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்காக 2019 ஆம் ஆண்டின் போது 36 வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளை ஆணைக்குழு நடாத்தியிருக்க வேண்டிய போதிலும் 2019 ஆம் ஆண்டின் போது 10 வினைத்திறமைகாண் தடைப் | உரிய காலத்தில் வினைத்திறமை காண் தடைப் பரீட்சைகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்ட 09 வினைத்திறமை காண் தடைப் பரீட்சைகள் நடாத்தப்பட்டிருக்காத போதிலும் திட்டமிடப்பட்டிருக்காத 08 வினைத்திறமை காண் தடைப் பரீட்சைகளும் 07 ஆட்சேர்ப்புக்கான பரீட்சைகளும் நடாத்தப்பட்டிருந்தன. | 2021 பெப்ரவரி வரையிலும் 36 வினைத்திறமை காண் தடைப் பரீட்சைகள் உட்பட 72 பரீட்சைகளை நடாத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பரீட்சைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | | | |
| 05 | கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தின் ஸ்தாபிப்பின் பின்னர் 11 ஆண்டுகள் ஆகியிருந்த போதிலும் கிழக்கு மாகாணத்தில் செயற்படுகின்ற தங்கநகை அடகு நிலையங்களை பதிவு செய்து அது தொடர்பாக வருடாந்த அனுமதிப்பத்திரத்தை வழங்கும் பொருட்டு நியதிச்சட்டமொன்று நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக வருமானத்தில் குறிப்பிடத்தக்களவு தொகை மாகாண சபைக்கு நட்டமாகக் காணப்பட்டது. | தங்க நகை அடகு நிலையங்களிற்கான மாகாண நியதிச்சட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நியதிச் சட்டத்தை உருவாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நியதிச் சட்டம் இயற்றப்படாமல் அடகு நிலையங்கள் தொழிற்படுகின்றன. |
| 06 | 2020 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 9,479.43 மில்லியன் கூட்டுமொத்த பெறுமதியான காணி மற்றும் காணி மேம்படுத்தல்கள், கட்டிடம் மற்றும் கட்டமைப்புக்கள் என்பனவற்றுக்கான உரித்துறுதிகள், நில அளவை வரைபடம், மதிப்பீட்டு அறிக்கைகள் என்பன கிடைக்கத்தக்கதாயிருக்காமையால் கணக்காய்வின் போது அவற்றைத் திருப்திகரமாக ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | உரிய சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | அத்தகைய சான்றுகளை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத் தரப்பட்டுள்ளது. | சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 07 | 2014 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான ஆண்டறிக்கைகள் 2021 ஆகஸ்ட் 30 வரையிலும் கிழக்கு மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | ஆண்டறிக்கையை சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | மாகாண சபை மறுசீரமைக்கப்பட்டதும் அவ் ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுமென அறியத் தரப்பட்டுள்ளது. | ஆண்டறிக்கைகள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 08 | கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு ரூபா 4.6 மில்லியன் கூட்டுமொத்தமான கடன்கள் போதுமான பிணை பெறப்படாமல் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றுள் ரூபா 1.10 மில்லியன் தொகை 10 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாக விடப்பட்டிருந்தது. | கடன் நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இம் மாகாண சபையின் சட்டப் பிரிவு இந் நிலுவை கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது. | சட்ட நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 09 | முதலமைச்சரின் முன்னாள் செயலாளருக்கு முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 2 மில்லியனில் ரூபா 1.12 மில்லியன் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையாக உள்ள முற்பணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இவ் விடயம் பிரதம சட்ட உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை செயன்முறையிலுள்ளது. | முற்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| 10 | வணிக முற்பண நடவடிக்கைகளின் கீழ் ரூபா 4 மில்லியன் வியாபார கடன்பட்டோர் மீதிகள் 05 ஆண்டுகளாக அறவிடப்படாமல் நிலுவைகளாக விடப்பட்டிருந்தன. | காலதாமதமின்றி நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| 11 | 14 மீண்டெழும் வருமானத் தலைப்புக்களின் கீழ் கூட்டுமொத்தம் ரூபா 902 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் | வருடாந்தம் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிப்பதற்கு வருமானப் | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய காலங்களில் வருமானம் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 331 மில்லியன் தொகை சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. | பட்டியல்களை உரிய காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | | ல. |
| 12 | 2004 ஒக்தோபர் 11 ஆம் திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் கிழக்கு மாகாண சபையின் 07 திணைக்களங்கள் தொடர்பான ரூபா 32.6 மில்லியன் தொகையான அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு நிலுவைகளை 05 ஆண்டுகளிற்கு மேலாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையாக விடப்பட்டுள்ள மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | முற்பணங்கள் சுற்றறிக்கை அறிவுறுத்தலுக்கமைவாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க உத்தியோகத் தர்களுக்கான முற்பண மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| 13 | கிழக்கு மாகாண திட்டமிடல் செயலகத்தினால் நான்கு மாடி அலுவலகக் கட்டிடங்களின் நிர்மாணப் பணிகள் ஒப்பந்ததாரர் ஒருவருக்கு 2018 செப்தெம்பர் 04 இல் அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்படுவதற்கு ரூபா 194.5 மில்லியன் இணங்கப்பட்ட ஒப்பந்த விலையில் வழங்கப்பட்ட போதிலும் கடந்த 03 ஆண்டுகளின் போது 07 தடவைகள் பணிகளின் காலநீடிப்புடன் 2021 யூன் 29 வரை ரூபா 152.91 | இறுக்கமான நிர்மாண கண்காணிப்பு முறைமை நடைமுறைப்படுத்தப் படுதல் வேண்டும். | நிர்மாண வேலைகளில் ஏற்பட்ட கால தாமதங்களைத் தவிர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. ஆனால், 2021 நவம்பர் 15 வரையிலும் நிர்மாணப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | | |
| 14 | கிழக்கு மாகாண சபையின் திட்டமிடல் செயலகம் கிழக்கு மாகாணத்தின் நிலைபேறான சமநிலை அபிவிருத்திக்கான மையமொன்றினை தூரநோக்குடன் ஸ்தாபித்திருந்த போதிலும் கிழக்கு மாகாண சபையின் செயலகங்கள், அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் உட்பட 40 நிறுவனங்களால் 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள், அடைந்துகொள்ளப்பட்ட இலக்கு, அடைதல்களின் முன்னேற்றம் தொடர்பான காலரீதியான மீளாய்வு என்பன 03 ஆண்டுகளிற்கும் மேலாக மேற்கொள்ளப்பட்டிருக்காதமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான இலக்குகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | கிழக்கு மாகாண சபைக்கு சொந்தமான 340 பழுதடைந்த வாகனங்கள் 01 ஆண்டிற்கு மேலாக உரிய முறையில் பராமரிக்கப்படாமலும் திருத்தம் செய்யப்படாமலும் பல்வேறு திணைக்களங்களின் பல்வேறு வாகன தரிப்பிடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | வாகனங்களை திருத்தம் செய்து செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | திணைக்களத் தலைவர்கள், இயந்திரப் பொறியியலாளரின் பரிந்துரையுடன் தமது வாகனத்தை திருத்தம் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. | வாகனங்கள் விளைவற்ற நிலையிலுள்ளன. |
| 16 | 14 கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளில் 04 சதவீதம் தொடக்கம் 63 சதவீதம் வரையிலான வீச்செல்லையில் 293 அதிபர்களின் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்ட அதேவேளை அம்பாறை மாவட்டத்தின் ஏனைய 03 கல்வி வலயங்களின் பாடசாலைகளில் 33 அதிபர்கள் மேலதிகமாகக் காணப்பட்டனர். | அதிபர் பற்றாக்குறையாக உள்ள பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | அதிபர்கள் பற்றாக்குறையாக உள்ள பாடசாலைகளிற்கு மேலதிக பதவியணியினரை இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிக்கையிடப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகை ஆளணியினரை இடமாற்றம் செய்வதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 17 | 11 கல்வி வலயங்களின் பாடசாலைகளில் 05 சதவீதம் தொடக்கம் 23 சதவீதம் வரையிலான வீச்செல்லையில் 1,262 ஆசிரியர்களின் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்ட அதேவேளை ஏனைய 06 கல்வி வலயங்களின் பாடசாலைகளில் 1,063 ஆசிரியர்கள் மேலதிகமாகக் காணப்பட்டனர். | ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ள பாடசாலைகளுக்கு மேலதிக பதவியணியினரை இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிக்கையிடப்பட்டுள்ளது. | ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | 2016 ஆகஸ்ட் 26 இன் 04/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5:4:1 ஆம் உப பிரிவின் பிரகாரம் 01 ஆண்டிற்கு மேலாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் 08 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1.47 மில்லியன் கூட்டுத்தொகையான பதவியணியினர் அட்டவணைப்படுத்தப்பட்ட விடுதிகளுக்கான வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக்கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் விடுதி வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | அனைத்து விடுதிகளுக்குமான வாடகை மதிப்பீடுகள் தற்போது விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. | விடுதி வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| 19 | கூட்டுமொத்தம் ரூபா 5.55 மில்லியன் பெறுமதி சேர் வரி (வற்) 08 சதவீதத்தில் செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுமொத்தம் ரூபா 10.42 மில்லியன் 15 சதவீதத்தில் கணிக்கப்பட்டு கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைகளால் செலுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவாக, 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் பிரிவு 2(அ) பிரிவில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மற்றும் 2019 நவம்பர் 29 ஆம் திகதிய 2151/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2005 இன் 06 | மேலதிகமாகச் செலுத்தப்பட்ட இப் பெறுமதி சேர் வரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த வரித் தொகையினை அறவிட்டுக் கொள்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிகமாக செலுத்தப்பட்ட வரித் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் இலக்க சட்டம் என்பவற்றிற்கு முரணாக 2019 திசெம்பர் 01 தொடக்கம் 2020 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதியின் போது ஒப்பந்ததாரர்களுக்கு ரூபா 4.87 மில்லியன் தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டுள்ளது. | | | |
| 20 | 2016 தொடக்கம் 2020 வரையிலான காலப்பகுதியின் போது 03 பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைகளால் கூட்டுமொத்தம் ரூபா 2.94 மில்லியன் பெறுமதியான தேசத்தை கட்டியெழுப்பும் வரி 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் பிரகாரம் உள்நாட்டு வருமான வரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படாமல் வழங்குநர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது. | வரித் தொகையை அறவீடு செய்து உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | வழங்குநர்களிடமிருந்து செலுத்தப்பட்ட முழுத் தொகையையும் அறவீடு செய்யுமாறு சம்பந்தப்பட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைகளிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | வரித் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 21 | பஸ் தரிப்பிடத்திற்கு தனியார் பஸ்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லல்களை பதிவு செய்யும் பொருட்டு ரூபா 1.14 மில்லியன் கிரயத்தில் 2015 யூன் 08 ஆம் திகதி General Packet Radio Service (GPRS) உடன் இணைக்கப்பட்ட 13 விற்பனை தளங்கள் (POS) மற்றும் 2,000 பயணச்சீட்டு சுருள்களை கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் | மேலும் தாமதமின்றி விற்பனை தளங்களை செயற்படுத்துவதற்கு மென்பொருள் முறைமையை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது முறைமையானது பரீட்சிப்புக் காலப்பகுதியின் கீழ் செயற்படுகின்றது. பரீட்சிப்பு காலப்பகுதி முடிவடைந்த பின்னர் மென்பொருள் முறையாக தொழிற்பட்டால் செயற்படுத்த முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | உபகரணங்களைப் பயன்மிக்க வகையில் உபயோகிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போக்குவரத்து அதிகாரசபை கொள்வனவு செய்திருந்த போதிலும் செயற்படுத்துவதற்கு முறையான மென்பொருள் முறைமை காணப்படாததன் காரணமாக உரிய நோக்கங்களுக்கு 05 ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | | |
| 22 | மாகாண வீடமைப்பு அதிகாரசபையால் தயாரிக்கப்பட்ட வீடமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (2015 - 2019) பிரகாரம் 2015 தொடக்கம் 2019 வரையான ஆண்டுகளின் போது ரூபா 14,525 மில்லியன் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் வீடற்ற குடும்பங்களுக்கு 29,700 வீடுகளை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் பயனாளிகளுக்கு வீடமைப்பு உதவி வழங்கப்படுகின்றமை தவிர இக் காலப்பகுதியின் போது எந்தவொரு வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. | வீடமைப்பு அபிவிருத்தித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வீடற்ற குடும்பங்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் ஐந்து பயனாளிகளுக்கு மாத்திரம் வீட்டு வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. |
| 23 | கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளரினால் வழங்கப்பட்ட 2014 யூன் 20 ஆம் திகதிய ஜீ/ஈபிசீ/பீ/14/ஆர்/எச் ஆம் | அதனது சொந்த நிதிகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மூலதனம் மற்றும் மனிதவளம் என்பவற்றின் போதாமை காரணமாக வருமானமீட்ட தவறியதாக | சொந்த நிதியத்தை உருவாக்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிரு |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்க கடிதத்தின் பிரகாரம் மாகாண வீடமைப்பு அதிகாரசபையானது திரட்டு நிதியத்தில் தங்கியிருக்காது அதனது சொந்த நிதிகளை உருவாக்க வேண்டுமென்ற நிபந்தனைக்கு உட்பட்டு சம்பளங்கள் மற்றும் ஏனைய செலவினங்களுக்காக 2014 ஆம் ஆண்டின் போது நிதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் அதனை ஸ்தாபித்ததிலிருந்து 05 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் செலவினத்தை எதிர்கொள்வதற்கு அதனது சொந்த நிதிகளை உருவாக்கும் பொருட்டு எந்தவொரு வணிக நடவடிக்கையையும் அதிகாரசபை ஆரம்பித்திருக்கவில்லை. | | அறிக்கையிடப்பட்டுள்ளது. | க்கவில்லை. |
| 24 | கிழக்கு மாகாண சபையால் நிறைவேற்றப்பட்டிருந்த நியதிச்சட்டத்தின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்ட இரண்டு நியதிச்சட்ட நிறுவனங்களில் 2020 ஆம் ஆண்டின் போது கிழக்கு மாகாண சபையின் வீடமைப்பு அதிகாரசபையினால் 21 பதவியணியினரிற்கான ஆளணி வேதனங்களிற்காக ரூபா 7 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 04 தொடக்கம் 07 ஆண்டுகள் வரையான காலப்பகுதி வீச்சில் ஆட்சேர்ப்புத் | பதவியணி மற்றும் ஆட்சேர்ப்பு திட்டத்தை அங்கீகரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அங்கீகரிப்பதற்கான கோரிக்கை பல தடவைகள் அனுப்பப்பட்ட போதிலும் நிராகரிக்கப்பட்டிருந்தது. | பதவியணி மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டம் என்பன அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | திட்டமோ அல்லது பதவியணியினரோ அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| 25 | கிழக்கு மாகாணசபையால் நிறைவேற்றப்பட்டிருந்த நியதிச்சட்டத்தின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்ட 02 நியதிச்சட்ட நிறுவனங்களில் மீளாய்வாண்டின் போது கிழக்கு மாகாண சபையின் சுற்றுலாப் பணியகத்தினால் 13 பதவியணியினரிற்கான ஆளணி வேதனங்களிற்காக ரூபா 4 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 04 தொடக்கம் 07 ஆண்டுகள் வரையான காலப்பகுதி வீச்சில் ஆட்சேர்ப்புத் திட்டமோ அல்லது பதவியணியினரோ அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதவியணி மற்றும் ஆட்சேர்ப்பு திட்டத்தை அங்கீகரிப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அங்கீகரிப்பதற்கான கோரிக்கை பல தடவைகள் அனுப்பப்பட்ட போதிலும் நிராகரிக்கப்பட்டிருந்தது. | பதவியணி மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டம் என்பன அங்கீகரிக்கப் பட்டிருக்கவில்லை. |

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு நிலைமை அறிக்கை - (2018, 2019, 2020)**

---

கணக்காய்வு நிறுவனத்தின் பெயர் - வடமத்திய மாகாண சபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

2019 - முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

| **அவதானிப்புக்கள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள்** | **அது தொடர்பான தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|
| **01. தலைப்பு 600 - வடமத்திய மாகாண ஆளுனர் செயலகம்** | | | |
| சனாதிபதி செயலாளரின் அரச செலவின முகாமைத்துவம் தொடர்பான 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய PS/CSA/11-18 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் மாகாண ஆளுனருக்கு ஒதுக்கப்படுகின்ற ஆகக்கூடிய உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை 02 ஆக இருந்ததுடன் தேவையேற்படுமாயின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒரு வாகனமொன்று வைக்க முடியுமாக இருந்த போதும், கணக்காய்வு திகதியான 2020 ஒக்தோபர் 22 வரையில் 05 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது. | சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் வாகனங்களை பயன்படுத்துதல் வேண்டும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் சரிசெய்யுமாறு பிரதம செயலாளரால் ஆளுனரின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சரிசெய்யப்படவில்லை. |

02. **தலைப்பு 610 - வடமத்திய மாகாண பிரதம அமைச்சு, வடமத்திய சட்டமும் சமாதானமும், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் விசேட செயற்திட்டங்கள், சுற்றுலாக் கல்வி, தகவல் தொழில்நுட்பம், பொறியியல் நிர்மாணம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**

---

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | பலுகஸ்தமன சமன்திலக்க அவரின் வீட்டிற்கு அருகிலிருந்து சிங்கபுர பிரதான வீதி 03 கட்டங்களில் சிறு கொங்கிறீட் கல் இட்டு அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக ரூபா 11,194,750 தொகை செலுத்தப்பட்டிருந்தது. முதலாவது கட்டத்தின் போது நிறைவேற்றப்பட்ட வேலைகளை விட ரூபா 45,672 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் தரக் கட்டுப்பாட்டு பிரிவின் உத்தியோகத்தருடன் கணக்காய்வு உத்தியோகத்தரினால் 03 கட்டங்களிலும் 03 இடங்களில் 21 சிறு கொங்கிறீட் கற்கள் பெறப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டது. அதில் 11 சிறு கொங்கிறீட் கற்களும் தாங்கும் சக்தி $25N/mm^2$ ஆன நியமத்தை கொண்ட சக்தியை விட குறைவாக இருந்தமை தரக் கட்டுப்பாட்டு அறிக்கைகளில் உறுதிப்படுத்தப்பட்டது. | இந்த தொகையை அறவிட வேண்டியிருந்ததுடன் குறித்துரைத்த நியமத்தையுடைய கற்களை ஈடுபடுத்தி மீண்டும் நிர்மாணிக்கப்படல் வேண்டும். | எந்தவொரு தடுப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணம் மீள அறவிடப்படாதிருந்ததுடன் குறித்த நியமத்தையுடைய சிறு கொங்கிறீட் கற்கள் மீண்டும் இட்டு நிர்மாணிக்கப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | வடமத்திய மாகாண பிரதம அமைச்சினால் விசேட செயற்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டின் போது தம்புத்தேகம நூலக சேவை கட்டிடம் நிர்மாணிப்பதற்காக ரூபா 24,987,271 தொகை ஒப்பந்தகாரர்களுடன் உடன்படிக்கை செய்திருந்த போதிலும் | | | |
| (i) | உடன்படிக்கையின் பிரகாரம் 2017 பெப்ரவரி 22 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிர்மாண நடவடிக்கைகள் 2019 சனவரி 10 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும், உடன்படிக்கையின் பிரகாரம் அறவிட வேண்டிய ரூபா 2,498,727 தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் அறவிட வேண்டிய ரூபா 2,498,727 தாமதக் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். | தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| (ii) | ரூபா 25,204,783 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கட்டிடம் 2020 யூலை 15 ஆந் திகதி வரையிலும் திறக்கப்படாமல் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் விளைவற்றுக் காணப்பட்டது. | 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் திறக்கப்படாதிருந்த இந்தக் கட்டிடத்தை விரைவாக திறப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2022 மார்ச் மாதத்தின் போது திறப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | தற்போது விளைவற்றுக் காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டத்தின் நிதிஏற்பாட்டை பயன்படுத்தி வடமத்திய மாகாணத்தின் பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்டிருந்த நிர்மாணங்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது. | | | |
| (i) | உடன்படிக்கை செய்யப்பட்ட தொகை ரூபா 21,946,785 ஆன 02 நிர்மாண ஒப்பந்தங்களுக்காக ரூபா 9,066,775 வேலை ஆரம்பித்தல் முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கையின் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், அந்த முற்பணத்தை அறவிடுவதற்கும் உடன்படிக்கைப் பிரகாரம் வேலையை பூர்த்தி செய்யாத ஒப்பந்தகாரர் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கைப் பிரகாரம் வேலையை பூர்த்தி செய்யாத ஒப்பந்தகாரர்களுக்கு உரிய முற்பணத்தை அறவிடுவதற்கும் உடன்படிக்கையின் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தகாரர் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கையும் எடுத்தல் வேண்டும். | ஒப்பந்தகாரரினால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய ஒப்பந்தங்களின் முற்பணத் தொகையிலிருந்து அறவிடப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் வேலையை பூர்த்தி செய்யாத ஒப்பந்தகாரர் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | பொறியியலாளர் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,707,275 ஆன உப செயற்திட்டமொன்று அங்கீகரிக்கப்பட்ட சங்கமொன்றிற்கு கையளிக்கும் போது அதில் பொறியியலாளர் மதிப்பீட்டினை விட ரூபா 292,725 இனால் அதிகரித்த பெறுமதியில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு ஒப்பந்தங்களை கையளிக்கும் பெறுமதி பொறியியலாளர் மதிப்பீட்டை விஞ்சாதிருத்தல் வேண்டும். அதனால் பொறியியலாளர் மதிப்பீட்டை விஞ்சிய ரூபா 292,725 தொகையை உரிய உத்தியோகத்தர் களிடமிருந்தோ அல்லது ஒப்பந்த காரர்களிடமிருந்தோ அறவிடப்படல் வேண்டும். | தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பொறியியலாளர் மதிப்பீட்டை விஞ்சிய ரூபா 292,725 தொகை உரிய உத்தியோகத்தர் களிடமிருந்தோ அல்லது ஒப்பந்தக் காரர்களிடமிருந்தோ அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | நிர்மாணங்களுக்காக குறித்துரைத்த இடமொன்றை இனங்காணாமல் முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி அதிகார சபையின் நிர்வாக வள நிலைய கட்டிடம் நிர்மாணிப்பதற்காக ரூபா 24,267,211 தொகையில் பிரதம அமைச்சு 2017 யூலை 31 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது. பின்னர் அனுராதபுரம் மாநகர சபை அதிகார பிரதேசத்தின் நிலமொன்றில் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட போதும், அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் | குறித்துரைத்த இடமொன்றை இனங்கண்டதன் பின்னர் செயற்திட்டத்தை திட்டமிடுதல், பொறியியலாளர் மதிப்பீட்டை தயாரித்தல், கேள்வி ஆவணங்களை தயாரித்தல் போன்றவை மேற்கொள்ளப்படல் வேண்டும். | நகர ஆணையாளர் மற்றும் நகராதிபதியுடன் கலந்துரையாடி அதன் செயல்முன்னேற்றம் எதிர்காலத்தில் அறிக்கையிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிர்மாணத்திற்காக குறித்துரைத்த இடமொன்றை இனங்காணமல் செயற்திட்டத்தை திட்டமிடல், பொறியியலாளர் மதிப்பீடு தயாரித்தல் மற்றும் கேள்வி ஆவணங்களை தயாரித்தல் போன்றவையைய மேற்கொண்ட உத்தியோகத்தர் களிடமிருந்து செயற்திட்டத்திற்காக செலுத்தப்பட்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | எடுக்காமை மற்றும் இணக்கப்பாடொன்று வழங்கியதன் பிரகாரம் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்காமை காரணமாக செயற்திட்டத்தின் வேலைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்திற்காக செலுத்தப்பட்ட ரூபா 2,079,562 பயனற்ற செலவினமாக இருந்தது. | | | ள்ள ரூபா 2,079,562 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (உ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண பிரதம அமைச்சிற்குரியதாக தீர்க்கப்படாதிருந்த ரூபா 26,405,861 கட்டுநிதி மீதியொன்று 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்பட்டிருந்தது. | மாகாண நிதி விதி 259.2 மற்றும் 259.3 இன் பிரகாரம் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பான கட்டுநிதி மீதி மீள தீர்த்து வைக்கப்படல் வேண்டும். | நகர ஆணையாளர் மற்றும் நகராதிபதியுடன் கலந்துரையாடி அதன் செயல்முன்னேற்றம் எதிர்காலத்தில் அறிக்கையிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | தற்போதும் கட்டுநிதி மீதி அவ்வாறே காணப்படுகின்றது. |
| (ஊ) | வடமத்திய மாகாண சுற்றுலா செயற்திட்டத்தை நோக்காகக் கொண்டு தொழில்நுட்ப நியமத்தையுடைய அறிக்கையிடல் ரீதியான ஒளிப்பதிவு நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்தல், கவர்ச்சிகரமான படங்களுடன் நியமத்தையுடைய புத்தகங்களை வடிவமைத்தல் மற்றும் முறையான தகவல்களுடன் இணையத்தளமொன்றை | சட்டரீதியான நடவடிக்கைகளை விரைவாக எடுத்தல், பெறுகைகள் வழிகாட்டிக் கோவையை மீறியமை தொடர்பாக உள்ளக விசாரணையொன்றை நடாத்துதல் மற்றும் இவ்வாறான குறைபாடுகள் மீண்டும் ஏற்படாதிருப்பதற்கான ஏற்பாடுகளை | குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. | வழங்குனரால் இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு வடமத்திய மாகாண சபைக்கு கையளிக்கப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிர்மாணித்தல் என்பவற்றுக்காக பிரதம செயலாளரால் தனியார் வழங்குனர் ஒருவருடன் ரூபா 15,797,500 தொகையில் 2016 மார்ச் 23 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கைத் தொகையில் ரூபா 12,144,500 தொகை 2016 திசெம்பர் 26 ஆந் திகதி வரையில் செலுத்தப்பட்டிருந்த போதும், 2021 மே 10 ஆந் திகதி வரையிலும் வழங்குனரினால் இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு வடமத்திய மாகாணத்தின் சுற்றுலா செயற்திட்ட மேம்பாட்டை நோக்காகக் கொள்வதற்கு முடியுமானதாக மாகாண சபைக்கு கையளிக்கப்பட்டிருக்க வில்லை. | வழங்குதல் மேற்கொள்ளப்படல் வேண்டும். | | |
| (எ) | அளுத்வெவ குமார மகா வித்தியாலயத்தின் அதிபரின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் மூன்றுமாடி கட்டிட நிர்மாணம், சிறிய மற்றும் பாரியளவிலான திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ரூபா 39,791,666 தொகையில் பிரதம அமைச்சின் செயலாளரால் ஒப்பந்தகாரர் ஒருவருடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. சாத்தியவள ஆய்வின்றி | சாத்தியவள ஆய்வு மற்றும் பாடசாலை தேவையினை இனங்கண்டு கட்டிட திட்டம் (Plan) தயாரித்து மதிப்பீடு தயாரித்தல் வேண்டும். இவ்வாறான குறைபாடுகள் மீண்டும் ஏற்படாதிருப்பதற்கு கண்காணித்துக் கொள்ளல் வேண்டும். | தற்போது நிலையான செலவுகளை குறைக்கும் வகையில் அளவிடைப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. | நிலைமை அவ்வாறே காணப்படுகின் றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மதிப்பீடு தயாரித்தமையின் காரணமாக சிறிய மற்றும் பாரியளவான திருத்த நடவடிக்கைகளுக்காக அசைவுறாத வேலைகளின் கீழ் ரூபா 3,876,335 மற்றும் பிரதான நிர்மாணத்திற்காக அசைவுறாத வேலைகளின் கீழ் ரூபா 10,926,181 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த பணம் முறையே ரூபா 6,521,836 மற்றும் ரூபா 33,269,830 ஆன மொத்த மதிப்பீட்டுப் பெறுமதிகளில் முறையே 59 சதவீதம் மற்றும் 33 சதவீதமாக இருந்தது. | | | |
| (ஏ) | 4000 நபர்களுக்கு மேற்பட்ட தரப்பினருக்கு ஆசன வசதிகளை வழங்க முடியுமான கேட்போர் கூடம் தேவையொன்று காணப்படாதிருந்தமை மற்றும் நிதிஏற்பாடின்றி பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டு பளுகஸ்தமன மகா வித்தியாலயத்தில் கேட்போர் கூடத்தினை தயாரிப்பதற்காக ரூபா 542,019,300 தொகையில் உடன்படிக்கை தயாரித்து நிர்மாணம் (Design and Build) இற்காக பிரதம அமைச்சின் செயலாளரினால் 2017 ஏப்ரல் 05 ஆந் திகதி ஒப்பந்தகாரர் ஒருவருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. | இந்த செயற்திட்டத்திற்குரிய மொத்த கிரய மதிப்பீடொன்று வருடாந்த நிதிக் கூற்றில் உள்ளடக்கப்படா மையால் நிதிஏற்பாடு இன்றியமையினால் செலவினங்களை செய்வதற்கான அதிகாரத்தை வழங்குவதற்கு எந்தவொரு அதிகார தரப்பினருக்கும் அனுமதி இல்லாமையினால் இது தொடர்பாக விசாரணையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | தற்போது நிலையான செலவுகளை குறைக்கும் வகையில் அளவிடைப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. | நிர்மாணங்களை பூர்த்தி செய்து கொள்வதற்கோ வேலை ஆரம்பித்தல் முற்பணத்தை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவ்வாறே மாகாண நிதி விதி 418.2 இன் ஏற்பாடுகளுக்கு புறம்பாக பெறப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தினை அடிப்படையாகக் கொண்டு கட்டம் கட்டமாக உடன்படிக்கை செய்து அமுல்படுத்துவதற்காக பெறுகைக்குழு தீர்மானித்திருக்கும் போது மொத்த செயற்திட்டமும் ரூபா 542,019,300 தொகையில் அமுல்படுத்துவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 2017 ஏப்ரல் 28 ஆந் திகதி ரூபா 100,000,000 வேலை ஆரம்பித்தல் முற்பணமும் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் 2021 மே 07 ஆந் திகதி வரையிலும் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஐ) | "அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டம்" இன் கீழ் நேகம முஸ்லிம் வித்தியாலயத்தின் பல்நோக்கு கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்குரிய விலைப் பட்டியலின் பிரகாரம் ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 7,663,843 ஆக இருந்த போதும், 2017 ஆம் ஆண்டின் போது ரூபா | மேலதிக செலுத்துதல்கள் அறவிடப்படல் வேண்டும். பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக விசாரணையொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். | மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணத்தை மீளச் செலுத்துவதற்கு ஒப்பந்தகாரர் இணங்கியுள்ளார். | இதுவரையிலும் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணத்தை அறவிடுதல் மற்றும் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக விசாரணை என்பன மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 9,695,499 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்தகாரருக்கு ரூபா 2,031,656 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த மேலதிக செலுத்துதல்களுக்காக பெறுமதி சேர் வரி ரூபா 320,731 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| (ஒ) | ''அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டம்'' இன் கீழ் பளுகஸ்தமன மகா வித்தியாலயத்தில் சிற்றுண்டிச்சாலை நிர்மாணத்திற்காக 2017 ஆகஸ்ட் 28 ஆந் திகதி ரூபா 10,298,211 தொகையான (வற் இன்றி) தொகையில் பிரதம அமைச்சின் செயலாளரால் ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கை கைச்சாத்திட ப்பட்டிருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி உடன்படிககை செய்யப்பட்ட பெறுமதியில் 30 சதவீதம் ஆன ரூபா 3,089,463 தொகையொன்று வேலை ஆரம்பித்தல் முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2017 திசெம்பர் 28 ஆந் திகதி நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 மே 10 | ஒப்பந்தகாரரை கறுப்பு பட்டியலில் இட்டு பெறுகை செயற்பாடுகளின் கீழ் வேறொரு ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்படல் வேண்டும். | ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய ஒப்பந்தங்களிலிருந்து முற்பணத் தொகை அறவிடப்பட்டுள்ளது. | இந்த ஒப்பந்தகாரரை கறுப்பு பட்டியலில் இடுவதற்கும் வேறொரு ஒப்பந்தகாரருக் கு கையளித்து கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைக ளை ஆரம்பிப்பதற்கு ம் நடவடிக்கை எடுக்கப்பட்டிரு க்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆந் திகதி வரையிலும் கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், முற்பண பிணை முறியை பணமாக்கி கொண்டு வேலை ஆரம்பித்தல் முற்பண தொகை அறவிடப்படாதிருந்ததுடன் 03 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்ததன் பின்னர் ஒப்பந்தகாரரால் நிறைவேற்றப்பட்ட ஏனைய ஒப்பந்தங்களுக்காக செலுத்துவதற்கிருந்த பணத்திலிருந்து அந்த முற்பணத் தொகை ஈடு செய்யப்பட்டிருந்தது. | | | |
| (ஓ) | ‘‘அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டம்’’ இன் கீழ் நல்லச்சிய ஆரம்ப பாடசாலையில் 04 கட்டிடங்களை திருத்துவதற்காக ஒப்பந்தகாரருடன் ரூபா 4,943,744 பெறுமதியில் 2017 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்த போதும் ஆசிரியர் விடுதி மற்றும் இன்னுமொரு கட்டிடமொன்றின் திருத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இடைநடுவில் | நிர்மாணங்களின் தாமதத்திற்காக உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது வரையில் 75 சதவீத செயல்முன்னேற்றம் பெறப்பட்டுள்ளது. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படாதிருந்த துடன் தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

நிறுத்தப்பட்டிருந்தது. அந்த 02 கட்டிடங்களினதும் திருத்த நடவடிக்கைகள் 2021 மே 10 ஆந் திகதி வரையிலும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. எனினும், அந்த ஒப்பந்தகாரருக்கு எதிராக உடன்படிக்கையின் பிரகாரம் எந்தவொரு சட்டரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) பிரதம அமைச்சினால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது அ.ஃ.கெக்கிராவ திறப்பனை மகாநாம வித்தியாலயத்தில் ரூபா 11,840,935 செலவினமொன்றைச் செய்து நிர்மாணிக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலை மற்றும் ரூபா 8,700,703 செலவினமொன்றை செய்து நிர்மாணிக்கப்பட்டிருந்த ஆசிரியர் விடுதிகள் தொடர்பாக 2021 ஏப்ரல் 07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | சிற்றுண்டிச்சாலை நிர்மாணிப்பதற்குரிய உடன்படிக்கை செய்யப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 2,774,170 தொகையில் 32 வேலை விடயங்கள் பூர்த்தி செய்யப்படாமல் அதற்கு பதிலாக வடமத்திய பிரதம | அங்கீகரிக்கப்படாத மேலதிக வேலைகளை நிறைவேற்றிய மற்றும் அதற்காக கொடுப்பனவு செய்த உத்தியோகத்தர் களுக்கு எதிராக | தற்போதுள்ள குறைபாடுகளை பூர்த்தி செய்து விரைவாக பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதம செயலாளரால் பிரதம அமைச்சின் | உரிய உத்தியோகத்த ர் களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைக ள் எடுக்கப்பட்டிரு |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைச்சின் செயலாளர் அங்கீகரிக்கப்படாத மேலதிக வேலை விடயங்களின் கீழ் 13 விடயங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 5,538,503 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சிற்றுண்டிச்சாலை நிர்மாணத்திற்காக உடன்படிக்கை செய்த மதிப்பீடு செய்யப்பட்ட தொகையினை விட கூட்டுமொத்தமாக ரூபா 2,515,767 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அது ஆரம்ப மதிப்பீட்டினை விட 27 சதவீத அதிகரிப்பாகும். | ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | க்க வில்லை. |
| (ii) | 2016 திசெம்பர் 02 ஆந் திகதி ஆசிரியர் விடுதியை நிர்மாணிக்கும் பணிகளுக்காக பிரதம அமைச்சினால் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த ரூபா 12,180,508 மதிப்பீட்டில் 32 சதவீதமான கூட்டுமொத்தமான ரூபா 3,922,999 ஆன வேலைகளில் 46 விடயங்கள் கைவிடப்பட்டு நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | தேவையான வேலைப் பகுதிகளை இனங்காணாமல் கூட்டுமொத்தமாக ரூபா 3,922,999 தொகையான 46 வேலை விடயங்களை மதிப்பீட்டில் உள்ளடக்குதல் தொடர்பாக முறையான விசாரணையொன்று நடாத்தப்படல் வேண்டும். | நிறைவேற்றப்படாத வேலை விடயங்கள் ஒப்பந்தகாரர் மூலம் நிறைவேற்றித் தருமாறு பிரதம செயலாளரால் பிரதம அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | தேவையற்ற கூட்டுமொத்தமான ரூபா 3,922,999 தொகையான 46 வேலை விடயங்களை மதிப்பீட்டில் உள்ளடக்கியமை தொடர்பாக முறையான விசாரணையொன்று நடாத்தப்படாதிருந்த துடன் கைவிடப்பட்டுள்ள வேலை விடயங்கள் இதுவரை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. |
| (க) | பிரதம அமைச்சினால் ரூபா 13,790,629 செலவினமொன்றை செய்து நிர்மாணிக்கப்பட்ட அ:.கெக்கிராவ திறப்பனை மகாநாம வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தை சுற்றி வடிகாண் முறைமை அமைத்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | | | |
| (i) | மதிப்பீட்டின் 2.1 மற்றும் 2.2 விடயங்களின் கீழ் பயன்படுத்தப்பட்ட கொங்கிறீட் அளவு முறையே 92 சதவீதத்தாலும் 30 சதவீதத்தாலும் அதிகரித்தமையின் காரணமாக விளையாட்டு மைதானத்தை சுற்றி வடிகாண் முறைமையை நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட ரூபா 11,977,650 பெறுமதி 15 சதவீதத்தினால் விஞ்சியிருந்த போதிலும் மேலதிக வேலைக்காக வடமத்திய மாகாண பிரதம அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் அதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது | குறைபாடுகளுடன் மதிப்பீடு தயாரித்த, அங்கீகரிக்கப்படாமல் மேலதிக வேலை செய்த மற்றும் அதற்காக கொடுப்பனவு செய்த உத்தியோகத்தர் களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | விரைவாக மதிப்பீட்டை தயாரித்தமையால் குறைபாடுகள் ஏற்பட்டிருந்தது. எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்குமாறு பிரதம செயலாளரால் பிரதம அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய உத்தியோகத்தர் களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | விளையாட்டு மைதானத்தின் மேல் தெற்கு பக்கம் ஒரு மூலையில் இயற்கையாக அமைந்துள்ள கருங்கல்லின் மேற்பகுதி எஞ்சுகின்ற வகையில் கருங்கல்லுக்கு இரு பக்கங்களில் மாத்திரம் வடிகாண் முறைமை நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதனால் விளையாட்டு மைதானத்திற்கு மேல் அமைந்துள்ள தனியார் காணியொன்றிலிருந்து வழிந்தோடி வருகின்ற நீர் விளையாட்டு மைதானத்திற்கு சேர்ந்து விளையாட்டு மைதானத்தின் சில இடங்கள் சேறு படிந்து காணப்பட்டது. | விளையாட்டு மைதானத்திற்கு மேல் அமைந்துள்ள தனியார் காணியிலிருந்து வழிந்தோடி வருகின்ற நீர் விளையாட்டு மைதானத்திற்கு சேராத வகையில் வடிகாண் முறைமையின் குறைபாடுகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் இந்த குறைபாடுகள் பூர்த்தி செய்யப்படும் என அறிக்கையிடப்பட்டுள்ளது. | இதுவரை குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. |
| (iii) | வடிகாண் முறைமை நிர்மாணத்தின் போது Shuttering இற்காக ரூபா 2,766,280 தொகை செலுத்தப்பட்டிருந்த போதும், வடிகாணின் பக்க சுவர்களில் இரு பக்கமும் பாரியளவான வெடிப்புக்கள் மற்றும் வெளியில் நெருக்கமாக காணப்பட்ட கொங்கிறீட் பகுதி காணப்பட்டதுடன் சுவர்களில் குழிகள் மற்றும் வெடிப்புக்கள் உள்ள இடங்களில் வெளியாகின்ற நீர் வடிகாணில் கசிந்து காணப்பட்டது. | கொடுப்பனவு செய்வதற்கு முன் வேலைத்தள பொறுப்பு பொறியியலாளரிடமிருந்து அறிக்கை பெறப்பட வேண்டியிருந்ததுடன் குறைபாடுகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் இந்த குறைபாடுகள் பூர்த்தி செய்யப்படும் என அறிக்கையிடப்பட்டுள்ளது. | இதுவரை குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. |
| (கா) | உலக வங்கி செயற்திட்ட நிதியேற்பாட்டின் கீழ் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | 4,859,999 உடன்படிக்கைப் பெறுமதியின் அடிப்படையில் பிரதம அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட அ.்.கெக்கிராவ திறப்பனை மகாநாம வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தை சுற்றி வேலி மற்றும் வாயிற்கதவு நிர்மாணித்தல் தொடர்பாக 2021 ஏப்ரல் 07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | | | |
| (i) | கேள்விதாரர்களுக்கு பிரதான அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட கேள்வி ஆவணங்கள் ஒன்றுக்கொன்று வேறுபாடான வேலை விடயங்களுக்காக தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட தகவல்களை விரிவாக மதிப்பீட்டிற்கு உட்படுத்தாமல் கேள்வி ஆவணங்களின் கூட்டுப்பெறுமதி மாத்திரம் கவனத்தில் கொள்ளப்பட்டு ஆகக்குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு ஒப்பந்தத்தை கையளிப்பதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரை செய்திருந்தது. | ஏதாவதொரு நட்டம் ஏற்படுமாயின் அது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தவர்களுக்கு கையளிக்கப்படல் வேண்டும். தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக விசாரணை நடாத்துதல் வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்குமாறு பிரதம செயலாளரால் பிரதம அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக எந்தவொரு விசாரணையும் நடாத்தப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | வலைவேலி நிர்மாணத்தின் போது 1.52m உயரத்திலான புயரபந 10 இன் வலை (Chain link mesh) வகையில் 826.2 மீற்றருக்காக, ஒரு சதுரமீற்றருக்கு ரூபா 767 வீதம் கூட்டுமொத்தமாக ரூபா 633,695 செலுத்தப்பட்டிருந்தது. எனினும் உரிய தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொண்ட நிலைமை தரச் சான்றிதழின் பிரகாரம் அதற்காக ஈடுபடுத்தப்பட்ட வலை Gauge 12 அளவாக இருந்தமையால் அதற்காக ரூபா 253,478 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. இந்த வலை மதிப்பீடு செய்யப்பட்ட தரத்தினை உடையதாக இல்லாமையின் காரணமாக அநேகமான இடங்களில் அது பெரியளவாக கிழிந்து சேதமடைந்திருந்தது. | குறித்துரைத்த நியமத்துடன் வலையினை பயன்படுத்தி மீண்டும் வலை வேலி நிர்மாணிக்கப்படல் வேண்டும். | நிர்மாணத்தின் போது இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்குமாறு பிரதம செயலாளரால் பிரதம அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | குறித்துரைத்த நியமத்துடன் வலையினை ஈடுபடுத்தி மீண்டும் வலைவேலி நிர்மாணிக்கப் பட்டிருக்கவில் லை. |
| (கி) | அ/கெக்கிராவ திறப்பனை மகாநாம வித்தியாலயத்தில் மூன்று மாடிக் கட்டிடம் மற்றும் ஆரம்ப கற்கை வள நிலையம் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 41,451,987 பெறுமதியில் ஒப்பந்தகாரருடன் 2017 மார்ச் 13 ஆந் திகதி | | | |

| | | | |
|---|---|---|---|
| பிரதம அமைச்சின் செயலாளரால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அது தொடர்பாக 2021 ஏப்ரல் 07 ஆந் திகதி மேற்கொண்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | | | |
| (i) ICTAD-SBD-2007 இரண்டாம் தொகுதியின் ஒப்பந்த நிபந்தனை இலக்கம் 51 இன் நியமங்கள் மற்றும் அது தொடர்பாக வருகின்ற குறித்துரைத்த நடைமுறைகளின் பிரகாரம் வேலை ஆரம்பித்தல் முற்பணத்தை செலுத்துவதற்காக உரிய செயற்திட்ட மேற்பார்வை பொறுப்பு பொறியியலாளரிடமிருந்து பரிந்துரை பெறப்படல் வேண்டும். எனினும், அந்த பரிந்துரை பெற்றுக்கொள்ளப் படாமல் ஒப்பந்தகாரருக்கு ரூபா 14,508,196 தொகை (VAT உடன்) வேலை ஆரம்பித்தல் முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரரால் நிர்மாணக் காணியில் அடித்தளத்தில் குழிகள் சில மாத்திரம் வெட்டப்பட்டு வேலை இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தது. | முற்பணத் தொகை செலுத்திய உத்தியோகத்தர் களுக்கும் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யாத ஒப்பந்தகாரருக்கும் எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | தற்போது பொறியியலாளர் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் முற்பணம் விநியோகித்தல் மேற்கொள்ளப்படுகின்றது. | முற்பணத் தொகை செலுத்திய உத்தியோகத்தர்கள் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யாத ஒப்பந்தகாரருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | ரூபா 12,435,596 முற்பண பிணைமுறி மற்றும் ரூபா 2,072,600 செயலாற்றல் பிணை முறி என்பன 2018 மார்ச் 31 ஆந் திகதி வரை மாத்திரம் செல்லுபடியாக காணப்பட்டதுடன் அவைகளின் செல்லுபடிக்காலம் முடிவடைவதற்கு 58 நாட்களுக்கு முன்னர் ஒப்பந்தகாரர் வேலையை கைவிட்டிருந்ததாக கெக்கிராவ பிரதேச பொறியியலாளரால் பிரதம அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் மேற்கூறப்பட்ட பிணை முறிகளின் செல்லுபடிக் காலம் முடிவடைவதற்கு முன்னர் அவற்றை பணமாக்கி கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒப்பந்தகாரர் வேலைகளை இடைநடுவில் விட்டு சென்றிருந்தமையை அறிந்திருந்தும் உடனடியாக முற்பண பிணைமுறி மற்றும் செயலாற்றல் பிணைமுறிகளை பணமாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர் களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஒப்பந்தகாரர் கறுப்பு பட்டியலில் இடப்பட்டுள்ளதுடன் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. | உரிய உத்தியோகத்த ர் களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைக ள் எடுக்கப்பட்டிரு க்க வில்லை. |
| (iii) | இந்த மூன்றுமாடிக் கட்டிட நிர்மாணத்திற்காக பாடசாலையின் காணப்பட்ட 80x20 அடி அளவிலான பழைய கட்டிடமொன்று உடைத்து அகற்றப்பட்டிருந்தமையினா ல் மாணவர்களின் வகுப்பறை தேவையினை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | புதிய கட்டிடத்தை மிகவும் விரைவாக நிர்மாணித்து மாணவர்களின் வகுப்பறை தேவையினை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மாகாண சபை நிதியத்தை ஈடுபடுத்தி இந்த கட்டிடத்தின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | புதிய கட்டிடம் இதுவரை நிர்மாணிக்கப்ப ட வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (கீ) | ‘‘அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டம்’’ இன் கீழ் பிரதம அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட அ.்.கெக்கிராவ திறப்பனை மகாநாம வித்தியாலயத்தின் விளையாட்டரங்கை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,542,277 தொகையின் அடிப்படையில் உடன்படிக்கை செய்திருந்த ஒப்பந்தகாரர் 2017 ஆம் ஆண்டின் போது அந்த வேலைகளை ஆரம்பித்திருந்தார். கூட்டுமொத்தமாக ரூபா 1,086,085 பெறுமதியுடைய வேலைப்பகுதி மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு மேற்கூறப்பட்ட செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்ததுடன் அதற்காக செலுத்தப்பட்ட ரூபா 1,086,085 பயனற்ற செலவினமாக இருந்தது. அதன்போது நிறைவேற்றப்படாத வேலைகளுக்காகவும் ரூபா 63,700 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தை நடைமுறை வேலையாக்கி வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன் நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக கொடுப்பனவு செய்த உத்தியோகத்தர் களிடமிருந்து அந்த பணம் அறவிடப்பட வேண்டும். | மேலதிக நிதியேற்பாட்டை ஒதுக்கும் வரை காணப்பட்ட நிதியேற்பாடுகளில் பகுதி ஒன்று பூர்த்தி செய்யப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது | நிறைவேற்றப்ப டாத வேலைகளுக் காக கொடுப்பனவு செய்த உத்தியோகத்த ர் களிடமிருந்து அந்த பணம் அறவிடப்பட்டிரு க்க வில்லை. |
| (கு) | அ.்.கெக்கிராவ திறப்பனை மகாநாம வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்துடன் உள்ள காணியை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 5,061,771 பெறுமதியில் 2017 மே 15 ஆந் திகதி ஒப்பந்தகாரர் ஒருவருடன் | போதியளவான நிதியேற்பாடு காணப்படாதிருக்கு மாயின் மாகாண நிதி விதி 46.1 இன் பிரகாரம் உடன்படிக்கை செய்யாதிருக்க வேண்டியமையால் | மண் பகுதிகளுக்காக புற்பிடி பதித்தல், பாதுகாப்பு வேலை நிர்மாணம், கொங்கிறீட் வடிகாண் சுவர்கள் மற்றும் வடிகாண் அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்த ர் களுக்கும் ஒப்பந்த காரர்களுக்கும் எதிராக சட்டரீதியான நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரதம அமைச்சின் செயலாளரால் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. அதற்காக 03 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 7,124,767 தொகை ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் மதிப்பீடு செய்யப்பட்ட மண் அளவிற்கு மேலதிகமாக 5770 மண் கியூப் வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2021 ஏப்ரல் 07 ஆந் திகதி வரையிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்ததுடன் பாடசாலை மாணவர்களுக்கு விளையாடுவதற்கு இருந்த சந்தர்ப்பமும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இழக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இவ்விளையாட்டு மைதானம் இன்மையினால் செலுத்தப்பட்ட ரூபா 7,124,767 தொகை பயனற்ற செலவினமாக இருந்தது. | இதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் ஒப்பந்த காரர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | | எடுக்கப்படாதிருந்த துடன் பாடசாலை மாணவர்களுக்கு விளையாடுவதற்கு பொருத்தமான பிரகாரம் விளையாட்டு மைதானத்துடன் உள்ள காணியில் எந்தவொரு செயற்பாடும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (கூ) | அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டத்தின் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களுக்காக அளவிடைப் பத்திரம், | மோசடியாக பெறப்பட்ட ரூபா 8,608,290 தொகையை உடனடியாக அறவிட வேண்டியிருந்ததுடன் மோசடி செய்த உத்தியோகத்தருக்கு | ரூபா 8,608,290 தொகை அறவிடப்பட்டுள்ளது. | மோசடியான உத்தியோகத்தர் களுக்கு குற்றப்பத்திரிகை கையளிக்கப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேலை பூர்த்தி அறிக்கை மற்றும் பட்டியல் செலுத்துதல் பொழிப்பை உள்ளடக்கிய ஆவணங்களின் மூலப்பிரதி அடிப்படையில் ஒரு சந்தர்ப்பத்தின் போதும் மற்றும் அந்த ஆவணங்களின் நிழற்பட பிரதியின் அடிப்படையில் இன்னுமொரு சந்தர்ப்பத்தின் போதும் ஆக இரண்டு தடவை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வு தெரிவு பரிசோதனையின் போது 2020 பெப்ரவரி 26 ஆந் திகதி வரையில் இரட்டைக் கொடுப்பனவின் மூலம் மோசடியாக பெறப்பட்ட தொகை ரூபா 8,608,290 ஆகும். இந்த முழுத் தொகையும் அறவிடப்பட்ட போதும் இரட்டைக் கொடுப்பனவு மேற்கொண்ட உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல் வேண்டும். | | |
| (கெ) | 2017 சனவரி 26 ஆந் திகதிய CSA/1/4 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் கடிதம் | | | |
| (i) | 02 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிநாடு சென்றுள்ள குழுவில் எண்ணிக்கை 05 இற்கு குறைவாயின் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த | 2017 சனவரி 26 ஆந் திகதிய CSA/1/4 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் கடிதத்தின் 02 ஆம் | தாபன விதிக்கோவையின் XV அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆளுனரின் அங்கீகாரம் பெறப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதிலும் 2018 ஆம் ஆண்டில் பிரதம அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளர் ஜப்பானுக்கு சென்ற சுற்றுலாவுக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | பந்தியின் பிரகாரம் சுற்றுலாவிற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். | | |
| (ii) | மேற்கூறப்பட்ட கடிதத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிநாடு சென்ற குழுவின் எண்ணிக்கை 05 இற்கு மேற்படுமாயின் திறைசேரியின் அங்கீகாரமும், சனாதிபதி அலுவலகத்தின் அங்கீகாரமும் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டில் பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியில் மேற்கொண்ட சுற்றுலா மற்றும் சிங்கப்பூரில் மேற்கொண்ட சுற்றுலாவிற்காக 06 உத்தியோகத்தர்கள் வீதம் பங்குபற்றியிருந்த போதும், அந்த 02 சுற்றுலாவிற்காக பிரதம அமைச்சினால் சனாதிபதி செயலகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | 2017 சனவரி 26 ஆந் திகதிய CSA/1/4 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் கடிதத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் சுற்றுலாவிற்காக திறைசேரியினதும் சனாதிபதி செயலகத்தினதும் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். | தாபன விதிக்கோவையின் XV அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆளுனரின் அங்கீகாரம் பெறப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | திறைசேரியினதும் சனாதிபதி அலுவலகத்தினதும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

**03. தலைப்பு 611 - வடமத்திய மாகாண உள்ளூராட்சித் திணைக்களம்**

---

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாணத்தின் உள்ளூராட்சித் திணைக்களத்திற்குரிய தீர்க்கப்படாதிருந்த ரூபா | மாகாண நிதி விதி 259.2 மற்றும் 259.3 இன் பிரகாரம் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பான கட்டுநிதி | இதற்குரிய பரிசோதனை மேற்கொண்டு அறிக்கையிடுமாறு உள்ளூராட்சி ஆணையாளருக்கு ஆலோசனை | கட்டுநிதி மீதி இதுவரை தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 80,000 கட்டுநிதி மீதியொன்று 01 வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்பட்டிருந்தது. | மீதி அடுத்துவரும் ஆண்டின் சனவரி 10 ஆந் திகதி அல்லது மாகாண திறைசேரியால் தீர்மானிக்கின்ற திகதியில் மீள தீர்க்கப்படாமை தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | உள்ளூராட்சித் திணைக்களத்திற்குரிய 03 வாகனங்கள் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது 05 சந்தர்ப்பங்களில் விபத்திற்கு உட்பட்டமையால் கூட்டுமொத்தமாக ரூபா 2,498,180 நட்டமொன்று ஏற்பட்டிருந்தமை ஆரம்ப விசாரணை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் வடமத்திய மாகாண நிதி விதி 54.1.6 இன் பிரகாரம் அந்த விபத்துகளுக்கு பொறுப்புவாய்ந்த நபர்களை இனங்கண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விபத்துக்களுக்கு பொறுப்பு வாய்ந்த நபர்களை இனங்கண்டு வடமத்திய மாகாண நிதி விதி 54.1.6 இன் பிரகாரம் நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முன்னைய பரிசோதனைகள் தாமதமடைந்ததற்கான காரணம் உள்ளூராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டுள்ளது. | வடமத்திய மாகாண நிதி விதி 54.1.6 இன் பிரகாரம் நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

**04. தலைப்பு 612 - வடமத்திய மாகாண கல்வித் திணைக்களம்**

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | தென்மாகாண சபை நிதிய கணக்கின் குறிப்பு இலக்கம் 18 இன் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த வாகனங்களை பதிவு செய்யும் கட்டணங்கள் மற்றும் வாகன அனுமதிப்பத்திர கட்டணங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,361,194,437 ஆன போதிலும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 1,343,184,266 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 18,010,171 ஆன வேறுபாடொன்று நிலவியது. | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் மீதி மற்றும் நிதியத்தின் கணக்குகளின் மீதி ஆகியவை இணக்கம் செய்யப்பட்டு திருத்தப்பட வேண்டும். | இந்த வேறுபாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பெற வேண்டிய வாகன பதிவுக் கட்டணங்கள் மற்றும் வாகன அனுமதிப்பத்திரக் கட்டண நிதியக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | மாகாண நிதியக் கணக்கின் நிதி நிலைமை கூற்றில் உள்ளடக்கப்பட்ட எழுதுகருவிகளின் இறுதி இருப்பினுள் விடய இலக்கம் 31302 கொண்ட வணிக முற்பணக் கணக்கிற்கு உரிய இறுதி இருப்புத் தொகையான ரூபா 209,164,862 உள்ளடக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்குரிய ஏனைய வழங்கல்கள் மற்றும் சேவைகளின் செலவினம் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டமையால் ஆண்டிற்குரிய பற்றாக்குறையும் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆண்டின் இறுதியில் உள்ளபடியான எழுதுகருவிகளின் இறுதி இருப்பு சரியாக கணக்கு வைக்கப்படவேண்டும். | வணிக முற்பணக் கணக்கிற்கு உரியதாக இறுதி இருப்பு நிதியக் கணக்கின் எழுதுகருவி இருப்பிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் வழங்கல் மற்றும் சேவை செலவினங்கள் மற்றம் பற்றாக்குறை குறைவாக கணிப்பிடப்பட்டிருந்தது. |
| (உ) | மாகாண சபை நிதியத்தின் கணக்கின் நிதி நிலைமைக் கூற்றின் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் தென்மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 166,580,523 மற்றும் செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணமான ரூபா 1,049,220,528 குறைத்துக் காண்பிக்கப்பட்டமையால் | நிதியத்தின் கணக்கில் மீதி மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் மீதிகளுக்கிடையே உள்ள வேறுபாடுகள் உரிய சீராக்கங்களின் மூலம் திருத்தப்படவேண்டும். | இந்த வேறுபாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதியக் கணக்கின் நடைமுறை பொறுப்புகள் மீதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதியத்தின் கணக்குகளில் நடைமுறை பொறுப்புக்களின் மீதி அதற்கு சமனான பெறுமதியினால் குறைத்து கணிப்பிடப்பட்டிருந்தது. | | | |
| (ஊ) | மாகாண சபையின் கீழுள்ள தலைப்பு 25 இற்குரிய ஒவ்வொரு நிதிக்கூற்றுக்களிலும் காண்பிக்கப்பட்டிருந்த ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதி ரூபா 10,653,262,621 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளபடியான மாகாண நிதியக் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள மீதி ரூபா 11,166,824,576 ஆனமையினால் அவற்றுக்கிடையே ரூபா 513,561,955 ஆன இணக்கம் செய்யப்படாத வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | நிதியக் கணக்கு மற்றும் தலைப்புகளுக்கு உரிய ஆதனங்கள், பொறிகள், மற்றும் உபகரணங்களுக் குரிய மீதிகள் இணக்கம் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | 2020 ஆம் ஆண்டின் போது திருத்துவதற்கு இணக்கக்கூற்று தயாரிக்கப்பட வில்லை. |

## 02. பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 319,062,138 தொகையான தீர்க்கப்படாத கட்டுநிதி மீதியில் ரூபா 304,482,670 தொகை 2019 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | கட்டுநிதி மீதிகளை தீர்ப்பதற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018.12.31 ஆந் திகதியில் உள்ளபடியாக ஒருங்கிணைந்த கட்டுநிதிக் கணக்கின் பிரகாரம் ரூபா 319,062,138 ஆன மீதிகள் தொடர்ந்தும் தீர்க்கப்படாத கட்டுநிதிகளாக தெ.மா. சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் ரூபா 54,064,169.02 ஆன தொகை மாத்திரம் நிலவுகின்றமையை அறிக்கையிடுகின்றேன். 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான தீர்க்கப்படடாத கட்டுநிதி மீதிகள் ரூபா 54,064,169 வரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான தீர்ப்பனவு செய்ய வேண்டிய கட்டுநிதி மீதி ரூபா 149,288,441 ஆகும். |
| (ஆ) | தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையால் தசுண கடன் முன்மொழிவு முறையின் கீழ் வழங்கிய கடன்களிடையே மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கடன் மீதிகள் 20 இற்குரிய நிலுவை கடன் தவணைகள் மற்றும் வட்டி ரூபா 1,092,984 தொகை ஆகும். | இந்த கடன் தவணைகள் மற்றும் வட்டி அறவிடுவதற்கு துரிதமான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். | பிரதான சட்ட உத்தியோகத்தரினால் பிணையாளர்களிடமிருந்து நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 03 பேர் மாத்திரம் கடன் செலுத்தியிருந்தனர். | 2021 செப்தம்பர் 30 ஆந் திகதியில் உள்ளபடியான 17 மீதிகளுக்குரிய ரூபா 3,613,458 ஆன மீதியொன்று தொடர்ந்தும் நிலுவையாக காணப்பட்டது. |

## 03. கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

---

| | | | |
|---|---|---|---|
| தென் மாகாணத்தின் அபிவிருத்தி அதிகாரசபையினால் ரூபா 12,280,690 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மற்றும் ரூபா 283,555 பெறுமதியான கடன்கொடுத்தோர் தொடர்பில் விரிவான பட்டோலைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் தொடர்பில் விரிவான பட்டோலைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் முன்வைக்கப்பட வேண்டும். | கடன் கொடுத்தோரின் பேரேட்டுக் குறிப்புகளின் மூலம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. கடன் கொடுத்தோர் தொடர்பில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதிக்கூற்றுக்களை சான்றுபடுத்தும் போது உரிய சான்றுபடுத்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விரிவான பட்டோலைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 04. சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

---

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | 2009 பெப்ரவரி 20 ஆம் திகதிய 1589/30 ஆம் இலக்க அரச சேவைகள் அணைக்குழுவின் செயலாளரால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்தமானியின் xvii ஆம் அத்தியாயத்தின் 184 ஆம் பிரிவின் பிரகாரம், 2020 பெப்ரவரி 25 ஆம் திகதிய தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொது முகாமையாளரின் கடிதத்தின் மூலம் 04 ஊழியர்களுக்கு நிர்வாக பதவிகளில் நியமனங்கள் | 1589/30 ஆம் இலக்க 2009 பெப்ரவரி 20 ஆம் திகதிய அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அந்தத் திருத்தங்களை ஆட்சேர்ப்பு நடைமுறையில் உள்ளடக்குவதற்கும் அதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. | வர்த்தமானி அறிவித்தலுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஆட்சேர்ப்புகள் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கப்பட்டு 2020 மார்ச் முதல் ஜூன் வரையிலும் ரூபா 649,760 ஆன சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| (ஆ) | 2016 ஏப்பிரல் 19 ஆம் திகதிய தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு முரணாக தகைமைகளை பூர்த்தி செய்திராத இரு விண்ணப்பதாரிகளுக்கு தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) பதவிக்கு பதவியுயர்த்தப்பட்டு 2019 செப்டெம்பர் 09 ஆம் திகதி நியமனம் வழங்கப்பட்டிருந்தது. | இடம்பெற்றுள்ள தவறை திருத்துதல் மற்றும் பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருப்பதற்கான நடைமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. எனினும், பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினருக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் XXI ஆம் அத்தியாயத்தின் 1.1 ஆம் உபபந்தியின் பிரகாரம், சீருடைகளுக்கான படிகளுக்கு உரித்துடைய உத்தியோகத்தர்களின் தொகுதிக்கு உரித்தற்ற ஆசிரியர்களுக்கான சீருடைகள் | தாபன விதிக்கோவையின் XXI ஆம் அத்தியாயத்தின் 1.1 ஆம் உப பந்தியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | தாபன விதிக்கோவையின் XXI ஆம் அத்தியாயத்தின் 1.1 ஆம் உப பந்தியை மீறுதல் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | உத்தியோகபூர்வ சீருடைகளுக்கான படிகளுக்கு உரித்தற்ற ஆசிரியர்களுக்காக செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் அவ்வாறே காணப்படுகின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்குவதற்கு ரூபா 157,706,458 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | | றன. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம், 05 நிறுவனங்களுக்குரிய ரூபா 28,682,581 பெறுமதியான 02 வருட காலங்களை கடந்த 228 பொதுவைப்புக் கணக்குகளின் மீதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான இரண்டு வருடங்களை விஞ்சிய வைப்புகளின் 03 நிறுவனங்களுக்குரிய ரூபா 8,094,453 ஆன காலாவதியான வைப்புகள் தொடர்ச்சியாக நிலவுவதாக அறிக்கையிடப்பட்டுள் ளது. | ரூபா 8,094,453 ஆன மீதி தொடர்ச்சியாக நிலவுகின்றது. |

(உ) **அரச நிர்வாகச் சுற்றறிக்கை**

-------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2017 பெப்ரவரி 17 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை 02/2017 இன் பிரகாரம், விசேட கடமைகளுக்காக உத்தியோகத்தர் ஒருவர் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அல்லது கணக்கீட்டு உத்தியோகத்தரின் முன் அனுமதியுடன் அதிவேக பாதையை பயன்படுத்திய சந்தர்ப்பமொன்று அதற்காக | 2017 பெப்ரவரி 17 ஆந் திகதிய 02∴2017 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 02∴2017 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கைக்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் தொடர்பில் எதுவித நடவடிக்கைளும் எடுக்கப்படவில்லை. | பொதுவான நாளாந்த கடமைகளுக்க ாக வருகைதரும் போது, தற்போது அதிவேக வீதியை பயன்படுத்துவத ற்காக நுழைவுக் கட்டணங்களிை ன மீளளிப்பு செய்தலும் மேற்கொள்ளப் படுவதில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயன்படுத்திய வாகனத்திற்காக செலுத்திய நுழைவுக் கட்டணத்திற்கான மீளளிப்பினை மேற்கொள்ள முடியுமான போதிலும், தென் மாகாண கல்விப் பணிப்பாளர் நாளாந்தம் சாதாரண கடமைகளுக்காக வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு வருகை தரும்போது அதிவேக பாதைகளினை பயன்படுத்திய மைக்காக ரூபா 137,250 ஆன நுழைவுக்கட்டணம் மீளளிக்கப்பட்டிருந் தது. | | | |
| (ii) | 2019 மே 31 ஆந் திகதிய 13/2008(v) ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், மாகாண பிரதான செயலாளரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்காக எரிபொருள் வழங்கும் போது அரச நிர்வாக | 2019 மே 31 ஆந் திகதிய 13/2008(v) ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆளுநரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். | எதுவித தடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிரு க்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் படிகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், தென் மாகாண 2019 மே 16 ஆந் திகதிய பிரதம செயலாளரின் சுற்றறிக்கை (நிதி) -02-2019 இன் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனத்திற்காக பெற்றுக்கொள்ளப்படும் எரிபொருளின் அளவு அதிகரிக்கப்பட்டிருந்தது. | | | |
| (iii) | 2009 மார்ச் 05 ஆந் திகதிய 2007/10 (I) ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், தென் மாகாணத்தின் முன்னாள் விவசாய அமைச்சருக்கு 2004 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் வரை உத்தியோகபூர்வ இல்லத்திற்கான | 2009 மார்ச் 05 ஆந் திகதிய மற்றும் 2007/10 (I) ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதுவித தடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது முன்னாள் அமைச்சர் மரணமடைந்துள்ளார். சுற்றறிக்கைக்கு முரணான கொடுப்பனவுகள் அவ்வாறே உள்ளன. |

படிகளாக ரூபா 3,000,000 தொகை 2019 ஏப்ரல் 22 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்த போதிலும், இந்த காலப்பகுதியில் அந்த அமைச்சர் காலி மாவட்டத்தில் நிரந்தரமான வசிப்பிடமொன்றில் குடியிருக்கின்றமை வெளிப்படுத்தப்பட்டது.

(ஊ) **மாகாண நிதி விதிகள்**

--------------------------------

| | | | |
|---|---|---|---|
| 272.1 இன் பிரகாரம், வெளிவாரி தரப்பினருக்கு ரூபா 2,000 தொகை அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினை செலுத்தும் போது அதனை காசாக செலுத்த கூடாத போதிலும், கொங்கம விவசாய பண்ணை நிலப்பிரதேசத்தில் பௌதீக மூலதன சொத்துக்களினை கட்டியெழுப்புவதற்கு மற்றும் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்கு ரூபா 3,389,406 ஆன அனைத்து செலவினங்களும் தென்மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் | மாகாண நிதி விதி 272.1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முழுமையான குழு அறிக்கை கிடைத்த பின்னர் மேலதிக நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பில் ஆரம்ப விசாரணையொன்று மேற்கொள்ளப் படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெயருக்கு வரையப்பட்ட காசோலை மூலம் இடம்பெற்றிருந்தது. | | | |
| (எ) | 2015 மார்ச் 10 ஆந் திகதிய 03/2014(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தென் மாகாணத்தின் கல்வித் திணைக்களத்தின் மிகை ஊழிய அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தரொருவர் கடமை நிறைவேற்றல் அடிப்படையில் அந்த தரத்தின் முதலாம் வகுப்பில் பதவியொன்றில் (எல்பிட்டி வலய கல்வி பணிப்பாளராக) நியமிக்கப்பட்டமையால் 2014 செப்தம்பர் முதல் 2018 செப்தம்பர் வரையிலும் ரூபா 445,726 தொகையான கடமை நிறைவேற்றல் படியொன்றும் தொலைபேசி படியும் செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பில் அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மாகாண கணக்குகள் குழுவிற்கு அறிவிக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 05. முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 20(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையினால் காலத்திற்குக் காலம் கட்டளைச்சட்டங்களின் மூலம் தீர்மானிக்கப்படும் பணத்தின் அளவானது மாகாண சபை நிதியத்திலிருந்து அவசர சந்தர்ப்பங்களின் போது நிதியத்திற்கு செலுத்த வேண்டும். எவ்வாறான போதிலும் நிதியம் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மாகாணசபை நிதியத்தில் இருந்து வழங்கப்பட்ட தொகை நீங்கலாக வேறு எந்த பணமும் மாகாணசபை நிதியத்திலிருந்து வழங்கப்பட்டிருக்கவில்லை. நிதியத்தின் முதலீட்டிலிருந்து ஈட்டப்படும் நிலையான வைப்பு வட்டி வருமானம் மாத்திரம் நிதியத்தின் ஒரே நிதி உட்பாய்ச்சல் மூலமாக காணப்பட்டது. | மாகாண அவசர சந்தர்ப்பங்களுக்கான நிதியத்தினை வலுவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | இது தொடர்பில் நிலவும் பிரச்சினைகளை கலந்துரையாடி எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. | மாகாண சபை நிதியத்திலிருந்து உரிய தொகை அவசர சந்தர்ப்பங்கள் நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | தென் மாகாண சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் தென்மாகாணத்தின் முயற்சியாளர்களுக்கான | நிலுவை கடன்தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

ஊக்குவிப்பு அபிவிருத்தி கடன் செயற்திட்டம் (Southern Province Enterpreniership Encouragement Development Loan Project) இன் கீழ் 2020 ஒக்டோபர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான நிலுவை கடன் பெறுநர்களின் எண்ணிக்கை 282 ஆக காணப்பட்டதுடன் மொத்த நிலுவை கடன் தொகையானது ரூபா 23,371,333 ஆகும். இவற்றுள் 01 வருடங்களை விட அதிகமான 60 நிலுவை கடன் அறவிடப்பட வேண்டிய கடன்தொகை ரூபா 10,305,929 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அந்த தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு சொந்தமான கப் வண்டியொன்று 2019 மார்ச் 29 ஆம் திகதி விபத்துக்குள்ளாகி இருந்தது. அந்த விபத்து தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணை அறிக்கையின் பிரகாரம் மற்றும் 2020 மார்ச் 17 ஆம் திகதிய 3 நபர்களை கொண்ட விசாரணைக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த பரிந்துரையானது விபத்து இடம்பெறும் சந்தர்ப்பத்தில் வாகனத்தை ஓட்டிய சாரதி பொறுப்புக் கூற வேண்டியமையால் இடம்பெற்ற நட்டமான ரூபா 284,626 தொகையை அவரிடமிருந்து அறவிடுவதற்கும் அதன் பின்னர் கப் வண்டியினை ஓட்டியமையினால் அதன் எஞ்சினுக்கு ஏற்பட்ட சேதமான ரூபா 254,337 ஆன தொகையை குறித்த சாரதியிடமிருந்தே அறவிடுவதற்கும் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2020 நவம்பர் | ஆரம்ப விசாரணை அறிக்கையின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பில் விசாரணை சபையின் அறிக்கையின் பிரகாரம், நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விசாரணை சபையின் அறிக்கையின் பிரகாரம் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 30 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஈ) | தென்மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் எதுவித பணியையும் மேற்கொள்ளாது சம்பளத்தை பெற்றவாறு உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை 84 ஆகும். | ஆசிரியர்களின் சுகாதார நிலைமைகள் தொடர்பான போதியளவான மருத்துவ அறிக்கைகளை பெற்று உரிய முறையில் அதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதுவித பணியையும் மேற்கொள்ளாத நோய் நிலைமையில் உள்ள ஆசிரியர்கள் தொடர்பான தகவல்கள் தென்மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பது அறியத்தரப்பட்டுள்ளது. எனினும் மருத்துவ சபைக்கு அனுப்பி உரிய அறிக்கைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மருத்துவ சபைக்கு அனுப்பி மருத்துவ அறிக்கைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | தென்மாகாணத்தின் 05 வலயங்களுக்குரிய 128 பாடசாலைகளின் 205 ஆசிரியர்களுக்கு அவர்களின் நியமன பாடத்திற்கு உரிய கற்பித்தல் நடவடிக்கைகளை ஒப்படைக்காது அலுவலகப் பணிகள், பாடசாலையின் மேற்பார்வை, வாசிகசாலை மற்றும் களஞ்சியப் பணிகள் போன்ற பாடசாலையின் வேறு பணிகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. | ஆசிரியர்களை பாடசாலைகளின் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டும். | இது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரையிலும் உரிய ஆசிரியர்களுக்க நியமன பாடத்திற்குரிய கற்பித்தல் நடவடிக்கைகளை ஒப்படைத்தல் இடம்பெற்றிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 1972 இன் 15 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் அதிகாரச்சட்டத்தின் 43(ii) பிரிவின் பிரகாரம் கணக்காய்விற்கு உட்பட்ட அதிகார பிரதேசத்தில் 229 சங்கங்களின் இலாபத்திலிருந்து கூட்டுறவு நிதியத்திற்கு ரூபா 194,382,122 ஆன தொகை அறவிட வேண்டியதாக இருந்த போதிலும் இந்த பணத்தினை அறவிடுவதற்கு மாத்தறை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கூட்டுறவு சங்கங்கள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கூட்டுறவு நிதியத்திற்கு அறவிடப்படவேண்டிய பணத்தை அறவிட வேண்டும். | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 180,288,146 ஆன தொகை தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியமையால், அந்த பணத்தை அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டுறவு நிதியத்திற்கு தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியதாக இருந்த ரூபா 180,288,146 ஆன தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்கு நீதிமன்றத்தினால் அனுப்பப்பட்ட தண்டப்பணம் குறித்த சங்கங்களுக்கு துரிதமாக அனுப்பப்பட வேண்டிய போதிலும் இனங்காணப்படாத ரூபா 914,468 ஆன தண்டப்பண மீதி ஒன்று 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்டது. | நீதிமன்ற தண்டப்பணத்தை சரியாக இனம் கண்டு உரிய சங்கங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 ஆகஸ்ட் 30 ஆம் திகதியளவில் தொடர்ந்தும் நிலவும் மீதி ரூபா 899,761 ஆகும். | ரூபா 899,761 ஆன மீதியொன்று தொடர்ந்தும் அந்த சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியதாக உள்ளது. |
| (ஏ) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் இலக்க அதிகாரம்) 317 பிரிவின் | மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 317 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 317 ஆம் பிரிவின் பிரகாரம், தென் | இதுவரையிலும் ஆண்டறிக்கை களை தயாரித்து |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரகாரம் தென் மாகாணத்தின் மாநகர சபைகளின் பணிகள் தொடர்பில் மாகாண ஆளுனரினால் தயாரிக்கப்பட்டு மாநகர சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆண்டறிக்கைகள் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்க வேண்டும். | மாகாணத்தின் மாநகர சபைகளின் பணிகள் தொடர்பில் 2018 ஆம் ஆண்டுக்காக உள்ளூராட்சி ஆணையாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய ஆண்டறிக்கைகள் தயாரிக்கப்படவில்லை என்பதும், 2019 ஆம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கைகளை தயாரிப்பதற்காக புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கு அதிகாரம் கையளிப்பு இடம்பெற்றிருக்கவில்லை. | சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 06. எதிர்பார்த்த பெறுபேறுகளைப் (Out Put) பெற்றுக்கொள்ளாமை

---

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | றுகுணு சுற்றுலா பணியகத்தின் மதுனாகல செயற்றிட்டத்தின் சுடுநீர் ஊற்று நீரினை பயன்படுத்தி பாதங்களுக்கு இயன்முறை பயிற்சி வழங்குவதற்காக ரூபா 1,979,625 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 30ஒ10 அடிகள் கொண்ட கட்டிடத்தின் நிர்மாணம் நிறைவு செய்யப்பட்டிராததுடன் அத்திவாரம் மற்றும் தூண்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தமையால் செயற்றிட்டத்தின் நோக்கம் | செயற்றிட்டத்தை நிறைவு செய்து எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். | 2021/2022 ஆம் ஆண்டின் அபிவிருத்தி திட்டத்தின் நிதியேற்பாடுகளை ஒதுக்கி இந்த பணியை நிறைவு செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. | கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிறைவேறியிராததுடன் ரூபா 1,979,625 ஆன செலவினம் விளைவற்றதாகியிருந்தது | | | |
| (ஆ) | மதுனாகல இயற்கை சுடுநீர் ஊற்றுக்கு அண்மியதாக சுற்றுலா வசதிகளினை அபிவிருத்தி செய்யும் பொருட்டு றுனுணு சுற்றுலா பணியகத்தினால் ரூபா 46 மில்லியன் பெறுமதியான 2017 ஆம் ஆண்டு முதல் நிர்மாணிக்கப்பட்டவாறு இருந்த போதிலும், இந்த நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிராத காரணத்தினால் மக்களுக்கு அதனை பயன்படுத்த முடியாதிருந்தது. | நிர்மாணப் பணிகள் செயற்திறனுடன் மேற்கொள்ள வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் புத்துருவாகும் செயற்திட்டமொன்றாக நடைமுறைப்படுத்தல் இடம்பெற்றுள்ள போதிலும், சிற்றுண்டிச்சாலை இதுவரையிலும் பொது மக்களுக்கு பயன்படுத்த முடியாதுள்ளது. | சிற்றுண்டிச்சாலை இதுவரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 07. விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

--------------------------------------------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | றுகுணு சுற்றுலா பணியகத்தினால் மதுனாகல செயற்றிட்டத்தின் கீழ் ரூபா 41,452,679 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலை, ஓய்வு அறை மற்றும் உணவு அறை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது விளைவற்ற நிலையில் காணப்பட்டதுடன் சுற்றுலா விடுதிக்காக | குறித்த சொத்துக்களை உரிய முறையில் பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | 2021 ஆம் ஆண்டின் இறுதிக்கு முன்னர் அதனை சுற்றுலா வசதியொன்றாக பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டடவாறு உள்ளது. | சுற்றுலா பயணிகளின் தேவைப்பாட்டுக்காக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்த ரூபா 837,000 பெறுமதியான 03 மின் பிறப்பாக்கி இயந்திரங்கள் செயலற்ற நிலையில் காணப்பட்டன. மேலும் 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 1,306,910 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட கமிகடமண்டிய இன் நிர்மாணங்கள் எவையும் இனங்காண முடியாதவாறு அதன் சிதைவுகள் மாத்திரம் எஞ்சியிருந்தது. அவ்வாறே கமிகம்மாண இன் ரூபா 2,718,744 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட 04 சுற்றுலா விடுதிகளின் கூரைத்தகடுகள் கழன்று வீடு சிதைவடைந்தவாறு காணப்பட்டது. | | | |
| (ஆ) | தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் கலகொடையில் அமைந்துள்ள கல்தார பிரிவின் உற்பத்தி நடவடிக்கைகள் 2018 ஜுலை 09 ஆம் திகதி முழுமையாக நிறுத்தப்பட்டிருந்ததுடன் காபற் உற்பத்தி இயந்திரம் 2020 செப்டெம்பர் 09 கணக்காய்வுத் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது இற்றுப் | இந்த இயந்திரங்கள் தொடர்ந்தும் பயன்படுத்த முடியாதெனின், கைத்தவிர்க்கப்பட வேண்டும். | விற்பனைக்கான பணிகள் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளன. | இயந்திரங்களை விற்பனை செய்வதற்கு தேவையான அடிப்படை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போனவாறு காணப்பட்டது. இந்த தார் உற்பத்தி நிறுத்தப்பட்டமையால் இந்த இயந்திரத்துடன் இறக்குமதி செய்யப்பட்ட தார் அரைக்கும் 02 இயந்திரங்கள் மற்றும் அவற்றை உருக்கும் 02 இயந்திரங்கள் உடுக்காவ இயந்திரப்பிரிவில் நிறுத்தி வைக்கப்பட்டு விளைவற்றவாறு காணப்பட்டது. | | | |
| (இ) | 2011-2015 காலப்பகுதியினுள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வீதிகளுக்கு காபற் இடுவதற்காக தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்த 14 இயந்திரங்கள் விளைவற்றவாறு இயந்திரப் பிரிவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் காலி தலைமை அலுவலகத்தினை நிர்மாணிப்பதற்கு கொண்டுவரப்பட்ட பொருட்கள் மற்றும் 166 உதிரிப்பாகங்கள் 2001 ஆம் ஆண்டு முதல் இயந்திரப் பொறியியல் நிறுவனத்தின் | இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் விளைவற்றுக் காணப்படுவதை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 02 இயந்திரங்கள் அல்பிட்டிய மற்றும் அலுத்வெவ பெரமுசு இயந்திர வளாகத்தில் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. ஒரு இயந்திரம் ஏலத்தில் விடப்பட்டுள்ளது. 02 வாகனங்கள் அஸ்போல்ட் உற்பத்திகாக சூடாக்கப்பட்ட தாரினை கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்படுகின்றன. ஏனைய இயந்திரங்கள் அஸ்போல்ட் உற்பத்தி மற்றும் அவற்றை விதிகளில் பதித்தல் தொடர்பிலான இயந்திரங்கள் ஆகும். பொருட்களிடையே பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய உருப்படிகள் | எஞ்சிய 09 இயந்திரங்களை கைத்தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஊழியர்களின் ஓய்வு அறையில் விளைவற்றவாறு குவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே தார் உற்பத்தி இயந்திரத்தை செயற்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட 02 மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் 2018 ஜூலை மாதம் முதல் 2020 ஒக்டோபர் 09 கணக்காய்வுத் திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | தேவைக்கேற்ற வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்தும் எஞ்சியுள்ள பொருட்கள் தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஏனைய அலுவலகங்களில் பரீட்சிக்கப்பட்டு பெற்றுக்கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டுள்ளதுடன் எஞ்சியுள்ள பொருட்களை துரிதமாக கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | |

**08. போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள**

--------------------------------------------------------------------------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | ஆயர்வேத உற்பத்தி முற்பணக் கணக்கின் (விடய இலக்கம் 30702) பெறுவனவுகளுக்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆகக் குறைந்த எல்லை ரூபா 60,000,000 ஆன போதிலும் பெறுவனவுகளின் உள்ளபடியான பெறுமதி ரூபா 52,412,730 ஆனமையால் பெறுவனவுகளின் ஆகக் குறைந்த எல்லைக்கு ரூபா 7,587,270 இனால் அடையப்பட்டிருக்கவில்லை. | எல்லைகளை விஞ்சுவதற்கு முன்னர் உரிய எல்லைகளில் திருத்தங்களை மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறு இடம்பெறாதிருப்பதற்கு பொறுப்பாக செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுவனவுகளின் ஆகக் குறைந்த எல்லையை ரூபா 7,587,270 இனால் அண்மித்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் போது ஆயர்வேத உற்பத்திகளின் முற்பணக் கணக்கின் அதிக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த செலவினத்தின் எல்லையானது ரூபா 161,775 இனால் மீறப்பட்டிருந்த சந்தர்ப்பம் அவதானிக்கப்பட்டது. | வணிக முற்பண கணக்குகளின் அதிகாரம் வழங்கப்பட்ட எல்லைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். ஏதேனும் காரணத்தினால் எல்லை மீறப்படல் அவதானிக்கப்பட்டால் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறு இடம்பெறாதிருக்க பொறுப்புடன் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. | அதிகாரமளிக்கப்பட்ட செலவினத்தின் உச்ச எல்லையானது ரூபா 161,775 இனால் விஞ்சியிருந்தது. |
| (இ) | பெலியத்த மருந்துப் பொருள் உற்பத்தி கூடத்தின் உயிரியல் வாயு அலகினை நிர்மாணிப்பதற்கு தென்மாகணத்தின் பிரதம அமைச்சு மற்றும் ஹல்போ இக்கோ கிறீன் கம்பனி 2013 ஆகஸ்ட் 21 ஆம் திகதி உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திட்டிருந்தது. தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டதாக சான்றுபடுத்தி 2014 பெப்ரவரி 21 ஆம் திகதி ரூபா 792,000 ஆன கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அது 2015 பெப்ரவரி 21 ஆம் திகதியின் பின்னர் பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாதவாறு செயலற்று காணப்பட்டது. | உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாணங்களை நிறைவேற்றி பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | மருந்துப் பொருட்களின் உற்பத்தியின் போது உயிரியல் வாயு கொள்கலன்களின் பயன்பாடு தோல்வியடைந்தமையால் Helpo நிறுவனத்துடன் கலந்துரையாடி அதனை மேம்படுத்துவதற்கு உரிய ஆரம்ப கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | விளைவற்ற சொத்தொன்றாக காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | மூலதன செலவினத்தை முறைமைப்படுத்துதல் தொடர்பிலான பிரதான செயலாளரின் 03/2015 ஆம் இலக்க 2015 யூன் 26 ஆந் திகதிய சுசற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்காது தென்மாகாண பிரதான அமைச்சினால் 2011 ஆம் ஆண்டு வரையிலும் அதிகாரசபைக்கு விடுவிக்கப்பட்ட பணத்தின் ரூபா 136,237,163 கூட்டுத்தொகை தீர்க்கப்படாது அதிகாரசபையின் வங்கிக் கணக்குகளில் அதிகாரமற்ற முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. மாகாண நிதி விதி 268.2.1 இற்கு இற்கு இணங்காத வகையில் அந்த வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 1995 இன் 01 ஆம் இலக்க தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் விஞ்ஞாபனத்தின் 25(2) பிரிவிற்கு இணங்காத வகையில் அந்த கணக்கின் வைப்புகளிலிருந்து ஏற்றப்பட்ட ரூபா | பிரதான செயலாளரின் சுற்றறிக்கை, மாகாண நிதி விதி மற்றும் தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் விஞ்ஞாபனம் ஆகியவற்றின் பிரகாரம் செயற்பட வேண்டும். | ரூபா 82,110,854 ரொதகை பிரதம செயலாளருக்கு தீர்க்கப்பட்டுள்ளது. | ரூபா 54,126,309 தொகையை தொடர்ந்தும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 9,950,045 கூட்டுத்தொகையான வட்டி வருமானங்கள் அதிகாரசபையினால் பல்வேறு கடன் வசதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக உரிய அங்கீகாரமின்றி பயன்படுத்தப்பட்டிருந்தது. | | | |
| (உ) | நிதி ஆணைக்குழுவின் FC/3/3/2014 மற்றும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதிய சுற்றறிக்கைக்கு இணங்காத வகையிலும் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான நிர்வாக செலவினங்களை மேற்கொள்வதற்கு பிரதான செயலாளரினால் ரூபா 6,661,619 கூட்டுத்தொகை வழங்கப்பட்டுள்ள போது அதிகாரசபைக்கு கிடைத்த ரூபா 38,000,000 தொகையான மூலதன தொகையில் ரூபா 3,420,000 தொகை நிர்வாக செலவினங்களுக்காக மேற்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிதி ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் இறுதியில் முற்பணங்களை தீர்க்கும் அடிப்படையில் பிரதம அமைச்சின் ஊடாக நிர்வாக செலவினங்கள் அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டதெனவும், கட்டுநிதி கிடைத்த, விசேட, பணி முன்மொழிவுகளின் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுரைக்கமைய 9% நிர்வாக செலவினமாக மாற்றப்பட்டதெனவும், நிர்வாக செலவின முற்பணங்கள் கிடைத்த பின்னர் அந்த பணம் மீண்டும் செயற்திட்ட கணக்கிற்கு மிகை அறவீடாக்கி நடைமுறைப்படுத்தும் அடிப்படையில், தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கட்டுநிதி | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மாற்றப்பட்டது. எனினும், கிடைத்த மூலதனத்தில் 9 சதவீதம் நிர்வாகச் செலவினங்களை மேற்கொள்ளல் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை | |
| (ஊ) | 2019 ஆம் ஆண்டினுள் தேசிய பாடசாலைகளின் நிர்மாணங்களினை மேற்பார்வை செய்வதற்காக மாகாண கல்விப் பணிப்பாளர், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் கணக்காளர் ஆகிய உத்தியோகத்தர்கள் மூவருக்காக 11 மாதங்களுக்காக வரிசை அமைச்சின் செலவின தலைப்பின் ஊடாக அந்த நிர்மாணங்களின் மேற்பார்வை தொடர்பில் எவ்வித அறிக்கையினையும் சமர்ப்பிக்காத போது ரூபா 571,458 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | நிர்மாணங்களின் மேற்பார்வைகள் தொடர்பில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பிரதம கணக்காளரினால் தவறு ஏற்றுக்கொள்ளப்பட்டு ரூபா 186,293 ஆன தொகை செலுத்தப்பட்டுள்ளது. | மூன்று உத்தியோகத்தர்களில் பிரதம கணக்காளர் தவறை ஏற்றுக்கொண்டு அவரால் தேசிய பாடசாலைகளை கண்காணிப்பதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 186,293 தொகை செலுத்தப்பட்டுள்ளது. ஏனைய மூன்று உத்தியோகத்தர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 09. தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

-----------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 74,999,565 கூட்டுத்தொகையான 04 கடன்பட்டோர் மீதிகள் மற்றும் ரூபா 276,084,492 கூட்டுத்தொகையான 03 கடன்கொடுத்தோர் மீதிகள் நீண்டகாலமாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்படுவதுடன் அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நீண்ட காலமாக நிலவும் கடன்பட்டோர் மீதிகளை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | எதுவித தடுப்பு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பனவு செய்யாது தொடர்ந்தும் காணப்படுகின்றது. |
| (ஆ) | ரூபா 13,135,482 கூட்டுத்தொகையான 04 மீதிகள் பல வருடங்களாக பெறவேண்டிய மீதிகளாக நிதிக்கூற்றுகளில் காணப்படுவதுடன் அவற்றை அறவிடுவதற்கு அல்லது அவற்றை அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்டகாலமாக முன்கொண்டுவரப்படும் பெறவேண்டிய மீதிகளை துரிதமாக தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதுவித தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பெற வேண்டிய மீதிகள் இதுவரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | காலி மாவட்டத்தின் மருந்துப் பொருட்கள் களஞ்சியசாலையின் 2019 ஆம் ஆண்டில் களஞ்சிய பரிசோதனை அறிக்கைகளின் பிரகாரம் கைதவிர்க்கப்பட வேண்டியது என இனங்காணப்பட்ட ரூபா 17,755,890 பெறுமதியான 154 மருந்து பொருள் வகைகள் 2019 நவம்பர் 29 ஆந் திகதி வரையிலும் கைதவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | களஞ்சிய பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் மருந்துப் பொருட்கள் கைதவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கைத்தவிர்க்கப்பட வேண்டிய மருந்துகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு விசாரணை சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | கைத்தவிர்ப்பு நடைமுறை நிறைவடைந்திருக்கவில்லை. |
| (ஈ) | தென் மாகாண சபையின் 2009 இன் 1 ஆம் இலக்க தென் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை (திருத்தப்பட்ட) கட்டளைச்சட்டத்தின 11 ஆம் பிரிவின் கீழ் 2012 செப்தம்பர் 26 ஆந் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1777/39 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2012 இன் 01 ஆம் இலக்க முற்சக்கரவண்டி பயணிகள் போக்குவரத்து சேவைகள் பிரமாணங்கள் மற்றும் 2012 இன் 2 ஆம் இலக்க பாடசாலை மாணவர்களுக்கான | 2012 இன் 01 ஆம் இலக்க முற்சக்கரவண்டி பயணிகள் போக்குவரத்து சேவைகள் பிரமாணங்கள் மற்றும் 2012 இன் 2 ஆம் இலக்க பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து சேவைகள் பிரமாணங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அரசின் 1777/39 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட போதிலும், அதற்குரிய தேசிய கொள்கைகளை தயாரிக்காது உரிய பிரமாணங்களை நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது. | தேசிய கொள்கை தயாரிக்கப்பட்டிராமையால், உரிய பிரமாணங்களை இதுவரையிலும் நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போக்குவரத்து சேவைகள் பிரமாணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை | | | |

**10. சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முன்னால் பிரதி பொது முகாமையாளர் (நிர்வாகம்), நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு நியமித்தல் மற்றும் பிரதி பொது முகாமையாளர் (நிர்வாகம்) பதவிக்கு பதவியுயர்வு வழங்குதல் 2006 ஏப்பிரல் 10 ஆம் திகதிய 28 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் பிரதிப் பொது முகாமையாளர் (நிர்வாகம்) பதவியொன்று இல்லாதுள்ள போது நிர்வாக உத்தியோகத்தர் பதவியில் சேவையினை நிரந்தரமாக்காது பிரதிப் | தென்மாகாணசபை நிதியம் மற்றும் கணக்குகள் குழுவின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பிரதிப் பொது முகாமையாளர் (நிர்வாகம்) நியமிக்கப்பட்டுள்ளதுட, பின்னர் கணக்குகள் குழுவின் கட்டளைகளின் பிரகாரம் பிரதிப் பொது முகாமையாளர் (நிர்வாகம்) பதவியிலிருந்து உதவி முகாமையாளர் (நிர்வாகம்) பதவியினை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் அதனை அவர் நிராகரித்து சேவையிலிருந்து விலகியிருந்தார். பிரதிப் பொது முகாமையாளர் (நிதி மற்றும் கட்டுப்பாடு) பதவியொன்று காணப்படுகின்றமையால் பிரதிப் பொது முகாமையாளர் (நிர்வாகம்) பதவிக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவி | குறித்த உத்தியோகத்தர் சேவையிலிருந்து விலகிச் சென்றுள்ளதுடன், செலுத்தப்பட்டிருந்த சம்பளம் மற்றும் படிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொது முகாமையாளர் பதவியில் பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தார். அதன் பிரகாரம் குறித்த பதவிகளுக்கு செலுத்தப்பட்டிருந்த சம்பளம் மற்றும் படிகளை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் 2018 டிசெம்பர் 17 ஆம் திகதி இடம்பெற்ற தென்மாகாண சபை நிதியம் மற்றும் கணக்குகள் குழுவின் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டி ருக்கவில்லை. | | ல்லை. பதவியணிக்கு கடமைகளை சாட்டுதல் மாத்திரம் இடம்பெற்றுள்ளது. சம்பளமற்ற சேவைக் காலத்திற்குரிய சம்பளப் படியேற்றங்களை செலுத்துதல் விதிகளுக்கு முரணானது எனின் அந்த சம்பளப்படியேற்றங்களை குறைப்பதற்கும் கூடுதலாக செலுத்தப்பட்ட தொகையொன்று காணப்படும் எனின் அந்தப் பணத்தை மீள அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த உத்தியோகத்தர் சேவையிலிருந்து இராஜிநாமா பெற்று சென்றுள்ளார் | |
| (ஆ) | பிரதான அமைச்சினால் 2019 ஆம் ஆண்டு கிராம உத்தியோகத்தர்களின் இயலளவு அபிவிருத்தி இயலுமை பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலதன செலவினத்தின் கீழ் எழுதுகருவிகளின் கொடுப்பனவாக | அங்கீகரிக்கப்படாத மேலதிக கொடுப்பனவுகளை செலுத்தும் போது உரிய அங்கீகாரத்தினைப் பெற்று கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டும். | கிராம உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 3,142,500 ஆன தொகை தென் மாகாண சபையின் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட | ரூபா 3,142,500 தொகை அங்கீகாரமின்றி பகிர்ந்தளிக்கப் பட்டிருந்ததுடன், 02 விழாக்களுக்கு ரூபா 1,259,163 தொகை |

| | | | | |
|---|---|---|---|---|
| | தென்மாகாண கிராம உத்தியோகத்தர்களுக்காக 2019 மே 24 ஆந்திகதி அங்கீகரிக்கப்பட்ட பணிகளுக்கு மேலும் ரூபா 1,500 படியான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால் சுமார் 2095 கிராம உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3,142,500 ஆன தொகை உரிய அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக குறித்த காசோலையினை கையளிக்கும் வைபவங்கள் 02 நடாத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 1,259,163 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. | | போதிலும், அதற்காக கௌரவ ஆளுநரின் விசேட அங்கீகாரமொன்றினை பெற்றிராமை ஏற்றுக்கொள்ளப்பட்டது எனவும், அதன் பிரகாரம், எதிர்காலத்தில் இவ்வாறான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் எனின், கௌரவ ஆளுநரின் விசேட அங்கீகாரமொன்றினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக பிரதம அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், அரசின் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட பணம் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | ருகுணு அபிவிருத்தி பணியகத்தினால் ரூபா 46,042,006 தொகை செலவிடப்பட்டு அரச காணியொன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ஹிக்கடுவ அபி கட்டிடத்தின் பெறுகை வழிகாட்டி கோவையினை | உரிய முறையில் இரண்டாம் தரப்பினருக்கு கையளிக்கப்பட வேண்டும். | ஹிக்கடுவ அஹிமங்சல செயற்திட்டத்திற்குரியதாக தனியார் கம்பனியொன்றுடன் உடன்படிக்கையின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் இதுவரையிலும் அடையப்பட்டிராமையால் உரித்தினை மீள | சட்டரீதியான நடவடிக்கை எடுக்குமாறு ஹிக்கடுவ பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பின்பற்றாது இரண்டாம் தரப்பினருக்கு கையளிக்கப்பட்டமை மற்றும் தற்போது பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது மூடி வைக்கப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டிற்காக பெற்றுக்கொள்ள வேண்டிய ரூபா 6,800,000 தொகையான குத்தகை பணமும் கிடைத்திருக்கவில்லை. | | சுவீகரித்தலின் கீழ் வழக்கு தொடருமாற ஹிக்கடுவ பிரதேச செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் 2019 அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தன்னார்வ அமைப்புகளுக்காக பிளாஸ்ரிக் கதிரைகள் 16056 எண்ணிக்கையானவை கொள்வனவு செய்வதற்காக ரூபா 15,880,200 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br>(i) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.1 மற்றும் 4.4 ஆம் வழிகாட்டிகளுக்கமையாத வகையில் தென் மாகாணத்தின் 03 மாவட்டங்களக்காக வேறாக | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் செயற்படடாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக கூறுவிலைகள் கோரப்பட்டிருந்ததாகவும், எதிர்காலத்தில் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்பட நடவடிக்கை எடுப்பதாகவும், தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்படடாமை தொடர்பில் எதுவித நடவடிக்கையும் | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்படாமை தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | துண்டாக்கப்பட்டு பெறுகைகள் இடம்பெற்றிருந்தது டன், பிரதம செயலாளரின் 3/2016 ஆம் இலக்க மற்றும் 2016 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய சுற்றறிக்கைக்கு இணங்காத வகையில் பொருட்களுக்காக சந்தைவிலை ஒப்பீட்டு முறைமையின் கீழ் திணைக்களத்தின் பெறுகைகள் குழுவின் அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை விஞ்சி ரூபா 16.5 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதியுடைய இந்த பெறுகை இடம்பெற்றிருந்தது | | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | |
| (ii) | பிளாஸ்டிக் கதிரைகளை கொள்வனவு செய்வதற்காக சந்தை விலை ஒப்பீட்டு முறைமையின் கீழ் வழங்குநரிடம் கூறுவிலைகளை கோரும் போது திட்டவட்டமான அமைப்புக் குறிப்பீடுகளை | திட்டவட்டமான அமைப்புக் குறிப்பீடுகள் குறிப்பிடப்பட்டு கூறுவிலைகள் கோரப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்பட நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்படாமை தொடர்பில் மற்றும் கூடுதலாக செலுத்தப்பட்ட ரூபா 2,819,085 தொகை தொடர்பில் எதுவித |

| | | | | |
|---|---|---|---|---|
| | குறிப்பிடடாது பிளாஸ்டிக் கதிரைகளை உற்பத்தி செய்யும் நிறுவனத்திடமிருந்து மற்றும் பிளாஸ்டிக் கதிரைகளை விற்பனை செய்யும் வியாபார நிலையங்களிலிருந்து கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், பெறுகைக் குழுவிற்கு கிடைத்த ஆகக் குறைந்த கூறுவிலைகள் தொடர்பில் கவனம் செலுத்தாது கூடுதலான விலையில் 16,056 கதிரைகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,819,085 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | | | நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | அதிகாரசபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பிளாஸ்டிக் கதிரையொன்றின் விலை சந்தையில் நிலவும் நேரடியாக | அரசிற்கு ஏற்ட்ட நட்டத்தினை பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டும். | இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற ஆரம்ப விசாரணையின் அறிக்கை அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், பணிப்பாளர் | இதுவரையிலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்பபடடாது, ஒரு உற்பத்தி நிறுவனத்தின கூறுவிலைகளுடன் மொத்த மற்றும் சில்லறை வழங்குநர்களின் கூறுவிலைகளை ஒப்பிடுவதன் மூலம் கதிரைகளை கொள்வனவு செய்ய பெறுகைகள் குழு தீரமானித்தமையால் ரூபா 4,300,988 ஆன நட்டம் அரசிற்கு ஏற்பட்டிருந்தது. | | சபையினால் வழங்கப்படும் அறிவுரைகளின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும், இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | |
| (உ) | தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் பதவிநிலை உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ வாகன கொடுப்பனவகள் மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகள் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | | |
| (i) | திறைசேரி செயலாளரின் PED 1/2015 ஆம் இலக்க மற்றும் 2015 மே | 2015 மே 25 ஆந் திகதிய திறைசேரி செயலாளரின் PED 1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் | இது தொடர்பில் சட்ட உதவியினை பெற்றுக்கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு | அதிகாரசபையின் தலைவரிய் மற்றும் பணிப்பாளர் நாயகத்திடமிரு |

| | | | |
|---|---|---|---|
| 25 ஆந் திகதிய சுற்றிக்கையின் 3.1 மற்றும் 3.2 ஆம் பந்திகளுக்கு இணங்காத வகையில் அதிகாரசபையின் தலைவரால் பயன்படுத்திய உத்தியோகபூர்வ வாகனத்திற்காக 2016 சனவரி முதல் 2019 யூன் மாதம் வரையிலும், மாதத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லையை மிகைத்து ரூபா 1,999,984 கூட்டுத்தொகையான 17,092 லீட்டர் எரிபொருள் மற்றும் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் பயன்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ வாகனத்திற்காக 2016 சனவரி முதல் 2018 செப்தம்பர் மாதம் வரையிலும், மாதத்திற்கு அங்கீகரிக்கப்டப்ட எரிபொருள் எல்லையை | பிரகாரம் செயற்பட வேண்டும். | அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக அறிவுரைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ந்து அரசாங்கத்திற்க அறவிடப்பட வேண்டிய முறையே ரூபா 1,999,984 மற்றும் ரூபா 714,672 ஆன தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மிகைத்து ரூபா 714,672 கூட்டுத்தொகையான 7,256 லீட்டர் எரிபொருள் கட்டளைகள் மூலம் பெற்றுக்கொள்ளப் பட்டிருந்தது. | | | |
| (ii) | மேற்படி சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்திக்கு இணங்காத வகையில் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2018 ஒக்தோபர் முதல் 2019 யூன் வரையிலும், போக்குவரத்து படிகள் மற்றும் எரிபொருள் படிகளாக ரூபா 750,000 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டுள்ள போது அதிகாரசபையின் குழாம் வாகனமொன்றும் பயன்டுத்தப்பட்டிருந்தது. மேலும், எரிபொருள் படிகளுக்கு மற்றும் போக்குவரத்து படிகளுக்கு மேலதிகமாக சாரதி | 2015 மே 25 ஆந் திகதிய திறைசேரி செயலாளரின் PED 1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | இது தொடர்பில் சட்ட உதவியினை பெற்றுக்கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக அறிவுரைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இது தொடர்பில் சட்ட உதவியினை பெற்றுக்கொள் வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்க அனுப்பி வைக்கப்பட்டுள் ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 619,826 மற்றும் எரிபொருளுக்காக ரூபா 400,199 தொகை அதிகாரசபையினா ல் மேலதிகாமாக செலவிடப்பட்டிருந் தது. | | | |
| **11.** | **முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்** | | | |
| | ------------------------------------------------- | | | |
| | வெலிப்பிட்டிய நெச்சுரல் பார்க் எனும் பெயருடைய தனியார் ஒருவருக்குரிய காணியொன்றனை ஏலமிடும் போது ஏலதாரரால் மின்சாரம் மற்றும் நீர் விநியோகித்து காணியை ஏலமிட வேண்டிய போதிலும், அந்த ஏலமிடப்பட்ட காணிக்கு மின்சாரத்தினை பெற்றுக்கொடுப்பதற்காக மீளர்வாண்டின் யூன் 21 ஆந் திகதி கடற்றொழில் அமைச்சினால் ரூபா 1,674,654 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அமைச்சினால் செலுத்தப்பட்ட பணம் உரிய தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். | ஏலமிடப்பட்ட காணிகளுக்கு மின்சாரத்தினை பெற்றுக்கொள்வதற்காக செலவிடப்பட்ட தொகையை அறவிடுதல் மற்றும் அதற்காக அங்கீகாரம் வழங்கியவர்களுக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை ல. | இதுவரையிலும் பணம் அறவிடுவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில் லை. |
| **12.** | **ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்** | | | |
| | ------------------------------------------------------ | | | |
| (அ) | யசோதபுர முன்மாதிரி கிராமத்திற்காக தகவல் தொழில்நுட்ப நிலையமொன்றினை நிர்மாணிக்கும் பொருட்டு | பணியின் காலத்தினை நீடிப்புச் செய்வதுடன் செயலாற்றல் பணியின் காலமும் | உடன்படிக்கையின் பிரகாரம் லெமினேட் டெம்பேட் கண்ணாடிகளினை பொருத்தியிருந்த | தற்போது லெமினேட் டெம்பேட் கண்ணாடிகளி னை |

| | | | |
|---|---|---|---|
| ரூபா 26,924,982 ஆன தொகைக்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பணியினை நிறைவு செய்வதற்கு 2016 திசெம்பர் 23 ஆந் திகதி தனிப்பட்ட ஒப்பந்ததாரரொருவருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 02 மாடிகளைக் கொண்ட கட்டிடத்தினை நடைமுறைச் சாத்தியமாக நிறைவு செய்ய முடியாத 08 நாட்களினுள் பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் பணி நிறைவு செய்தல் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இடம்பெற்றிருக்கவில்லை. செயலாற்றல் பிணையின் காலம் நீடிப்பு செய்யப்படாது பணியின் காலம் 842 நாட்களினால் நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. லெமினேட் டெம்பேட் கண்ணாடிகளினை பொருத்தும் பணிக்காக உரிய பணியை மேற்கொள்ளாது ரூபா 7,144,677 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | நீடிப்புச் செய்யப்பட வேண்டியதுடன் உரிய நியமம் மற்றும் உடன்படிக்கை பெறுமதியின் அடிப்படையில் நிர்மாணங்கள் நிறைவு செய்யப்பட வேண்டும். நிறைவேற்றப்படாத பணிகளை சான்றுபடுத்தல் தொடர்பில் உரிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | போதிலும், நிறைவேற்றப்படாத பணிகளை சான்றுபடுத்தல் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பொருத்தப்பட்டுள்ளன. நிறைவேற்றப்படாத பணிகளை சான்றுபடுத்தல் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) எல்பிட்டிய மக்கள் விளையாட்டுத் திடலினை நிரமாணித்தல் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | வேலை விடய இலக்கம் B – 2 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட தரத்திலான மண் விநியோகிக்கப்பட வேண்டியதுடன், (Approved Quality soil supplying and pilling) விளையாட்டரங்கிற்கு விநியோகிக்கப்பட்ட மண்ணில் இருக்க வேண்டிய கற்களின் ஆகக்கூடிய அளவானது மி.மி. 37.5 ஆகும். எனினும், விநியோகிக்கப்பட்டு பரப்பப்பட்ட மண்ணில் 1 ½ அடி அளவுடைய கற்களும் காணப்பட்டன. அதற்கமைய உரிய தரமற்ற மண் விநியோகிக்கப்பட்டுள்ள போது அது தொடர்பில் கவனத்திற் கொள்ளாது | மதிப்பிடப்பட்டவாறு உரிய தரத்திலான பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நியமத்தின் அடிப்படையிலான மண் விநியோகிக்காது கொடுப்பனவு மேற்கொண்டமை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நியமத்தின் அடிப்படையிலான மண் விநியோகிக்காது கொடுப்பனவு மேற்கொண்டமை தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்குநருக்கு ரூபா 3,354,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பின்னர் விநியோகிக்கப்பட்ட மண்ணில் உள்ள கற்களுக்காக 75 மீட்டர்கள் கன அளவான மண் குறைத்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அது சரியான நடைமுறையல்ல. | | | |
| (ii) | இயந்திரங்கள் மூலம் மண் பரப்புவதற்காக குறைவான கூறுவிலைகள் உள்ள போது, ஊழியர்களை ஈடுபடுத்தி மண் பரப்புவதற்காக கூடுதலான கூறுவிலைகள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமையால் மாகாண சபைக்கு ரூபா 956,535 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | நடைமுறைக்கு சாத்தியமானதாகவும் சிக்கனமாகவும் கூறுவிலைகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன், மாகாண சபைக்கு ஏற்பட்ட நட்டம் அறவிடப்பட வேண்டும். | மாகாண சபைக்கு ஏற்பட்ட நட்டம் அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாகாண சபைக்கு ஏற்பட்ட நட்டம் அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | ஆற்று மணலுக்கு பதிலாக முறையான அங்கீகாரமின்றி கடல் மணல் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்கமைய 200 மீட்டர் மணல் கியூப்களுக்காக 1 மீட்டர் கீயூபிற்கு ரூபா 3,998 படி ரூபா 799,600 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 3 ஆந் திகதிய ருஹுனு பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தினால் இது தொடர்பில் வழங்கப்பட்டிருந்த பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் கடல் மணலை இடுவதற்கு முன்னர் எவ்வித பரிசோதனையும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், அந்த துணிக்கையான மணல் இடப்பட்டமையால் நீண்ட காலமாக நீர் விநியோக கட்டமைப்பு | பரிசோதனையொன்று மற்றும் அங்கீகாரமொன்றில்லாது மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களுக்காக கூடுதலாக செலுத்தப்பட்ட பணம் மீள அறவிடப்பட வேண்டும். இவ்வாறான முறைகேடுகளை குறைப்பதற்காக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.<br><br>ருஹுனு பல்கலைக்கழகத்தின் சிவில் மற்றும் சுற்றாடல் பொறியியல் கற்கைகள் பிரிவின் அறிக்கையொான்றினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், மேலதிக கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு மற்றும் அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ருஹுனு பல்கலைக்கழகத்தின் சிவில் மற்றும் சுற்றாடல் பொறியியல் கற்கைகள் பிரிவின் அறிக்கையொான்றினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், மேலதிக கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு மற்றும் அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புகள் மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 799,600 ஆக மிகைக் கொடுப்பனவை அறவிடுவதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயலற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | | |
| (இ) | போக்குவரத்து மற்றும் சிவில் சேவைகள் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட மாத்தறை கதிர்காமம் புதிய புகையிரத பாதை செயற்திட்டத்தின் ரூபா 35,381,059 தொகையான நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மாத்தறை மாவட்ட செயலகத்தினால் 2014 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்தப்பட்ட பேருவலை பிரதேசத்தின் 03 கால்வாய்களின் புதுப்பித்தல் பணிகள் தொடர்பிலான கண்காணிப்பு மாத்தறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் பொறியியளாலர் மற்றும் திக்வெல்ல பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த நிர்மாணங்கள் தொடர்பில் 2017 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது நிறைவேற்றப்பட்ட பணிகள், உரிய தரத்திற்கு | இந்த செயற்திட்டத்தின் பணிகளை மேற்பார்வை செய்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது தென் மாகாண பிரதி பிரதம செயலாளர் (பொறியியல் சேவைகள்) இனால் மேற்படி விடயம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடாத்தப்பட்ட முறையான ஒழுக்காற்று விசாரணையின் பின்னர் இரு தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்கள் பிரதி பிரதம செயலாளர் (பொறியியல் சேவைகள்) இன் பிரதி பிரதம செயலாளர் (பொறியியல் சேவைகள்) இனால் மேற்படி விடயம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடாத்தப்பட்ட முறையான ஒழுக்காற்று விசாரணையின் பின்னர் இரு தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்கள் பிரதி பிரதம செயலாளர் | பிரதி பிரதம செயலாளர் (பொறியியல் சேவைகள்) இனால் ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்பட்டு பின்னர் இரு தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்கள் குற்றத்திலிருந்து விடுதலையளிக்கப்பட்டுள்ளதுடன், தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் மேலும் விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

நிறைவேற்றப்படாத பணிகள், தவறான அளவீடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் முறையான அங்கீகாரமின்றி நிறைவேற்றப்பட்ட வெளிவாரி மற்றும் மேலதிக வேலைகளுக்காக கொடுப்பனவுகளை பரிந்துரை செய்தல் போன்ற பல்வேறு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களுக்கமைய இந்த செயற்திட்டத்தின் பணிகளை மேற்பார்வை செய்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் விசாரணையொன்று மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதற்காக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளரினால் குறித்த கணக்காய்வு ஐயவினாவின் பிரதியொன்று தென் மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளருக்கு 2018

(பொறியியல் சேவைகள்) இன் 1/2/10/21 ஆம் இலக்க 2020.05.06, 2020.08.10 ஆந் திகதிய கடிதங்களின் மூலம் குற்றத்திலிருந்து விடுதலையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறே, மாத்தறை உதவி ஆணையாளர் அலுவலகத்தின் தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர் (விசேட வகுப்பு) தொடர்பில் தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் மேலும் விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| | மார்ச் 27 ஆந் திகதி அனுப்பப்பட்டுள்ள போதிலும், உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பிலான ஆரம்ப விசாரணைகள் 2019 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஈ) | உள்ளூராட்சி நிறுவனங்களை அபிவிருத்தி செய்யும் துறைவாரியான செயற்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டின் போது நிறைவு செய்யப்பட்ட கட்டுவன பிரதேச சபைக்குரிய பேரூந்து தரிப்பிடத்தினை புதுப்பிக்கும் மதிப்பீட்டின் வேலை விடய இலக்கம் U - 02 இன் கீழான 200x75x80 மில்லி மீட்டர் அளவான கொன்கிறீட் அச்சுக் கற்களுக்கு பதிலாக 222x111x80 மில்லி மீட்டர் அளவான கொன்கிறீட் கற்கள் பதிக்கப்பட்டுள்ள போது அது தொடர்பில் கவனம் செலுத்தாது மற்றும் குறித்த கொன்கிறீட் அச்சுக் கற்களின் சக்தி | மதிப்பீட்டின் பிரகாரம் உரிய நியமத்திற்கமைவான பொருட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் இது தொடர்பில் விரணையொன்றினை மேற்கொண்டு குழு அறிக்கை உள்ளூராட்சி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் இது தொடர்பில் விரணையொன்றினை மேற்கொண்டு குழு அறிக்கை உள்ளூராட்சி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடர்பில் பரிசோதனை அறிக்கையொன்றினை பெற்றுக்கொள்ளாது ரூபாா 2,452,808 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பிலான கணக்காய்வு ஐயவினாவொன்று உள்ள போது அது தொடர்பில் கவனம் செலுத்தாது ஒப்பந்ததாரர்களுக்கு பிடிகாசும் செலுத்தப்பட்டிருந்தது. 2018 சனவரி 22 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட இரசாயன ஆய்வுகூட பரிசோதனைகளுக்கமைய இந்த கொன்கிறீட் அச்சுக்கற்கள் நிமயமத்திற்கு அமையவானதல்ல என உறுதிப்படுத்தப்பட்டது. | | | |
| (உ) | பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாக 2014 ஆம் ஆண்டின் போது மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் 2015 ஆம் ஆண்டு மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் மாத்தறை மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் ரூபா 35,721,029 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட | உரிய தரத்திலான நிர்மாணங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த கட்டிடம் தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றது. | ரூபா 35,721,029 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட தெய்யந்தர ஆரம்ப பாடசாலையை நடாத்திச் செல்ல பொருத்தமான பௌதீக சூழலொன்று இல்லாதிருந்தமையின் அடிப்படையில், இதுவரையிலும் |

| | | | |
|---|---|---|---|
| தெய்யந்தர ஆரம்ப பாடசாலைக்கான கட்டிடங்களை பொறுப்பேற்றல் மாகாண கல்வி உத்தியோகத்தர்களால் நிராகரிக்கப்பட்டமையின் காரணமாக 2019 ஏப்ரல் 10 ஆந் திகதி வரையிலும் இந்த கட்டுமானங்கள் விளைவற்று காணப்பட்டன. | | | பாடசாலையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**13. விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

-----------------------------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய சாலிமவுன்ட் கைத்தொழிற் பேட்டையின் அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்தின் பிரதான மண்டபம் மற்றும் அதனோடு இணைந்த அறைகள் 03 ஒரு வருடத்திற்கு முன்னர் ரூபா 2,899,471 செலவிடப்பட்டு புதுப்பிக்கப்பட்டிருந்த போதிலும், பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களிலிருந்து அதி உச்ச பயன்பாட்டினை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | இந்த நிர்வாகக் கட்டிடத்தின் மற்றும் அண்மிய 03 அறைகள் உள்ளடங்களான வளாகத்தினுள் கைத்தொழில் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிலையமொன்றினை ஆரம்பிப்பதற்காக செயற்திட்ட அறிக்கையொன்றினை தயாரித்து, அதற்கு அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை மற்றும் அந்த அறிக்கையின் பிரகாரம் இந்த கட்டிடங்களை பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. | இதுவரை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 14. பெறுகைகள்

---------------

| | | | |
|---|---|---|---|
| எல்பிட்டிய மாயும்தன்ன விவசாய வலயத்தின் நிலத்தினை தயார்செய்வதற்காக தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் குறித்த பெறுகைகளுக்கு முன்னர் எஸ்கவேட்டர் இயந்திரம் ஒன்று 05 நாட்கள் அந்த வலயத்தினுள் 03 ஏக்கர் பரப்பளவான நிலத்தினை பண்படுத்தும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | பிராந்திய பொறியியலாளர் பதவியில் பதிற்கடமையாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரிடமிருந்து அந்த நட்டத்தினை அறவிடுவதற்கு மற்றும் அவருக்கு எதிராக ஒழுக்காற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுமார் 300 மீட்டர் அளவான பிரதேசத்தினை சுத்தப்படுத்தியிருந்தமை தொடர்பில் பிராந்திய பொறியியளாலர் பதவியில் பதிற்கடமையாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அறிந்திருக்கவில்லை என அறிவித்ததாகவும், இந்த சம்பவம் தொடர்பில் நிறுவன ரீதியான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்ட போதிலும், அது தொடர்பில் எதுவித தவகலையும் பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததாகவும், தகவல்களை மறைத்தமையால் தவறினை மேற்கொண்டுள்ள எல்பிட்டிய பிராந்திய பொறியியலாளர் பதவியில் பதிற்கடமையாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அந்த பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தார். வேறு அந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | எல்பிட்டிய பிராந்திய பொறியியலாளர் பதவியில் பதிற்கடமையாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அந்த பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தார். இது தொடர்பில் இந்த உத்தியோகத்தருக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 15. செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

-------------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| கக்கெனதொர கோழிப் பண்ணையின் விலங்கு உற்பத்தியுடன் தொடர்புடைய பணிகளுக்காக குழாய் கிணறு ஒன்றினை நிர்மாணிப்பதற்கு 2019 ஆம் ஆண்டின் போது மற்றும் 2020 மீளாய்வாண்டின் போது மாகாண குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக ரூபா 1,207,933 தொகை நீர்வழங்கல் சபைக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறித்த செயற்றிட்டத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டு உரிய பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டவாறு துரிதமாக குறித்த செயற்றிட்டத்தின் பணிகளை நிறைவு செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதுவரையிலும் பணிகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்றிட்டத்தின் பணிகளை நிறைவு செய்து குறித்த பணிக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 16. இனங்காணப்பட்ட நட்டங்கள்

--------------------------------------

| | | | |
|---|---|---|---|
| தென்மாகாண சபையின் அமைச்சு. திணைக்களம் மற்றும் அலுவலகங்களுக்கு சொந்தமான தீர்க்கப்படாது காணப்படும் 104 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 14,367,682 ஆன வாகன விபத்துக்கள் தொடர்பில் ஏற்பட்டுள்ள | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாகனங்கள் மற்றும் ஆதனங்களுக்கு ஏற்படும் சேதங்கள் தொடர்பில் பல பணிகள் நிறைவு செய்யப்பட்டள்ளது என்பதும் எஞ்சிய சேதங்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் | வாகன விபத்துகள் தொடர்பில் இழப்புகள் மற்றும் சொத்துக்களுக்கான சேதங்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| சேதங்கள், 15 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 1,459,142 ஆன ஆதனங்களின் சேதங்களின் கூட்டுத்தொகை ரூபா 15,826,824 ஆகும். | | அதற்காக சட்ட ஆலோசனை பின்பற்றபட்டுள்ளதாகவும் தெரிவித்துக்கொள்கின்றேன். | நடவடிக்கை எடுத்து தீர்ப்பனவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**17. பொது வைப்புக் கணக்குகள்**

-------------------------------------

| | | | |
|---|---|---|---|
| 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான பொது வைப்பு மீதிகள் தொடர்பில் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் 07 நிறுவனங்களுக்குரிய தீரக்கப்படாத வைப்பு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 64,704,758 ஆகும். | காலாவதியான வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். | ரூபா 58,309,545 தொகை தொடர்ந்தும் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டியதாக உள்ளது. | ரூபா 58,309,545 தொகை தொடர்ந்தும் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டியதாக உள்ளது. |

**18. நிலுவை ஊழியர் கடன்கள்**

-----------------------------------

| | | | |
|---|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான மாகாண அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,243,111,752 நடைமுறைச் சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த மீதிக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற, ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் மரணமடைந்த, பணி | இந்த கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்யும் பணிகள் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

வெறிதாக்கப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற மற்றும் சேவையிலிருந்து பதவியிறக்கப்பட்ட 918 அரச உத்தியோகத்தர்களிடமிருந்து ஒரு வருடத்திற்கு மேலாக அறவிடப்படாதுள்ள ரூபா 42,950,767 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 19. வெளிப்படையான மோசடிகள்

----------------------------------

தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையினால் குறைப்பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டு நிதிகள் பயன்படுத்தப்பட்டு முயற்சிகளினை ஊக்குவிக்கும் அபிவிருத்தி கடன் முன்மொழிவு முறைமையின் கீழ் 2019 ஆம் ஆண்டின் போது வெளிவாரி தரப்பினர் இருவருக்கு SPEED LOAN கடனாக ரூபா 5,000,000 கூட்டுத்தொகை வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | இந்த கடன் முறைமையை நடைமுறைப்படுத்துவதற்காக தென் | உரிய அங்கீகாரம் மற்றும் பிணைக்காப்பீடு பெற்றுக் | இந்த கடன் முன்மொழிவுத் திட்டத்திற்காக அங்கீகாரம் | இந்த கடன் முன்மொழிவுத் திட்டத்திற்காக அங்கீகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மமாகாண பிரதான செயலாளரின், தென் மாகாண பிரதி பிரதான செயலாளர் (திட்டமிடல்) அல்லது தென் மாகாண பிரதான அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன், கடன் பெறுநர்களிடமிருந்து பிணைகள் பெற்றுக்கொள்ளப்படாது அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் தனிப்பட்ட காணியின் மீதான பிணையின் அடிப்படையில் கடன் பணம் விடுவிக்கப்பட்டிருந்தது. | கொள்ளப்பட்டு கடன் வழங்கப்பட வேண்டும். | வழங்கப்படாமையின் காரணத்தால் அது தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாகவும், இந்த கடன் முறைமையை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் ஆரம்ப விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அதன்போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின் அடிப்படையில் அதற்குரிய பணிப்பாளர் நாயகம் பணி நீக்கத்திற்கு உள்ளாகியுள்ளார். சட்ட நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. | வழங்கப்படாமையின் காரணத்தால் அது தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. உரிய உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு பணி வறிதாக்கப்பட்டுள்ளது. சட்ட நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. |
| (ii) | மாகாண நிதி விதி 83 இன் பிரகாரம் வெளியிடப்பட்ட வெளியிடப்பட்ட பிரதான அமைச்சின் செயலாளரின் நிதி அதிகார சுற்றறிக்கைக்கு இணங்காத வகையில் கடன் பணம் செலுத்துவதற்குரிய | மாகாண நிதி விதி 83 இன் பிரகாரம் வழங்கப்பட்ட நிதி அதிகாரங்கள் சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். | அதன் கீழ் இரு நலனாளிகளுக்கு 15% வட்டியின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள கடன் தொகை ரூபா 5,000,000 என்பதும், 2019.07.29 ஆந் திகதி கடன் தொகை மற்றும் வட்டியான ரூபா 58,995 தொகை முழுமையாக செலுத்தி தீர்க்கப்பட்டுள்ளதுடன், | குறித்த பணிப்பாளர் நாயகம் பணி வறிதாக்கலுக்கு உள்ளாகியுள்ளதுடன், சட்ட நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன. |

கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை அங்கீகரித்தல் மற்றும் சான்றுப்படுத்தல் மற்றும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் ஆகிய அனைத்து பணிகளும் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கடன் பெறுநர்களின் பெயரில் வழங்கப்பட்ட ரூபா 5,000,000 கூட்டுத்தொகையான காசோலைகள் இரண்டினதும் பதிவேடுகள் இரத்துச் செய்யப்பட்டு பணிப்பாளர் நாயகத்தினால் வங்கியில் நேரடியாக பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே கடன் பெறுநர் ஒருவரின் ரூபா 1,557,610 தொகையான கடன் தவணை அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால்

சட்ட நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.

செலுத்தப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் செலுத்தப்பட வேண்டிய கடன் தவணைகளுக்காக பணிப்பாளர் நாயகத்தின் தனிப்பட்ட கணக்கிற்கு உரிய பெறுமதிகளும் மற்றும் திகதியும் குறிப்பிடப்படாத வெற்று காசோலைகள் 06 கையளிக்கப்பட்டிருந்தன.

**20. சொத்துக்கள் முகாமைத்துவம்**

---------------------------------------

**வாகன கைத்தவிர்ப்பு**

---------------------------

| | | | |
|---|---|---|---|
| மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய 08 வாகனங்கள் பயன்படுத்தப்படாது பிரதேச மருந்து பொருள் களஞ்சிய பூமியில் தரித்து வைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றுள் 06 வாகனங்கள் கைதவிர்ப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அவற்றின் வாகனங்களினை மற்றுமொரு நிறுவனத்திற்கு | அரச நிதி சுற்றறிக்கை 02.˙.2015 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த வாகனங்களிடையே LB – 1909 ஆம் இலக்கமுடைய வாகனத்தின் உரித்து வரிசை அமைச்சிற்கு சொந்தமாக உள்ளதுடன், கைத்தவிர்ப்பிற்காக வரிசை அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மாகாண பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்து கையளிக்கப்படும் 52 – 6802, SRI 6818, GE – 8007, 42 SRI 243, QC – 5674, | தொடர்ந்தும் கைத்தவிர்ப்பதற்கு பரிந்துரைக்கப் பட்டுள்ள 04 வாகனங்கள் தொடர்பில் மதிப்பீடு செய்ய மதிப்பீட்டுச் சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்குவதற்கு அல்லது அரச நிதி சுற்றறிக்கை 02.'.2015 இல் ஏற்பாடுகளின் பிரகாரம் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | | JY – 6503, JY 6508 வாகனங்கள் தொடர்பில் கைத்தவிர்ப்பதற்குரிய பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | |
| **21.** | **தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்**<br>------------------------------------------------------------ | | | |
| | 2017 நவம்பர் 07 ஆந் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற கணக்குகள் குழுவின் கட்டளையின் பிரகாரம் தென் மாகாண கல்வி, காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் பதிவு செயலற்றுள்ள வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள பெறுமதி சேர் வரித் தொகையினை உடனடியாக அறவிட்டு அரச வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டிய போதிலும், ஒப்பந்ததாரர்கள் இருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 921,535 ஆன தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தவிர்ப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 921,535 தொகையான வரித் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

கணக்காய்வு நிறுவனத்தின் பெயர்- வடமாகாண சபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக

கணக்காய்வின் அபிப்பிராயம் -

2018 ஆம் ஆண்டிற்கான - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2019 ஆம் ஆண்டிற்கான - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 ஆம் ஆண்டிற்கான - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | **2018 ஆண்டு** | | | |
| 01. | மாகாண நீர்ப்பாசன திணைக்களத்திற்கு உரிய நீண்ட காலத்திலிருந்து சிதைவடைந்து காணப்படுகின்ற 20 வாகனங்களை நீக்குதல் தொடர்பாக 2015 யூலை 10 ஆந் திகதி 02/2015 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றுநிருபத்தின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் 2019 யூன் 28 ஆந் திகதி வரை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றுநிருபத்தின் பிரகாரம் உரிய காலத்திற்குள் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பாவனைக்குட்படுத்த முடியாத 07 வாகனங்களை விற்பதற்கும், 07 வாகனங்களின் உரிமையை பிரதான செயலாளருக்கு மாற்றுவதற்கும், 06 வாகனங்களை திருத்தங்கள் மேற்கொண்டு பாவனைக்குட்படுத்து வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | மேலும் 11 வாகனங்கள் பாவனைக்குட்ப டுத்த ப்படாமல் காணப்படுகின்றன. |
| 02. | மீளாய்வாண்டிற்குள் நிறைவு செய்யப்பட வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 48.2 மில்லியன் பெறுமதியான பாலம்பிட்டி விவசாய பயிற்சி அலகு, விவசாய அறிவுரை அலுவலகம், வட்டக்கச்சி மாவட்ட | உரிய தினத்தில் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. | அனைத்து கட்டிடங்களும் பாவனைக்குட்ப டுத்த ப்படாமல் காணப்படுகின்றன. |

பயிற்சி அலகு மற்றும் மன்னார் வலய கல்வி அலுவலக கட்டிட நிர்மாணப்பணிகள் இதுவரை நிறைவு செய்யப்பட்டிருக்க வில்லை.

## 03. தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள் தொடர்பான அவதானிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் II ஆம் வகுப்பிற்கு முறையற்ற நியமனம் ஒன்று 1999 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மாகாண கணக்கு குழுவினால் நிர்ணயித்த பரிந்துரையின் பிரகாரம் ஏனைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | கணக்கு குழுவின் பரிந்துரையின் பிரகாரம் குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு உரிய அறிக்கை கல்வி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | கல்வி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டதை தவிர, வேறெந்த முன்னேற்றம் ஒன்றும் இல்லை. |
| (ஆ) | பெறுமதிசேர் வரிக்காக பதிவு செய்யப்பட்டதற்கான சான்றிதழொன்றை பெற்றுக் கொள்ளாமல் பிரதேச சபையின் ஒப்பந்தக் காரருக்கு ரூபா 3.16 மில்லியன் பெறுமதியான பெறுமதிசேர் வரி செலுத்தப்பட்டிருந்தது. | மாகாண கணக்கு குழுவினால் நிர்ணயித்த பரிந்துரையின் பிரகாரம் ஏனைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அந்தப் பணத்தின் பகுதியொன்று அறவிடப்பட்டுள்ளது. | ரூபா 670,000 மேலும் அறவிட வேண்டியுள்ளது. |
| (இ) | பத்திரிகை விளம்பரங்களில் ஆட்சேர்ப்பு தகைமைகளை பொய்யாகக் குறிப்பிட்டு 2014 ஆம் ஆண்டிலே யாழ்ப்பாண மாநகர சபையினால் 07 மின்னியல் வல்லுனர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தது. வட மாகாண கணக்கு | மாகாண கணக்கு குழுவின் நிர்ணயத்தின் பிரகாரம் பொய்யான விளம்பரங்களை பிரசுரித்தமைக்கு உரிய அதிகாரிகள் உள்ளடங்கலாக பொறுப்புக் கூற வேண்டிய அனைத்து உத்தியோகத்தர் | இந்த ஆட்சேர்ப்புக்குரிய நேர்முகப் பரீட்சை சபை சரியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பதை வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் குறிப்பிடப்பட்டிருந்தது. | இந்த முறையற்ற ஆட்சேர்ப்பு தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொண்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | குழுவினால் 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதி இது தொடர்பாக பெற்றுத்தரப்பட்ட பரிந்துரையின் பிரகாரம் வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் எடுக்கப்பட்ட மேற்படி நடவடிக்கைகள் இதுவரை கணக்காய்விற்கு கிடைக்கப் பெறவில்லை. | களுக்கும் எதிராக விசாரணையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | | |
| (ஈ) | யாழ்ப்பாண மாநகர சபையின் உதவி முகாமைத்துவ உத்தியோகத்தரினால் 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2.93 மில்லியன் பெறுமதியான நிதி மோசடி தொடர்பாக 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதி இடம்பெற்ற வடமாகாண கணக்கு குழுவின் பரிந்துரையின் பிரகாரம் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாரினால் மேற்கொள்ளப்பட்ட எதிர்கால நடவடிக்கைகள் இதுவரை கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்க வில்லை. | மாகாண கணக்குக் குழுவினால் நிர்ணயித்த பரிந்துரையின் பிரகாரம் ஏனைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்தப் பணத்தை அறவிடுவதற்காக பிரதான செயலாளரினால் அந்த உத்தியோகத்தருக்கு எதிராக மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | வழக்கு தாக்கல் செய்வதற்கு இதுவரையும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| | **2019 ஆண்டு** | | | |
| 04. | வடமாகாண சபையினால் 2011 ஆம் ஆண்டிலே ரூபா 8,500,000 வுக்கு கொள்வனவு செய்யப்பட்ட எம்பியூலன்ஸ் | விசாரணை நடவடிக்கைகளை துரிதமாக நிறைவு செய்து தாபனக் கோவை மற்றும் | முதற்கட்ட ஆரம்ப விசாரணை அறிக்கை முழுமையற்றது. பின்னர் மீண்டும் விசாரணையொன்று | இதுவரை பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வாகனமொன்று 9000 கி.மீ ஓடிய பின்னர் விபத்துக்குள்ளாகியிருந்தது. இந்த வாகனம் திருத்தப்பட வேண்டியதற்கு பதிலாக முறையற்ற வகையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் இன்வென்ட்ரீயிலிருந்து நீக்குவதற்கும் மற்றும் நடைமுறையல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றிலிருந்து அகற்றுவதற்கும் மீளாய்வாண்டிற்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஆரம்பிக்கப்பட்டுள்ள துடன் அது இறுதி கட்டத்தில் காணப்படுகின்றது. | பட்டிருக்கவில்லை. |
| 05. | வடமாகாண மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்காக சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் வருமான அனுமதிப் பத்திரக் கட்டணம் ரூபா 1,499,535 மோசடியாக பெறப்பட்டிருந்தது. | விசாரணை நடவடிக்கைகள் துரிதமாக நிறைவு செய்யப்பட்டு பரிந்துரையை நடைமுறைப் படுத்துவது மற்றும் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பர்டு முறையாக நடைமுறைப்படுத்தப் பட வேண்டும். | இது தொடர்பாக ஆரம்ப விசாரணை அறிக்கை 2021 ஏப்ரல் 08 ஆந் திகதி வடமாகாண போக்குவரத்து திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | அனைத்து பணமும் அறவிடப்பட்டிருந்த போதிலும் உரிய உத்தியோகத்தருக்கு எதிராக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| 06. | வட்டக்கச்சி ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் போது பொய்யான அளவீட்டின் | முழுமைப்படுத்தப் பட்ட வேலைகளுக்காக மாத்திரம் கொடுப்பனவுகள் | இந்தத் தொகையில் அறவிடப்படாது எஞ்சியுள்ள ரூபா 517,378 ஐ அறவிடுவதற்காக | ரூபா 517,378 பணத் தொகையொன்று மேலும் அறவிடப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | அடிப்படையில் ரூபா 718,395 கரைச்சி பிரதேச சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் கூடுதலாக செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | விசாரணையொன்று மேற்கொள்ளப்படுகின்றது. | வேண்டியுள்ளதுடன் அந்த கொடுப்பனைவ மேற்கொண்ட உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| 07. | பெறுமதிசேர் வரி தொடர்பாக வலுவற்ற ஒப்பந்தக்காரருக்கு யாழ்ப்பாண வலய கல்வி அலுவலகத்தினால் பெறுமதி சேர் வரி ரூபா 654,995 செலுத்தப்பட்டது தொடர்பாக 2 ½ வருட காலத்திற்குள் எவ்வித நடவடிக்கையும் மேற்கொண்டிருக்கவில்லை. | உரிய வரியை செலுத்துவதற்கு முன்னர், அதற்காக ஒப்பந்தக்காரர் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளாரா என்பனை உறுதி செய்திருக்க வேண்டியதுடன் பிரச்சினைக்குரிய கொடுப்பனவுகள் அறவிடப்பட வேண்டும். | தடுப்பதற்கான எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்க வில்லை. | இதுவரையும் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்க வில்லை. |
| 08. | மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு 2019 ஏப்ரல் மாதத்திலே ரூபா 4,041,004 வுக்கு ஏல விற்பனை செய்யப்பட்ட தொண்டமனாறு உவர் நீர் தடுப்பு பழைய இரும்புக் கதவுகள் கொள்வனவாளரால் | ஏல விற்பனைப் பொருட்கள் தொடர்பான சரியான மதிப்பீட்டை மேற்கொள்ளாமை, அகற்றப்படாத பொருட்களுக்காக ஒப்பந்த நிபந்தனைகளின் படி நடவடிக்கை மேற்கொள்ளாமை, ஏல விற்பனையில் | தடுப்பதற்கான எவ்வித நடவடிக்கையையும் மேற்கொண்டிருக்க வில்லை. | இது தொடர்பாக எவ்வித விசாரணை யொன்றும் மேற்கொண்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒப்பந்த நிபந்தனைகளின் படி 24 மணித்தியாலத்திற்குள் அப்புறப்படுத்துவதற்கு பதிலாக ஒரு மாத கால தாமதத்தின் பின்னர் அவை அப்புறப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் அந்த கொள்வனவாளருக்கு மேற்குறித்த அறவிடப்பட்ட தொகையில் நூற்றுக்கு 55 சதவீதத்தை மீள வழங்குவதற்கு மாகாண பணிப்பாளர் நடவடிக்கை எடுத்ததனால் ரூபா 2,211,335 நிதி இழப்பொன்று அரசிற்கு ஏற்பட்டிருந்தது. | விற்கப்பட்டதென அறவிடப்பட்ட பணத்தில் மீண்டும் கொள்வனவாளருக்கு பணம் செலுத்தியமை ஆகியன தொடர்பாக முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | | |
| 09. | மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் காணப்பட்ட ரூபா 2,547,786 பெறுமதியான மருந்துகள் காலாவதியாகி இருந்தது. வட மாகாணத்திற்குள் ஒரு வைத்தியசாலையில் மேலதிகமாக காணப்பட்ட மருந்துகளை வேறு வைத்தியசாலைகளுக்கு விநியோகிப்பதற்கு முறைமையொன்று இல்லாமை இதற்கு ஏதுவாக இருந்தது. | மருந்து இருப்பை தரமான மட்டத்தில் பேணிக் கொள்வதற்கு ஒழுங்கு முறைமையொன்று தயாரித்துக் கொள்ளப்பட வேண்டும். | தடுப்பதற்கான எவ்வித நடவடிக்கையையும் மேற்கொண்டிருக்கவில்லை. | மேலும் இவ்வாறான நட்ட இழப்புக்களை தடுப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லையென்பதுடன் இதுவரையும் விசாரணை குழுவொன்றுக்கான பெயரும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |

**2020 ஆண்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2008 யூன் 30 முதல் அமுலுக்கு வரும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட விசேட பதவிகளான மாகாண பொது நிர்வாக கூட்டுறவு மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் பதவிகள் மற்றும் 2013 சனவரி 01 தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட விசேட தர பதவியான பிரதி பிரதம செயலாளர் (திட்டடமிடல்) போன்ற பதவிகளுக்காக விசேட தரஙகளை கொண்டிராத மூன்று உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டு அவர்களுக்கு விசேட தரத்திற்குரிய சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டதால் அத்தரத்திற்கு நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து 2020 திசெம்பர் வரை சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 2,192,191 மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இவ்வாறான முரண்பாடுகள் காலதாமதமின்றி தீர்க்கப்பட வேண்டும். | இதற்கு தேவையான அறிவுரைகளுக்காக அரச வேலைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | இதுவரை இம்முரண்பாடுகள் தீர்க்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | 06 மாகாண திணைக்களங்களில் கடமையாற்றிய பின்னர் கடமைக்கு சமூகமளித்திருக்காத இறந்த, ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் பதவி இடைநிறுத்தப்பட்ட 39 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 2,781,384 கடன் மீதியை அறவீடு செய்வதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை மீதிகள் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | தடுப்பதற்கான எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்க வில்லை. | நிலுவை மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்கு போதுமான நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்க வில்லை. |
| 12. | மாகாண சுகாதாரத் திணைக்களத்தினால் மீளாய்வாண்டிற்குள் 10 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,643,018 மேலதிக நேர கொடுப்பனவு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிகமாக செலுத்தப்பட்டமை தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | இந்தப் பணத்தின் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய பணம் அறவிடப்படுகின்றது. | இரண்டு உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 1,009,275 அறவிடுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| 13. | பூநகரி சுகாதார வைத்திய அதிகாரியினால் 2018 ஏப்ரல் மாதத்தில் அரசாங்கத்திற்கு சொந்தமான ரூபா 9,000,000 பெறுமதியான கெப் வாகனமொன்று சொந்த தேவைக்காக பயணித்த போது விபத்து ஏற்பட்டு முழுமையாக சேதமடைந்திருந்தது. வாகன விபத்து தொடர்பாக 2018 மே மாதம் பூர்வாங்க | விசாரணை அறிக்கையை பெற்றுக் கொண்டு அதற்கு உரிய நடவடிக்கைகளை துரிதமாக நிறைவு செய்தல் வேண்டும். | இறுதி விசாரணை அறிக்கை இதுவரையில் கிடைத்திருக்கவில்லை. | இந்த தொகையை மீள் நிரப்புவதற்கு காப்புறுதி நிறுவனம் மறுத்திருந்ததுடன் உரிய நட்டத்தை பொறுப்பான உத்தியோகத்தரிடம் இருந்து அறிவிடுவதற் |

| | | | | |
|---|---|---|---|---|
| | விசாரணை மேற்கொள்ளப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட மாதிரி குற்றப்பத்திரத்தில் குறிப்பிட்டவாறு அனுமதியின்றி வாகனத்தை பயன்படுத்தியமை, கடமையுடன் தொடர்பற்ற தரப்பினர்களை அழைத்து சென்றமை மற்றும் சட்டத்திற்கு முரணாக வேகமாக வாகனத்தைச் செலுத்தி அரச சொத்திற்கு பாரிய இழப்பு ஏற்படுத்தியமை தொடர்பாக அறிக்கையிடும் திகதி வரை ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | | கு தேவையான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| 14. | யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு செயற்திட்டத்தின் ஊடாக ரூபா 400,280,744 கிரயத்தில் இரணைமடு குளத்திலிருந்து அதிகபடியான நீரை வெளியேற்றுவதற்கு 14 உலோக வான்கதவுகள் மற்றும் 02 மதகுகள் நிறுவப்பட்டன. மதகுகளுக்கு போதியளவு தண்ணீர் திறக்க முடியாததன் காரணமாக அவற்றின் செயற்திறனை மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது. ஆனால் | ஒப்பந்தக்காரரின் பொறுப்பான காலஎல்லை உரிய பரிசீலனைகள் நிறைவேற்றப்படும் வரை நீடிக்க முடியாமைக்கான காரணங்களைத் தேடிப்பார்த்து தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | தடுப்பதற்கான எவ்வித நடவடிக்கையும் மேற்கொண்டிருக்க வில்லை. | இடம்பெற்றுள்ள நட்டத்தை அறவிடுவது தொடர்பான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதனைக் கருத்திற் கொள்ளாமல் உரிய பணிக்கான முழுத்தொகையும் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. பின்னர் போதியளவு நீர் கொள்ளவை பெற்ற பின்னர் கதவுகள் பரீட்சிக்கப்பட்டு தேவையான குறைபாடுகள் மீண்டம் சீர் செய்யப்பட்டிருந்தன. ரூபா 11,389,680 ஆன மீள் சீரமைத்தல் கிரயம் ஒப்பந்தக்காரரால் தாங்கிக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அத்தொகையை மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி நிதியத்திற்கு செலவினமாக கொடுப்பனவாக செலுத்தி முடிப்பதற்கு மாகாண சபை நடவடிக்கை மேற்கொண்டிருந்தது. | | | |
| 15. | மன்னார் நகர சபைக்குரிய 30 கடைகளுக்கு ஏற்பட்ட தீவிபத்து நட்டத்திற்காக வடமாகாண சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டு உள்ளூராட்சித் திணைக்களத்தால் 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட கடனில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 3,584,000 மீதியில் | கடனை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. | ரூபா 3,280,000 நிலுவைக் கடன் தொகையை இதுவரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 304,000 மாத்திரமே மீளாய்வாண்டின் போது தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது | | | |
| 16. | வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் கைதடி அரச முதியோர் இல்ல உணவு விநியோகம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | | |
| (அ) | தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இணங்கப்பட்ட விலையை விட அதிக விலையின் அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததால் மீளாய்வாண்டில் ரூபா 200,070 நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது. | விசாரணை நடவடிக்கை துரிதமாக நிறைவு செய்யப்பட்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | இதுதொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | இப்பெறுகையின் போது வெவ்வேறு கேள்விதாரர்களினால் ஒவ்வொரு பொருட்களிற்கும் குறைந்த விலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் பெறுகைக் குழுவால் கேள்விதாரர்கள் சமர்ப்பித்த விலைகளின் கூட்டுமொத்த பெறுமதி மாத்திரம் கருத்தில் கொள்ளப்பட்டு | விசாரணை நடவடிக்கை துரிதமாக நிறைவு செய்யப்பட்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | இதுதொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | குறைவான விலை சமர்ப்பித்த கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது அரச நிதிக்கு ரூபா 2,655,746 நட்டம் ஏற்பட்டிருந்தது | | | |
| (இ) | கேள்விதாரரால் 08 பொருட்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை மதிப்பீடுகள் சந்தை விலையை விட 46 சதவீதம் முதல் 98 சதவீதம் வரை குறைவாக காணப்பட்டது. இது ஒரு கற்பனையான சூழ்நிலை என்பதால் பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.9.11 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் சம்பந்தப்பட்ட கேள்விதாரரிடம் இது தொடர்பான விளக்கம் பெறப்பட வேண்டியிருந்தது. இருப்பினும் அது தொடர்பாக எதுவும் கருத்தில் கொள்ளப்படாமல் பிரச்சினைக்குரிய விலை மதிப்பீட்டை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு பெறுகை வழங்கப்பட்டது. | விசாரணை நடவடிக்கை துரிதமாக நிறைவு செய்யப்பட்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | இதுதொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 17. | வவுனியா தெற்கு கல்வி வலய அலுவலகத்தின் கீழ் கடமையாற்றுகின்ற 13 ஆசிரியர்கள் தமது பதவியில் நிரந்தரமாக்கப்பட வேண்டிய காலப்பகுதி முடிவடைந்து 4 ஆண்டுகள் தொடக்க் 32 ஆண்டுகள் வரையான காலதாமதம் ஏற்பட்டிருந்த போதிலும் 2013 யூலை 03 ஆந் திகதிய 1817/30 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வட மாகாண அரச சேவை தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை தாபன நடைமுறை மற்றும் ஒழுங்கு விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நிரந்தரமாக்குவற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாமதமின்றி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் | நிரந்தரமாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | இதுவரையும் அவர்கள் நிரந்தரமாக்கப் பட்டிருக்கவில்லை. |
| 18. | 2007 திசெம்பர் 13 ஆந் திகதிய 2007∴20 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் 3.4 (II) ஆம் பந்திக்கு முரணாக 07 வலயக் கல்வி அதிகார பிரதேசங்களில் கடமையாற்றுகின்ற 31 ஆசிரியர்கள் 01 ஆண்டு தொடக்கம் 06 ஆண்டுகள் வரையான காலமாக | சுற்றுநிருப அறிவுரையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இதற்குப் பிறகு இவ்வாறான நிலைமைகள் தொடர்பாக கவனத்தை மேற்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | இதுவரையும் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவர்களது நிரந்தர வதிவிடததிற்கு அருகாமையில் இணைப்புச் செய்யப்பட்டு கடமையாற்றி வருகின்றனர். | | | |
| 19. | 2007 திசெம்பர் 13 ஆந் திகதிய 2007/20 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்திக்கு முரணாக 12 கல்வி வலயங்களில் உள்ள 490 ஆசிரியர்கள் இடமாற்றமின்றி ஒரே பாடசாலைகளில் 8 ஆண்டுகள் தொடக்கம் 32 ஆண்டுகள் வரையான காலமாக கடமையாற்றி வருகின்றனர். | சுற்றுநிருப அறிவுரையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இதற்காக தேவையான அறிவுரைகள் உரிய உத்தியோகத்தருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | இதுவரையும் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| 20. | வவுனியா வடக்கு கல்வி அலுவலகத்தின் இரண்டு உத்தியோகத்தர்கள் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை ரூபா 10,557,045 தொகையான ஆசிரியர்களின் சம்பளத்தை மோசடியான முறையில் பெற்றிருந்ததுடன் மீளாய்வாண்டில் அவ்வாறு மோசடியாக பெறப்பட்ட ஆசிரியர்களின் சம்பளம் ரூபா 11,448,400 ஆக காணப்பட்டது. | நிலுவை மீதி தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | ரூபா 1,557,970 அறவிடப்பட்டதுடன் நிலுவை மீதிக்காக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொண்டு ரூபா 20,447,475 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 21. | வடமாகாண காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு சொந்தமான வவுனியா பிரதேசத்தின் காணிகளுக்காக பெறப்பட்டிருக்க வேண்டிய ரூபா 13,245,047 குத்தகை கட்டணம் 05 வருடங்களுக்கும் 27 வருடங்களுக்கும் இடையிலான பழைமை வாய்ந்த காலமாக காணப்பட்ட போதிலும் 1996 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 96.·.05 ஆம் இலக்க காணி ஆணையாளர் திணைக்களத்தின் சுற்றுநிருபத்தின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சுற்றுநிருப அறிவுரையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இது தொடர்பான தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு உரிய பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | ரூபா 300,000 அறவிடப்பட்டதை தவிர, எந்த முன்னேற்றமொன்றும் காணப்படவில்லை. |
| 22. | 2017 யூலை 04 ஆந் திகதிய 2017/01 ஆம் இலக்க காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றுநிருபத்தின் பிரகாரம், கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலாளர் கோட்டத்தினுள்ள 100 அளவிலான கடைகளை உள்ளடக்கிய வியாபார கடைத்தொகுதி உரிமையாளர்களுடன் ஒப்பந்தமொன்றிற்கு கைச்சாத்திட்டு குத்தகை வருமானங்களை அறவிடுவதற்கு | சுற்றுநிருப அறிவுரையின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொண்டு தாமதமின்றி ஒப்பந்தத்திற்கு உள்ளான உரிய குத்தகை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளுதல். | இதற்காக ஆதன உரிமையாளர்களுக்கு விண்ணப்ப படிவங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்ட போதிலும் அவர்களில் நூற்றுக்கு 54 வீதம் மாத்திரம் விண்ணப்ப படிவம் பூரணப்படுத்தப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தது. | இந்த குத்தகை வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு இதுவரையும் நடவடிக்கை மேற்கொண்டிருக்க வில்லை. |

போதுமான அளவு
நடவடிக்கை
மேற்கொண்டிருக்கவில்லை
ல.

கணக்காய்வு நிறுவனத்தின் பெயர் - மேல் மாகாண சபை

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

2018 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம

2019 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2020 - முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| 1. | 2007 மே 11 ஆந் திகதிய 2007/09 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 05 ஆவது பிரிவின் பிரகாரம் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற ஓய்வூதியகாரர்களுக்கு ஓய்வூதியத்துடன் குறித்துரைத்த வாழ்க்கைச் செலவுப் படி செலுத்தப்படுகின்றமையால் மீண்டும் வாழ்க்கைச் செலவுப் படி செலுத்த முடியாதிருந்த போதும், மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 04 உத்தியோகத்தர்களுக்கு 2010 சனவரி 01 ஆந் திகதி முதல் 2018 சனவரி 31 ஆந் திகதி வரை ரூபா 813,404 வாழ்க்கைச் செலவுப் படியாக செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்படல் வேண்டும். | இந்த உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றுச் சென்றிருந்ததுடன் மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை ஓய்வூதியத்திலிருந்து அறவிடுவதற்கு ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து கருத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மேலதிகமாக செலுத்தப்பட்ட பணம் இதுவரை அறவிடப்பட்டிருக்க வில்லை. ஓய்வூதிய உறுப்புரைக் கோவையின் 12(2) ஆம் பிரிவின் பிரகாரம் அந்த பணம் உரிய உத்தியோகத்தர் களின் ஓய்வூதியத்திலிருந்து அறவிடுவதற்கான இயலுமை தொடர்பாக விசாரித்து 2020 ஆகஸ்ட் 20 ஆந் திகதி ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | இதுவரை பதில் கிடைத்திருக்க வில்லை. |
| 2. | 2012 இன் 04 ஆம் இலக்க மேல் மாகாண காணி அபிவிருத்தி விஞ்ஞாபனத்தின் 04(2) மற்றும் 06(3) ஆம் பிரிவுகளின் பிரகாரம் அரசாங்கத்தின் காணியொன்றை அரசாங்கத்தால் பயன்பாட்டிற்கு எடுப்பதற்காக மாகாண சபையின் இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொள்ளும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை விதிகளின் மூலம் நிர்ணயிக்கப் பட்டிருக்கவில்லை. | நடைமுறை விதிகளின் மூலம் நிர்ணயித்தல் வேண்டும். | மேல் மாகாண காணி கொள்கைகளுக்கான விதிகளை தயாரித்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை வழங்குமாறு மாகாண விவசாய மற்றும் காணி அமைச்சிலிருந்து கோரப்பட்டுள்ளது. | மாகாண ஆலோசனை சபையின் ஆலோசனையின் அடிப்படையில் விதிகள் ஈடுபடுத்த வேண்டியிருந்த போதிலும் தற்போது மேல் மாகாண சபை கலைக்கப்பட்டமையினால் விதிகள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| 3. | அகலவத்த பிரதேச செயலகப் பிரிவிற்குரிய 15 ஏக்கர் 03 றூட் 38.5 பேர்ச் காணியொன்று 2003 பெப்ரவரி 28 ஆந் திகதி முதல் வருடமொன்றிற்கு ரூபா 79,200 தொகையில் தனியார் வாடகையாளருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் வருடாந்த வாடகை அதிகரிப்பு 10 | வருடாந்த வாடகை அதிகரிப்பை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவை வரி மற்றும் தண்டப்பணங்களை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வாடகையாளர் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி ரூபா 200,000 தொகையை செலுத்தியிருந்தார். மிகுதிப் பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சதவீதமாக இருந்த போதும், அந்த அதிகரிப்பிற்குரிய 2003 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 1,252,035 நிலுவை வாடகை மற்றும் தண்டப்பணம் என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | | | |
| 4. | 2010 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட கரதியான கழிவுப்பொருள் தளம் தொடர்பாக தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தால் 2019 மே 08 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆரம்ப அறிக்கையின் பிரகாரம் கழிவுப் பொருள் கொண்டு போடப்படுகின்ற இடத்தில் 20 மீற்றர் முதல் 70 மீற்றருக்கிடையிலான தூரத்தில் அமைந்துள்ள 19 வீடுகளுடன் உள்ள நிலம் மிக ஆபத்தான பிரதேசமாகவும், நிலத்திலிருந்து நச்சுவாயுக்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் காணப்படுவதாகவும் இனங்காணப்பட்டிருந்தது. 2007 இன் 01 ஆம் இலக்க மேல் மாகாண கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபை | மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் 2007 இன் 01 ஆம் இலக்க மேல் மாகாண கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபை விஞ்ஞாபனத்தின் நோக்கங்களுக்கு இணங்கவும் கழிவுப்பொருள் தளத்தை முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ‘‘கழிவுகளிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் செயற்திட்டத்தை மீண்டும் வலுவூட்டுதல்’’ என்ற அடிப்படையில் 2021 செப்தெம்பர் 09 ஆந் திகதி அமைச்சரவை குறிப்பொன்று சமர்ப்பிக்கப்பட்ட போதும் கழிவுகளிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் செயற்திட்டம் அமுல்படுத்தப்படாமல் இருப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்தது. | கழிவுப்பொருள் தளத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகாரம் மீண்டும் பெறப்பட்டிருக்கவில்லை. கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபையின் விஞ்ஞாபனத்தின் நோக்கங்களின் பிரகாரம் கழிவுப் பொருள் முகாமைத்துவம் மேற்கொள்ளாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | விஞ்ஞாபனத்தின் 07 ஆம் பிரிவின் நோக்கங்களுக்கு இணங்க இந்த கழிவுப் பொருள் தளம் முகாமைத்துவம் செய்யப்படாதிருந்ததுடன் தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் (1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23 அ பிரிவின் கீழ் சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சரால் அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டிய நடவடிக்கையாக வெளியிடப்பட்டுள்ள ஆவணத்தின் முதலாவது பகுதியின் 60 ஆவது நியதியின் பிரகாரம்) மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் இது நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. | | | |
| 5. | காலாவதியான மற்றும் கரையான்கள் மற்றும் எலிகளின் பாதிப்புக்களின் காரணமாக 2018 யூலை 20 மற்றும் 21 ஆம் திகதிகளின் போது தோட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளில் அகற்றப்படுகின்ற மருந்து இருப்பின் பெறுமதி ரூபா 1,260,821 ஆகும். | மருந்துகள் காலாவதியாகுவதற்கு முன்னர் தேவையான வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்கான வேலைத்திட்டம் காணப்படல் வேண்டும். | காலாவதியாகுவதற்கு அண்மித்த மருந்துகள் தொடர்பாக உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | மருந்துகள் காலாவதியாகியமை 2021 ஆம் ஆண்டின் போதும் அவதானிக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | 1.978 ஹெக்டேயர் பரப்பளவுடைய மினுவாங்கொட தள வைத்தியசாலை 1954 ஆம் ஆண்டின் போது நோயாளர் சிகிச்சை சேவை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், நிலம் முறையான பிரகாரம் கையேற்கப்பட்டிருக்க வில்லை. | கையளித்தல் உரித்துறுதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காணியை கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற து. | காணி கையேற்கப் பட்டிருக்கவில் லை. |
| 7. | மத்துகம சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தில் 2016 யூன் மாதம் முதல் களஞ்சியப்படுத்தப்பட்டு பாவனைக்கு எடுக்கப்படாத 19 மோட்டார் சைக்கிள்கள் காணப்பட்டது. | விற்றுத் தீர்ப்பதற்கோ அல்லது பயன்படுத்துவதற்கே ா நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 19 மோட்டார் சைக்கிள்களையும் விற்றுத் தீர்ப்பதற்காக 2019 ஆம் ஆண்டின் போது மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. | 19 மோட்டார் சைக்கிள்களும் விற்றுத் தீர்க்கப்பட்டிருக் க வில்லை. |
| 8. | மேல் மாகாண 2010 இன் 06 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய விஞ்ஞாபனத்தின் கீழ் வழங்கப்பட்ட விதிகளில் 5 மற்றும் 6 ஆம் பிரிவுகளின் பிரகாரம் விஞ்ஞாபனத்தை அமுல்படுத்தும் திகதியில் 56 வருடங்களை விஞ்சிய ஊழியருக்கு விதிகளின் (அ) பட்டோலையின் அட்டவணை இலக்கம் 02 இன் பிரகாரம் ஓய்வூதியம் உரித்தாகுவது ஓய்வூதியம் பெற்றுச் | கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய விஞ்ஞாபனத்தின் கீழ் வழங்கப்பட்ட விதிகளின் பிரகாரம் ஓய்வூதியம் செலுத்துதல் வேண்டும். | தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தற்போது கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய விஞ்ஞாபனத்தி ன் பிரகாரம் ஓய்வூதியம் செலுத்தப்படுகி ன்றது |

| | | | | |
|---|---|---|---|---|
| | செல்லுகின்ற வயதில் பெறுகின்ற ஒன்றிணைந்த சம்பளத்தில் 40 சதவீதமான அளவாகும். எனினும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 56 வயதை விஞ்சிய மாகாண கூட்டுறவு ஓய்வூதிய நிதியத்தில் 211 ஊழியர்களுக்கு 40 சதவீதத்தை விட அதிக சதவீதத்திற்குரிய ரூபா 40,898,103 ஓய்வூதியமாக செலுத்தப்பட்டிருந்தது. | | | |
